பெற்றோர்கள் பாடசாலையில் நடைபெறும் நிகழ்வுகள் தொடர்பாக தங்களது உள்ளார்ந்த அபிப்பிராயங்களை பாடசாலை நிருவாகத்துடன் பகிர்ந்து கொள்ளுங்கள். இன்று பாடசாலைகள் பெற்றோர்களின் ஆதரவிலே தான் உயர்ந்து நிற்கின்றன. செல்வாக்குள்ள பாடசாலைகளின் செல்வாக்குக்கு அடிப்படைக் காரணம் விழிப்புணர்வுள்ள பெற்றோர்களும், பழைய மாணவர்களும் தான் என ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

எனவே பெற்றோர்களே உங்களது வகிபாகத்தை உணர்ந்து பாடசாலையையும், வீட்டுச் சூழலையும் மாணவர்களுக்கு பொருத்தமான கற்றல் சூழலுக்கு ஏற்புடைய இடங்களாக மாற்றுங்கள். உங்களது நடத்தைக் கோலங்களில் இருந்துதான் பெரும்பாலான விடயங்களை மாணவர்கள் பெற்றுக் கொள்வதால் முன்மாதிரியாக நீங்கள் நடவுங்கள். அவர்களுக்கு முன் புகைத்தல், மதுபானம் அருந்துதல், அவதூறான வார்த்தைகளைப் பாவித்தல் போன்றவற்றைத் தவிருங்கள். பெருந் தன்மையுடனும், கண்ணியத்துடனும் பழகுங்கள். சிறியன பற்றி பேசாதீர்கள். பிள்ளைகளும் அவ்வாறு பழகுவர். அதனால் பாடசாலைக்கும் மதிப்பு. சமூகத்திற்கும் பெருமை. உங்களுக்கும் சந்தோஷம். ஆசிரியர்களுக்கும் மகிழ்ச்சி. இத்தகையதொரு இனிய பாடசாலை கவின் நிலையை ஏற்படுத்துபவர்கள் பெற்றோர்களே!

மதுபானம் நமக்கு அவசியமா?

கலாநிதி குமாரசாமி நந்தகுமார், ஜே. பி.
ஆசிரியர் கல்வி அதிகாரசபை,
பேரவை உறுப்பினர் கல்வி, பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு

இக் கட்டுரையை நீங்கள் வாசிக்கும் போதோ அல்லது உங்கள் அபிமான வானொலி நிகழ்ச்சிகளை நீங்கள் கேட்கும் நேரத்திலோ இலங்கையில் எங்கேயாவது ஒரு மூலையில் எவராவது ஒருவர், குடி வெறியால் வாகனஞ் செலுத்திய சாரதி ஒருவரால் அகால மரணமடையப்பட்டிருப்பார் அல்லது குடிவெறியால் சிலர் மிருகத்தனமாக சண்டை சச்சரவுகளிலீடுபட்டு படுகாயங்களுக்குட்படுத்தப்பட்டிருப்பார்கள். கடிகாரம் ஒரு முறை அடித்து ஓய்வதற்கிடையில், பலர் மதுவுக்கு அடிமையாகித் தம் வாழ்க்கையைப் பலியாக்கிக் கொண்டிருக்கின்றனர்.

மதுபானம் அருந்துவதாலேயே, இவ்வாறான விபரீத விளைவுகள் ஏற்படுகின்றன. மது சமுதாயத்தினை சீர்குலைப்பதோடு குடும்பங்களையும் குட்டிச் சுவராக்குகிறது. பண்டைய காலந்தொட்டு, அறநெறி தவறுவதற்கும், குடும்பச் சீர்கேட்டிற்கும் மூலகாரணமாக இருந்து வருகிறது. மதுவினால் ஏற்படும் அழிவுகளிலிருந்து மனிதனை மீட்டு நன் மார்க்கத்திற்குக் கொண்டு செல்லவே பல சமயப் பெரியார்களான இந்துப் பெரியார்கள், இயேசு கிறிஸ்து, புத்தமகான், நபிகள் நாயகம் போன்றோர் மதுவினால் ஏற்படும் தீய விளைவுகளைப் பற்றிப் போதித்தார்கள்.

மதுவினால் ஏற்படும் தீய விளைவுகளைப் பற்றிய சில விளக்கங்களை நான் இக்கட்டுரையில் தருகிறேன்.

மதுசாரம் எவ்வகைப்பட்டது?

மதுவத்துடன் சீனியைக் கலந்து, புளிக்கச் செய்வதன் விளைவாக ஏற்படும் இரசாயனப் பொருளே மதுசாரம். "எதனோல்" (எதையில் அற்கோல்) எனும் போதைப் பொருள் மதுபானத்தில் அடங்கியுள்ளது. மதுபானங்களில் அடங்கும் மதுசாரத்தின் விகிதாசாரத்தைப் பொறுத்தே அதன் கடுமை வித்தியாசப்படுகிறது. உதாரணமாக, பியர் (Beer) இல் 2% - 6% மதுசாரம் அடங்கியுள்ளது. வைன் (Wine) இல் 9% - 14% மதுசாரமும், விஸ்கி (Whisky), ஜின் (Gin), ரம் (Rum), வொட்கா (Vodka) எனும் மதுபானங்களில் 40% - 50% வரை மதுசாரமும் அடங்கியுள்ளது. ஆகவே 350 மிலி லீட்டர் பியரில் 18 மிலி லீட்டர் மதுசாரமே அடங்குகிறது. ஆனால் 30 மிலி லீட்டர் விஸ்கியில் 10 மிலி லீட்டர் மதுசாரம் அடங்கியுள்ளது. மதுசாரம், உடலின் முக்கிய உறுப்புகளான ஈரல், மூளை, இருதயம் போன்றவைகளை சிதைக்க வல்லது. மூளை பாதிக்கப்படுவதால் உடலின் தொழிற்பாடுகள் படிப்படியாகக் குறைக்கப்படுகிறது. ஆதலால் மதுசாரம் உடலுக்குக் கெடுதி விளைவிக்கும் பொருளாகவே கணிக்கப்படுகிறது.

மது ஆகாரமோ?

மதுசாரம் உடல் உஷ்ணம் பெறச் செய்வதுடன், ஈரலிலுள்ள ஒட்சிசனுடன் கலக்கப்படுகிறது. அன்றி ஆகாரம் உடலிற்கு ஆற்றும் எவ்வித கிரியைகளையும் மதுசாரம் ஆற்றுவதில்லை. எனவே, அதை ஆகாரமாகக் கொள்ளமுடியாது.

மதுசாரம் உடலை எவ்வாறு பாதிக்கிறது?

மதுசாரம் விரைவில் இரைப்பையை அடைகிறது. அங்கே அது சமிபாடடைவதில்லை. இரைப்பையினதும், குடல்களினதும் சுவர்களினூடாக அது இரத்த நாளங்களை அடைகின்றது. மதுசாரம் மூளையையும், நரம்புகளையும் 3 முதல் 5 நிமிடங்களுக்கிடையில் அடைவதாக வைத்தியப் பரிசோதனைகள் அறிவிக்கின்றன. மதுசாரம், ஈரலை அடைந்தவுடனே அது உடலினின்றும் வெளியேற்றப்படுகின்றது. உடல் மதுசாரத்தை நச்சுப் பொருளாகவே கொள்கிறது.

மதுசாரம் மூளையையே பிரதானமாகத் தாக்குகிறது. அது மூளையைச் சோர்வுறச் செய்வதோடு, குழப்ப நிலையையும் உருவாக்குகிறது. சில சமயங்களில் மயக்க நிலையை ஏற்படுத்தி, மரணம் சம்பவிக்க ஏதுவாகவும் மாற்றுகின்றது. மதுசாரம் மூளையிலுள்ள கலங்களை நிரந்தரமாகவே அழிக்கிறது. அளவுக்கதிகமாக மதுவைப் பருகுவதால் ஞாபக சக்தியையும், பகுத்தறிவையும் இழக்கக் கூடிய வாய்ப்பும் ஏற்படுகிறது. மூளையால் ஆற்றப்படும் சகல தொழிற்பாடுகளையும் மதுசாரம் குறைவடையச் செய்கிறது.

அறிவைக் கட்டுப்படுத்தும் பகுதி

0.01% - 0.3% மதுசாரத்தை உட்கொள்ளுவதால் நடையில் தடுமாற்றம், தெளிவாகப் பேசமுடியாமை, கை நடுக்கம் போன்ற அசௌகரியங்கள் ஏற்படுகின்றன.

சுய உணர்வுடன் யோசித்தலும் மனக் கட்டுப்பாடும்

0.01% - 0.1% விகித அளவைக் கொண்ட மதுசாரத்தினால் மூளையின் இப்பகுதியிலுள்ள தொழிற்பாடுகள் குறைக்கப்படுவதால் மனதை ஒரு நிலைப்படுத்துவதற்கும், மனதைக் கட்டுப்படுத்துவதற்கும் முடியாமல் போகிறது.

பார்வைக் கட்டுப்பாட்டுப் பகுதி

0.2% - 0.3% விகித அளவைக் கொண்ட மதுசாரத்தினால் மூளையின் பார்வைக் கட்டுப்பாட்டுப் பகுதியின் தொழிற்பாடு குன்றுவதால் வர்ணங்கள் தெளிவற்றுத் தெரிதல், தூரப் பார்வை போன்ற குறைபாடுகளும் ஏற்படுகின்றன.

கர்ப்பிணிகளுக்கு மதுசாரம் உகந்ததா?

கர்ப்ப காலங்களில் மதுசாரம் எந்த அளவில் குடித்தாலும் சிசு பாதிக்கப்படுவது உறுதி. அளவுக்கதிகமாக பாவிப்பதால் மந்த புத்தி, வளர்ச்சி குன்றல், கர்ப்பச் சிதைவு போன்ற விளைவுகள் ஏற்படுகின்றன. எனவே, மதுசாரம் அடங்கிய எந்த ஒரு பானத்தையும் கர்ப்பிணிகள் அருந்தக்கூடாதென வைத்தியர்கள் ஆலோசனை கூறுகிறார்கள்.

மதுசாரம் உங்கள் ஆரோக்கியத்தையும் பாதிக்கிறதா?

ஆம், இடைக்கிடை மது அருந்துபவர்களுக்கு நேரடி பாதிப்புகள் ஏற்படாவிடினும், தினந்தோறும் அருந்துபவர்கள் உடல் நிலை நிரந்தரமாகவே பாதிக்கப்படுகிறது. கீழ்க் காணும் நோய்களும் ஏற்படுகிறது.

இருதய நோய்கள்

மதுசாரம் இருதயத்திலுள்ள தசைகளை வீங்கச் செய்கிறது. அதை சுற்றிலும் கொழுப்பு படியப்பட்டு இருதயத்தின் தொழிற்பாட்டிற்கு இடையூறாகிறது. இதனால் பல தரப்பட்ட நோய்களும் ஏற்படுகின்றது.

ஈரல் சிதைவு

மதுசாரம் ஈரலிலுள்ள கலங்களை வீங்கச் செய்வதால், பித்தம் ஈரலிலிருந்து சிறுகுடலிற்கு போக முடியாமல் தடுக்கப்படுகிறது. இதனால் சிரோசிஸ் எனும் பயங்கர நோய் ஏற்படுகிறது. உடலினுள் புகும் மதுசாரத்தை வெளியேற்றுவதற்கு ஈரல் உதவுகிறது. சிரோசிஸ் எனும் நோய் மது அருந்தாதவர்களைவிட, மது அருந்துபவர்களையே எட்டு மடங்கு அதிகமாகத் தாக்குகிறது.

புற்று நோய்

மதுபானத்திலுள்ள மதுசாரம் உடலுக்கு நஞ்சானபடியால் வாய், ஈரல் போன்ற உறுப்புகளில் புற்றுநோய் ஏற்படுகிறது. மேலும், ஒருவரின் ஆயுள் காலத்தை 10-12 வருடத்தால் அது குறைக்கிறது.

மதுபானம் குடும்ப மகிழ்ச்சியை எவ்வாறு பாதிக்கிறது?

மதுபானத்திற்காக குறிப்பிட்ட ஒரு தொகை பணத்தை தவறாது செலவிடுவதால், குடும்பச் செலவுகளுக்கும், குழந்தைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் பணப் பற்றாக்குறை ஏற்படுகிறது. இதனால் குடும்ப நிலவரம் கீழ்மட்டத்திற்கு எடுத்துச் செல்லப்படுகிறது. சண்டை சச்சரவுகள் ஏற்பட்டு குடும்பங்கள் பிரியும் நிலைக்கும் தள்ளப்படுகிறது. இதனால் கணவனோ, மனைவியோ தவறான உறவுகளிலீடுபட்டு "எயிட்ஸ்" எனும் நோய்க்கு ஆளாகிறார்கள்.

இதற்கு நீங்கள் என்ன செய்யலாம்?

மதுபானம் அருந்துபவர்களோ அல்லது அருந்த நினைப்பவர்களோ கீழ் காணும் விடயங்களை அறிந்திருப்பது மிகவும் நல்லது.

(1) மதுசாரம் மூளையைப் பாதிக்கும் ஒரு போதை வஸ்து.

(2) அது உடல் ரீதியாகவும் மனோ ரீதியாகவும் ஒருவரைப் பாதிக்க வல்லது.

(3) மது அருந்துவதற்கு ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரணம் காட்டுகிறார்கள். நீங்கள் காட்டும் காரணம் யாது?

(4) மதுவினால் நன்மையா, தீமையா அதிகம் ஏற்படுகிறது என ஒவ்வொருவரும் ஆராய்ந்து பாருங்கள்.

இச்சிறிய கட்டுரையை வாசித்துவிட்டு மதுவைத் தவிர்க்க நீங்கள் முடிவு செய்வீர்களாயின், உங்களுக்கு மகிழ்ச்சிகரமான குடும்பவாழ்க்கையும், தீர்க்காயுளும் கிடைப்பதற்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

With Best Compliments

from



NAJI AHAMED NASEER & CO.

Dealers in all Kinds of Attar & Incense Powder

**எங்களிடம் பங்களதேஷ், இந்தியா, பாகிஸ்தான் சீனா,
இலங்கை தொப்பி வகைகள், தஸ்பிகள் இஸ்ராம்
செட், அத்தர் வகைகள், சாம்பராணி கட்டி,
சாம்பராணி தூள், ஊது பத்தி போன்றவைகள்
மொத்தமாகவும் சில்லரையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.**

72, 2nd Cross Street, Colombo 11
Tel : 01-438744 Fax : 01-386282

ISMAIL SONS

12, Super Market, Beruwala
Tel : 034-76483

தெய்வத்தமிழே தீந்தமிழே அமுதத்தமிழே என அகிலம் புகழ்தன்மேல்
தெய்வப்புலவன் முதலாக சீரார் நால்வர் ஆழ்வர் தமிழே
தெய்வங்களை நாம் சேவிக்கத்திருந்து மொழிதான் செந்தமிழே
உய்வதற்கான் உபாயமென உற்ற இஸ்லாம் யேசுமதம்
மற்றும் பலவாம் துறையோரும் மகிழ்ந்து ~ வளமார்
சொற்றுதியால் தோத்திரங்கள் துதிசொல்லும்
பெற்ற சிறப்பால் தெய்வங்கள் பெரிதும் விரும்ப
குற்றமிலதாம் தெய்வமொழி தேர்ந்தே பெறுமொழிதான் தமிழாய்த் தெரிகிறதே
உற்ற உயர்வாம் உறுதியினால் உம்பர் உணவாய் உயர் அமுதாம்
தேவாமிர்தம் எனும் பெயரால் தமிழ்ச் சுவையும் பயனும்
ஓவாதுரைத்தும் ஒழியாதே
நாவால் சுவைத்து தாம் நவில்வோமேல்
சாவா மருந்தாம் தரம் தருமே
ஆவா அதனைச் சுவைத்தறிவோம்
தாவாதழிக்க முயன்றார் முன்
சாகாவரம் பெற்றது தமிழே சகம் போய் எங்கும் தழைக்கிறதே

நோயல் கல்லூரி தமிழ் இலக்கிய மன்றம் நடாத்தும்
கலை விழா சிறப்புற என் வாழ்த்துக்கள்

பண்டிதர் சுப்பிரமணியம்

இன்னுமா? இரத்த வெறி...

A. R. றிகாஸ்
மருத்துவ பீடம்
ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகம்
(தமிழ் இலக்கிய மன்றம் 98/99)

அதிகார வெறிகொண்ட அமெரிக்காவின் அடாவடித்தனங்கள் இன்னொரு மைல்கல்லை எட்டியுள்ள பருவம் இது! ஈராக் மீதான ஆக்கிரமிப்புக்கு "பயங்கரவாதத்திற்கெதிரான யுத்தம்" என்று அமெரிக்கா மகுடமிட்டிருப்பதுதான் வேடிக்கை! அன்று தந்தை செய்த அதே முட்டாள் தனத்தைத் தானும் செய்துவிட முட்டி மோதிப் போராடுகிறார் மகன் ஜோர்ஜ் W. புஷ் இவருக்கு டோனி பிளேயர் கூட வால்பிடிப்பு!

அமெரிக்க தாக்குதலால் காயப்பட்ட ஒரு பிஞ்சு உயிர் காயப் போடப்பட்டிருக்கிறது. பக்தாத்தின் இந்தப் பிஞ்சுக் குழந்தை அந்த அமெரிக்காவுக்கு கவி மடல் பாடுகிறது. என்ன ஆச்சரியம்! அந்தக் குழந்தையின் வயதோ வெறும் பத்தரை மாதங்கள், அது கருவுற்ற தேதியிலிருந்து!

அன்புள்ள அமெரிக்காவுக்கு

என்
அறுந்துபோன
ரத்த நாடிகளின்
மை கொண்டு வரைகிறேன்
ஒரு மடல்...

இன்னும்
இந்த சுவாசக்காற்று
என்னுள் வாசம் செய்வது
ஒரு நாள்,
ஒரு மணி,
ஒரு வினாடி,
நானறியேன்...

உன்
ஆளில்லா விமானம்
சீறிப்பாய்ந்ததில்
சிதரிப்போயின
என் கால்கள்

உன்
ராக்கெட் குண்டுகள்
பரீட்சித்துப் பார்த்ததில்
பிரிந்து போயின
என் கைகள்

அதனால்
என் அறுந்துபோன
ரத்த நாடிகளின்
மை கொண்டு வரைகிறேன்
ஒரு மடல்...

அதிகாரம் உனக்கு
ஆளுமையும் உனக்கு
அளவொடு இருக்கும் வரையே
அவை அழகு உனக்கு!

நீ
மன்னராகவென்றால்
நாமெல்லாம்
ஆண்டியாக நினைப்பது
யாரிட்ட நியாயம்?!

அன்றும் இப்படித்தானாம்...
சக்கர நாற்காலியில்
சுற்றிவந்து சீரழிந்த
என் ~
பத்து வயது அக்கா சென்றாள்
அன்றும்
இப்படித்தானாம்...

வீண் முட்டிய மாளிகைகள்
மண்ணரச வீழ்ந்தது கண்டு
கண்ணிரெண்டும் கெட்டவர்கள்
பலநூறு பேராம்...

முக்காட்டு முகங்களையும்
தீக்காயம் சுட்ட
தாக்குதலும்
விட்டுப்போன வடுக்கள்
எத்தனையோவாம்!

என்
அண்ணா உடம்பில்
ரத்தத்துளிகள்
அலங்கோலமாக
கோலமிட்டு
சோகம் சொல்லியதாம்...
அன்றும்
இப்படித்தானாம்
அக்கா சொன்னாள்!

அன்புள்ள அமெரிக்கா,
என்
இறுதி மூச்சு
என்ன சொல்லிப் போகும்?!
உனக்கொரு அறிவுரையா ~ இல்லை
என்
தாய்க்கொரு ஆறுதலா?!
பாவம் ~
அவள் எப்படிப் பொறுப்பாள்
உன் ஏவுகணை சாய்த்துவிட்ட
அடுக்கு மாடியின்
அடித்தளத்தில் அவள்
அவள் மேல் பலமாடி
பாவம் ~
அவளிதை
எப்படித்தான் கேட்பாள்
என்
அன்புள்ள அமெரிக்கா!
உன் அணுவல்லமையை
ஆளில்லா
அந்தார்டிகா சென்று
அளர்ந்து கொள்ளலாமே?!

உன்
ஏவுகணை எட்டு தூரத்தை
சஹாரா சென்று
சரிபார்த்துக் கொள்ளலாமே?!

வேண்டாம் அமெரிக்கா
வேண்டவே வேண்டாம்!

இந்த மத்திய கிழக்கில்
இன்னொரு
புத்தியில்லாத் தாக்கதலா?!

இந்த அரபிக் கடலுக்கு
இன்னொரு
எண்ணெய்க் குளியலா?!

இல்லை!
இன்னும் உன் வெறி
அடக்கு முறைதானென்றால்
எங்களை அடக்கிவிடு
இத்தனை போதும்
நிறுத்திவிடு!

என்
பிஞ்சு நாடியிருந்து
சொட்டு சொட்டாய்விழும்
இந்த இளரத்தம்
போதாது போனால்
பக்தாத்தின்
ஒவ்வொரு உடலிலும்
ஐந்தைந்து லீற்றர்களாய்
ரத்தம் அள்ளி
உன் ~
ஆயுதக் கிடங்கில் ஊற்று

நாளை உன் சந்ததி
அதைக் குடித்து
ஏப்பம் விடட்டும்!

அன்புள்ள அமெரிக்காவுக்கு,
மடல் வரைய
மைதந்த
என் ரத்த நாடி
அறுந்தே
போய் விட்டது...!

With Best Compliments from

சுகித்தாஸ் பியூட்டி சென்றர்

அழகுக் கலை

பல ஆண்டுகளாக அழகுக் கலை நிலையங்களில் செய்யப்படும் பிளீச்சிங், பேசியல் ஆகியவற்றை மாற்றி புது முறையில் விஞ்ஞான ரீதியாகவும் இயற்கை மூலிகை முறைகளைப் பயன்படுத்தியும் புதுமையான முறையில் அனைத்து அழகுக் கலை சிகிற்சைகளையும் கற்றுத் தருகின்றோம்.

மறு, மங்கு, அம்மை தழும்பு நீக்குதல்,
முகத்திலுள்ள சுருக்கங்கள்,
கருவளையங்கள் போன்றவற்றிக்கு
நிரந்தர தீர்வு காணும் வழிமுறை.

(1) Advanced make up
(2) Add & Fashion make up.
(3) 24 hours Testing Virtual skin make up
(4) Anti-Sweat make up

சான்றிதழ் தரப்படும்
நீங்களும் அழகுக் கலை நிலையம் ஆரம்பிப்பதற்கு முழு ஒத்துழைப்பும் வழங்கப்படும்.

(1) ஆரம்ப அழகுக் கலை
(2) மேலதிக (Advanced Eropen Treatments)
(3) Advanced Skin Treatment
(4) உரோமங்கள் பற்றி முழுமையாக அறிவதுடன் முடி உதிர்வதை தடுத்தல், பொடுகு, இளநரை முடியை நன்கு வளரச்செய்தல் என்பவற்றிற்கு தீர்வு

மற்றும் அனைத்து அழகுக் கலைச் சிகிச்சைக்கு தேவையான பலவகைப்பட்ட மூலிகை மருந்துகளை வீட்டிலே செய்யத் தேவையான பொருட்களின் பட்டியலும் செய்முறையும் கற்றுத் தரப்படும்.

தொடர்புகளுக்கு
திருமதி T. சுகித்தா
Tel : 556106

உங்கள் இலக்கு என்ன?

பாலேந்திரன் காண்டீபன்
ஒலிபரப்பாளர், சூரியன் FM
தமிழ் நாடக மன்றத் தலைவர்,
2001/2002

வாழ்க்கையே போர்க்களம்
வாழந்துதான் பார்க்கணும்
போர்க்களம் மாறலாம்
வாழ்க்கைதான் மாறுமா?

போர்க்களத்தின் சத்தங்கள் ஓய்ந்து, சமாதானக் காற்றைச் சுவாசித்துக் கொண்டிருக்கும் காலகட்டமிது. அடுத்து என்ன நடக்கும் என்ற கேள்வியோடு வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இத்தருணத்தில் அனேகர் பெருமூச்சுவிட்டுச் சொல்வது....

"நடந்தவைகள் நடந்தவைகளாவே இருக்கட்டும்!
நடப்பவைகளாவது நல்லனவாக இருக்கட்டும்!"

இப்படியே இருந்து விட்டால், "நம்மை எத்தனை காலம் தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே!" இரு தசாப்த்த யுத்த வரலாற்றில் எத்தனை உயிர்களையும், எத்தனை உடமைகளையும் பரிதாபமாகப் பரிகொடுத்து விட்டோம்? சிந்தித்துப் பாருங்கள்! ஒரு தாய்ப் பிள்ளை போல வீட்டு முற்றத்திலே கூடியிருந்தோமே, இப்போது நாதியற்றவர்களாக அகதிகளாய் நடுத்தெருவில் நிற்கின்றோமே? இனியாது நடப்பவைகள் நம் எண்ணப்படி நடக்க வேண்டாமா?

நாளை நமதே! நாளை நமதே! எனப் பல்வேறு கனவுகளோடு இருந்த இளைஞர்களைப் பரிதாபமாக இழந்து விட்டோம்! இதில் எத்தனை பேர் உங்கள் பிள்ளைகள், சகோதரிகள், நண்பர்கள். சிந்தித்துப் பாருங்கள்!

"முதியோர்கள் யுத்தத்தை பிரகடனம் செய்கிறார்கள். ஆனால் இளைஞர்கள் தான் சண்டை செய்யவும் இறக்கவும் வேண்டும்" என ஹெர்பர்ட் ஹீவர் என்கின்ற தத்துவ ஞானி கூறியது தான் ஞாபகத்துக்கு வருகிறது. இதற்காக முதியவர்களைக் குறை கூறவில்லை. "இளமையிற் கற்கின்றோம் முதுமையில் புரிந்து கொள்கின்றோம்" என்பது எவருக்கும் தெரியும். ஆனால் நாளை உங்களைப் போல உலகாளப் போகும் எங்களைப் பற்றி சிந்தித்துச்

செயற்படுங்கள் என்பது தான் எமது வேண்டுகோள். நிற்க. நடந்தவைகள் இருக்கட்டும்! இனி நடப்பன நல்லனவாகவே நடக்க வேண்டுமல்லவா? சிந்திப்போம்.

ஒரு நாடு நன்றாக இருக்க வேண்டுமானால் அந்நாட்டினுடைய அரச முனை, பேனா முனை, யுத்த முனை மூன்றுமே நீதியாகவும், ஸ்தீரமானதாகவும் இருக்க வேண்டும் என்பார்கள். தற்போதைய பெரும்பான்மை ஆசனங்கள்....

"மிகக் கீழ்த் தரமான வியாபாரத்தைக் கூட யாரும் கற்றுக் கொள்ளாமல் செய்ததில்லை. இருந்த போதும் வியாபாரங்களிலெல்லாம் கடினமான ஒன்றான அரசாங்கப் பொறுப்பை நடத்த ஒவ்வொருவரும் போதுமான தகுதி தங்களுக்கு இருப்பதாக நினைத்துக் கொள்கிறார்கள்" என சாக்ரடீஸ் கூறியதைப் போன்று தான் இருக்கின்றன. அரசியல் சாணக்கியம் தெரியாதவன் அரசியல்வாதியானால், நாடு என்னவாவது? பொறுப்பை ஏற்றவன், பொறுப்பின் மகிமையை அறிந்திருக்க வேண்டும்.

தற்போது அரசியல் என்பது கீழ்த்தரமான ஒன்றாக மாறி விட்டது. பாடசாலை ஆசிரியர்களிலிருந்து பெற்றோர்கள் வரை "உன் இலக்கு எதுவாகவும் இருக்கலாம் ஆனால் அரசியலில் இருக்கக் கூடாது" என அறிவுரை கூறும் அளவிற்கு அரசியல் நிலை உருவாகிவிட்டது. காரணம் அரசியல் சாணாக்கியத்தில் கறை படிந்திருக்கிறது. அரசியலே தெரியாதவர்கள் அரசியல்வாதியானதால் உருவான பலன் இது. உதாரணத்திற்கு பல்கலைக்கழகத் தேர்வில் "Z" புள்ளி முறை என்பதை அறிமுகப்படுத்தினார்கள். இது நாடு பூராவுமுள்ள பல்வேறு மாணவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தியது. கல்வி அமைச்சிலிருந்து, கல்வித்திணைக்களத்திலிருந்து, பாடசாலை ஆசிரியர்கள் வரை "Z" புள்ளி முறை பற்றி பலருக்குத் தெளிவில்லை. யாராவது பாதிக்கப்பட்ட மாணவர்களிடம் கேள்வி கேட்டால் பதிலளிக்க அவர்களுக்கும் தெரியவில்லை. பிறகெதற்கு "Z" புள்ளி முறை என்கின்ற ஒன்று அமுலில் இருக்க வேண்டும்? உரியவர்கள் இதில் அக்கரை செலுத்துவார்களானால் மாணவர் சமூகம் பாதுகாக்கப்படும். இவ்வாறு தான் இன்றைய அரசியல் இருந்து கொண்டிருக்கிறது. மக்களிடமிருந்து வெறும் ஓட்டுக்களுக்காக மட்டுமே, வாக்குறுதிகளை அள்ளி வழங்கிவிடும் அரசியல்வாதிகளும், போலிப் பிரசாரம் தேடும் அரசியல்வாதிகளும் உருவாகி விட்டார்கள்.

நம் நாட்டில், நான்கு சுவர்களுக்குள் தமது வாழ்வினுக்காகப் போராடிக் கொண்டிருக்கும் தழிழ் அரசியல் கைதிகளின் நிலை, இதற்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டு. சகமாணவர்களே! நீங்களும் அரசியல்வாதியாகலாம். புதியதோர் அரசியலை, புனிதமான அரசியலை நம்மவர்க்குப் புரிய வைக்கலாம்.

அடுத்து ஒரு நாட்டினுடைய ஊடகத் துறை தன்னுடைய பங்களிப்பை எவ்வாறு வழங்குகிறது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். பக்கச் சார்பின்றி உண்மைகளை உள்ளபடி எடுத்துரைக்கும் பத்திரிகைகள். வானொலிகள், தொலைக்காட்சிகள் என்பன உலகலாவிய ரீதியில் அன்றிலிருந்து இன்று வரை இருந்து வருவதை அவதானிக்க முடிகிறது. இலங்கையில் யுத்த காலங்களில் கூட, அரச ஊடகங்களைத் தவிர தனியார் ஊடகங்கள் பக்கச் சார்பின்றி உண்மைகளை எடுத்துரைத்ததை யாரும் மறுக்க முடியாது. அரச ஊடகங்கள் அரசுக்குக் கட்டுப்பட வேண்டிய ஒரு சூழ்நிலையில் இருந்தாலும், அரசின் நிலைப்பாடுகளை அறிவதற்கு அரச ஊடகங்கள் தங்கள் பங்களிப்பை வழங்கத் தவறியதில்லை. உண்மைகளை வெளிக்கொணர்ந்தமைக்காக பல்வேறு ஊடகங்களின் ஊடகவியலாளர்கள் பலிக் கடாவாக்கப்பட்டார்கள். உலகறிந்த சர்வதேச ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன், பத்திரிகை ஆசிரியர் அற்புதராஜா உட்பட பல்வேறு நடுநிலை ஊடகவியலாளர்களை ஊடகத்துறை இழக்க நேரிட்டது. இலங்கையின் தனியார் ஊடகங்களைப் பொறுத்தமட்டில் வர்த்தக நோக்கிற்காக பல்வேறு பொழுதுபோக்கு நிகழ்சிகளை வழங்க வேண்டிய நிலைப்பாட்டில் இருந்தாலும், மக்களின் தேவையுணர்ந்து பல்வேறு அரசியல், சமூக நிகழ்ச்சிகள் மூலமும், செய்தியறிக்கைகள் மூலமும் உண்மைகளை எடுத்துரைத்து மக்களிடத்தில் நீங்கா இடம்பிடித்ததை மறுக்க முடியாது. இந்தப் போக்கு இன்னமும் வளர்ச்சியடைய வேண்டுமென்பதே அனைவரதும் எதிர்பார்ப்பு!

ஒரு நாட்டின் தலை விதியையே மாற்றும் சக்தி ஊடகத் துறைக்கு உண்டு என்பதை, யாரும் மறந்து விடக்கூடாது. ஆனால் தற்போது யார் வேண்டுமானாலும் ஊடகவியலாளராகலாம் என்கின்ற ஒரு கருத்து நிலவி வருகிறது. ஒன்று மட்டும் நினைவில் வைத்துக் கொள்ளலாம். யார் வேண்டுமானாலும் ஊடகவியலாளராகலாம்! ஆனால் அனைவராலும் மக்கள் மனதில் நீங்கா இடம் பிடிக்க முடியாது! எந்த ஒரு ஊடகவியலாளர் மக்களுக்காய்ப் பணியாற்றுகிறானோ! அவன் தன் கடமையைச் சரி வரச் செய்தவனாகிறான்!

அடுத்து, யுத்த முனை எவ்வாறு அமையவேண்டுமென்பது கேள்வி? போர்க்களத்திற்குச் செல்லும் தன் மகனை, வெற்றித் திலகமிட்டு வழியனுப்பி வைத்து, போர்க்களத்தில் தன் மகன் நாட்டுக்காக வீரச்சாவை எய்திய செய்தி கேட்டு ஆனந்தக் கண்ணீர் வடிக்கும் தாய்மார் சங்க காலத்திலிருந்து நிகழ்காலம் வரை இருந்து கொண்டுதான் இருக்கிறார்கள்... "ஈன்றபொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்" மார்களாக.... பல நாடுகளில் யுத்த முனை இருந்தாலும், நீதியானதானக இருப்பதில்லை. எந்த ஒரு நாட்டில் யுத்த முனை ஸ்தீரமானதாகவும் நீதியாகவும் இருக்கிறதோ அந்நாட்டு மக்கள்

நிம்மதியாக வாழலாம். கார்கிலில் பனியையும் பொருட்படுத்தாது தாய் நாட்டுக்காகப் போராடி மடியும் இராணுவ வீரர்கள் தான், யாழ் மண்ணில் அமைதிக் காக்கும் படையினராய் வந்து, அட்டகாசம் நடத்தினார்கள். இருதரப்பினர்களுக்கும் வேறுபாடு பலவுளதே?

ஒரு நாட்டின் அரச முனை, ஊடக முனை, யுத்த முனை என்பன இவ்வாறிருக்க, இவை அனைத்தையும் நிர்ணயிக்க வேண்டியவர்களான இளைஞர்களாகிய உங்கள் இலக்கு என்னவாக இருக்கப் போகிறது? கல்வி தான் இளைஞர்களாகிய எமது முதல் இலக்கு! மறுப்பதற்கில்லை. பாடசாலை முதல் பல்கலைக் கழகம் வரை கல்வியே எமது நோக்கம்! ஆனாலும் நாம் உலகில் வாழும் காலத்திலாவது, மக்களுக்கென்று எதையாவது செய்ய வேண்டாமா?

"பிறந்தோம் மடிந்தோம் என்றில்லாமல் மடிந்தும் வாழ்கிறோம்" என எமை இவ்வுலகு வாழ்த்த வேண்டாமா?

போற்றுவார் போற்றட்டும்!
புழுதிவாரித் தூற்றுவார் தூற்றட்டும்!
போ உன் பாதையிலே!

எனப் பாரதிதாசன் சொல்லியதை ஞாபகப்படுத்துவோம். எமக்கு எது நல்லதெனப்படுகிதோ அதை நடைமுறைப்படுத்துவோம். நாங்களும் சிந்திக்கத் தெரிந்தவர்கள் தானே!

"ஈன்றபொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்"மார்களாக.... "மகன் தந்தைக் காற்றும் உதவி இவன் தந்தை எனனோற்றான் கொல்" எனக் கேட்ட தந்தைமார்களாக.... எம் பெற்றோர்கள் திகழட்டும்!

நிற்க, இது அறிவுரையல்ல, வேண்டுகோள் மட்டுமே!

ஞாபகமிருக்கட்டும்! இலக்கில்லாதவன் வாழ்க்கையை இழந்தவனாகிறான்! சத்தியங்கள் ஒரு போதும் பழங்கதையாவதில்லை!

என்னையும் வாழவிடுங்கள்...

நல்லசேகரம்பிள்ளை முதல்வன்
தமிழ் நாடக மன்றத் செயலாளர்,
2002/2003

வசந்தங்கள் என்னை விட்டு
விலகி ஓடிக்
கொண்டேயிருக்கின்றன
வெகு தூரத்தில்...
துரத்திப்பிடிக்க முயன்று
தோற்றுக் கொண்டிருக்கிறேன்
ஒவ்வொரு முறையும்...
இத்தனை
இழப்புக்களுக்கும்
கலங்காத என்னிதயம்
அதிர்கின்றது.
இன்று...
ஓ இதுதான்
அன்பின் அடையாளமா?
புரியாமல் தவிக்கின்றேன்...
ஒருவரின் வாழ்வின்
வசந்தப் பூக்கள் வாட
நானே காரணமெனும் போது
எனக்கே பிடிக்கவில்லை
என்னை...
சீ சமூதாயமே
இனியும் வதைக்காதீர் எம்மை...
தாங்க முடியாத ரணங்களுடன்
என் மனம் பரிதவிக்கின்றது
இன்று

இனியும் முடியாது
என்னால் சகித்துக்கொள்ள...
பொறுமையின் சிகரமாம்
பூமாதேவியே சகிக்காள்
உங்கள் சொற்களை
என்னால் மட்டும்
எப்படி முடியும்?

இத்தனை கீழ்த்தரமான
இனமா எம்மினம் எனும் போது
எனக்குள் கொதிக்கின்றது
குருதி...
இறைவா எனக்கும்
கொஞ்சம் அருள்கொடு
என் மனதினை
நான் மாற்றிக்கொள்ள...
மரணத்தை விட கொடிய வலி
மறத்தலில் உண்டென
உணர்கிறேனின்று...

முடியாது என்னால்
முடியவே முடியாது
என்பது மட்டும் தெரிகிறது
என் மனதுக்கு...
நான் என் செய்வேன்
புரியாமல் தவிக்கின்றேனின்று...

முட்டாள்களும் மூடர்களும் வாழும்
குருட்டு உலகத்தில்
ஏன் தான் பெற்றாளோ
எனை.... என் அன்னை

காலம் விரைவாக
மாறும் போதும்
மனித மனம் மட்டும்
ஏன் தான் இப்படியோ!

வதந்திகள் வார்த்தைகளாய்
மட்டுமல்ல
பெருங் கதைகளாய் மாறும் போது
மன்னிக்க மனமில்லை எனக்கு...

விலங்குகளாய்
இருந்த எம்மை
வீணாய் உணர்ச்சிகளில்
அடிமையாக்கிய
கடவுளின் முன்
மண்டியிடுகிறேன்
கடவுளே
நாளைய மனிதனை
மட்டுமாவது
"மனிதனாய்ப்" படைத்து விடு...
இல்லையேல் இனியும்
நிலைக்காது மனிதயினம்
இப்புவியில்...

கூர்ம்பின் உச்சியில்
குடியிருக்கும் மூடர்களே
வாய்களிருப்பது
நல்லதைப் பேசவென
எப்போது உணர்வீரோ...

ஒருவரின் "மனக்" கறியில் தான்
உங்கள் வயிற்றுப்பசி
அடங்குமெனின்
தாராளமாய் தின்னுங்கள்
நர மாமிசம்...

நானே விருந்தாகிறேன்
உங்கள்
தட்டுக்களில்...
குருதிக் குளியல் தான்
வேண்டுமெனின்
எடுத்துக் கொள்ளுங்கள்
தாராளமாய்...

ஆனால்
ஒரு விண்ணப்பம்
என்னை மட்டும்
வதையுங்கள்
இன்னொருவரையல்ல...
இன்னுமேன்
சிந்தனை உங்கள்
மனங்களில்
வேறு கதை
உதயமாகவில்லையோ...

ஒன்றுமட்டும்
கேட்கிறேன் உங்களை
வணங்கி...
உங்களின் சிந்தனைகளையும்
கற்பனை வளத்தினையும்
விரயமாக்காதீர்
வீணாய்...

வினை விதைத்த நீவீர்
வினையறுப்பீர்
ஒரு நாள்...
அன்று
உங்கள் உள்ளச்சிதறல்களை
ஊரே வேடிக்கை பார்க்கும்...
அப்போதாவது
உணருங்கள் உண்மைதனை....

With the Best Compliments

of

"KATPAHAM"

"ONE STOP SHOP"

For All Kinds of Palmyrah Products

Also Available

✳ Groceries ✳ Handicrafts ✳ Stationaries
✳ Brass & Eversilver Items

Specialists for

✳ Katpaham Gingelly Oil ✳ Katpaham Rice Flour
✳ Wooden String Hopper Mould

"For efficient and Satisfactory Service"

Orders undertaken

Contact :

"Katpaham"
244, Galle Road
Colombo 4, Sri Lanka
Tel : 591411
E-mail : katpaham244@yahoo.com
katpaham244@hotmail.com

With Best Compliments

from



Wellawatta

Nithyakalyani Jewellery

Estd 1978

Manufacturers & Exporters of Gems & Jewellery

230, Galle Road, Colombo 6, Sri Lanka

Tel : 363392, 362427

Fax : 94-1-1-585944, 504933

E-mail : nithkal@slt.lk http: //www.nithkal.com

With the Best Compliments

of



MANARA ENTERPRISES

22, Second Cross Street, Colombo 11
Tel : 421620

With Best Compliments

from

Green Global Services

Custom House Agent

237, 4th Floor, Main Street
Colombo 11, Sri Lanka
Tel : 434716 Fax : 342886

With the Best Compliments

of

DAVID ROBERT

Importers & Dealers in Peanuts

Head Office
214, Gasworks Street
Colombo 11, Sri Lanka
Tel: 434601, 335061, 335024
Fax: 074 717869

Stores & Office
16, Albion Place, Colombo 9
Tel: 692718, Fax: 686303
E-mail: davidgst@sltnet.lk
princy@vinet.lk

With Best Compliments

from

SKYRAY ELECTRONICS

Dealers in Radios, TVs, Electrical Accessories, Gift Items, Kitchen Appliances and Government Suppliers

79, Main Street, P.O. Box 762, Colombo 11. Sri Lanka
Tel: 328059, 448542 Fax: 471967, 503358
Cable: 'SKYRONIC' E-mail: skyro@sltnet.lk

"தமிழன் என்று சொல்லடா - தலை குனிந்து *(?)* நில்லடா"

"தமிழன் என்று செல்லடா - தலை நிமிர்ந்து நில்லடா" இது சிங்கத் தமிழன் பாரதியின் வீர வசனம். இதைக் கேட்காதவர் இவ்வுலகில் இருக்கவே மாட்டார்கள். ஆனால் இதன் உண்மையான அர்த்தம் தெரிந்து, அதனைச் செவ்வனே செயற்படுத்துபவர்கள் என்றால், அவர்களின் எண்ணிக்கையை விரல் விட்டு எண்ணி விடலாம்.

தமிழன் என்றால் யார்? இதன் அர்த்தம் இன்னும் பலருக்குப் புரியவில்லை. சிலர் சைவ மதத்தை தழுவியவர்களே தமிழர்கள் என மத விளக்கம் கொடுக்கிறார்கள். சிலர் தமிழ் பேசுபவர் அனைவருமே தமிழர் என்கிறார்கள். ஒரு சிறுவனிடம் தமிழன் யார் எனக் கேட்டேன். உடனே "நம்ம இளைய தளபதி விஜய்" என்றான், தமிழ் என்றால் "பிரசாந்த்" என்றான். பார்த்தீர்களா சினிமா கற்பித்த பாடத்தை? இதற்கு விஜய், பிரசாந்த், ஆகியோருக்கு ஒழுங்காகத் தமிழ் தெரியுமா? என சிந்தித்தால் சிந்தனையில் கூட ஆங்கில மொழி கலக்கிறது. அப்படி என்றால் தமிழன் என்றால் யார்? எவனொருவன் தமிழைத் தாய் மொழியாகவும், தமிழருக்குரிய பண்பாடு, கலாச்சார, பாரம்பரியங்களையும் உரிய முறையில் பின்பற்றுகிறானோ அவனே தமிழன் ஆவான். அப்படி என்றால் நாம் அனைவரும் தமிழர்களா எனச் சிந்திக்கத் தோன்றுகிறது.

நம் தாய் மொழி தமிழ். எனவே தமிழை வளர்க்க வேண்டுமென்றால் அடிக்கடி தமிழ் பேசினால் போதும் என நினைப்பவர்கள் பலர். "வாழ்க தமிழ் மொழி... வாழிய வாழியவே..." எனப் பாட்டாகத் தமிழைப் போற்றுவதால் தமிழ் வளர்ந்து விடும் என்று நினைப்பவர்கள் இன்னும் சிலர். அதை விடுங்கள். தமிழைத் தமிழினை நன்றாகக் கற்று, தமிழிலே இயற்பெயர், ஆகுபெயர், எச்சங்கள் என தெரிந்து வைத்தும் கூட தமிழினைக் கதைப்பதற்கு வெட்கப்படுகிறார்கள். அண்மையில் ஒரு தமிழ் விழாவொன்றிற்குப் போயிருந்தேன். அங்கே ஒருவர் தமிழருக்கென்ற பாரம்பரிய உடைகளை அணிந்து கொண்டு "*Welcome to...*" என ஆங்கிலத்தில் வரவேற்கிறார். என்ன இவருக்கு தமிழ் புரிவதில்லையா என விசாரித்துப் பார்த்ததில் அவரின் பெயரே ஒரு மறத் தமிழனின் பெயர். சிலர் இருக்கிறார்கள். தமிழ் தெரியாது எனச் சொல்வதையே பெருமையாக நினைப்பார்கள். உதாரணமாக "எனக்குத் *Tamil* தெரியாது" என்பார்கள். ஒருவர் வழியில் நடந்த விபத்தை இவ்வாறு வர்ணிக்கிறார். "நான் *Bus Halt* இல் இருக்கும் போது ஒரு *Car-Auto* மேலே *crash* ஆகி *Driver on the spot out,* இரண்டு *Ladies injured*" இதில் கார் வண்டி, முச்சக்கர வண்டி போன்றவற்றிற்கு தமிழில் தெரியாவிட்டால் பரவாயில்லை. மற்றைய சொற்களைப் பாருங்கள் அதில் எத்தனை ஆங்கில சொற்கள் என்று.

இதைத்தான் ஒரு கவிஞன் கவிதையாக வடித்தான்,

"அம்மாவை Mummy என்றும்
அப்பாவை Daddy என்றும்
சொல்லச் சொன்ன எமது சமூகம்
சும்மா இருந்த நாய்க் குட்டியை
Puppy என்று சொல்லச் சொன்னது..."

இவர்கள் பேசுகின்ற அந்த ஆங்கிலமும், தமிழும் கலந்த பாஷைக்கு ஒரு பெயர் வைத்திருகிறார்கள். அதுதான் *"Tanglish"*. பிறமொழிகளைப் பாவிப்பதில் தவறில்லை. ஏதாவது ஒரு மொழியினை முழுமையாகக் கற்றிருக்க வேண்டும். ஆனால் இங்கு நிலமை தலை கீழ். ஆங்கிலமும் தெரியாது. தமிழும் ஒழுங்காகத் தெரியாது. இதனை நான் எங்கே போய்ச் சொல்வது.

மொழியினில் தவறு கண்ட எனக்கு அடுத்து கலாசசார, பண்பாட்டு விழுமியங்களை சற்று மேலோட்டமாக தட்டிப் பார்க்க வேண்டும் எனத் தோன்றியது. இங்கு பாதையில் எமக்கென்ற பாரம்பரிய கலாச்சார உடையில் எம் இனத்தவர் யாராவது சென்றால் எத்தனை பேர் சிரிக்காமல் இருப்பார்கள்? சுமார் நூற்றைம்பது வருடங்களுக்கு முன் ஆங்கிலேயன் கற்றுத் தந்த *Trouser, Shirt* என்பவற்றை நினைவில் வைத்து எம் பாரம்பரிய உடைகளையே முற்றாக மறந்து விட்டோம். இன்று முழங்காலுக்குக் சற்றுக் கீழே காற்சட்டை அணிவதை ஆண் பெண் இருபாலாரும் *Fashion* எனக் கருதுகிறார்கள். அதற்கு *Three quarter* என பெயரும் வைத்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல. அதில் எலி கடித்தாற் போல் ஓட்டைகளிருக்கும். அதனை வேறு நிறத் துணியினால் தைத்திருப்பார்கள். மேற்சட்டை அணிவார்கள் பத்து பொத்தான்களில் மூன்றினை மூட மாட்டார்கள். இது மட்டுமல்ல அண்மைக் காலத்தில் எம் பெண்களிடம் ஒன்றினைப் பார்த்தேன். அதாவது ஒரு காலில் வளையம் போட்டிருப்பார்கள். இதே போன்று ஒரு காலில் வளையம் போடும் தருணத்தை இரு முறை கண்டிருக்கிறேன். ஒன்று யானைகளைக் கட்டி வைக்கும் போது உபயோகிப்பார்கள். இரண்டாவது மனநல மருத்துவ மனைகளில் மன நலம் குன்றியவர்களை கட்டி வைக்கும் போது ஒரு காலில் வளையம் அணிந்து அதன் மூலம் கட்டி வைப்பார்கள். இத்தகைய விளையாட்டுக்களைச் செய்யும் பெண்களைப் பார்த்து ஒரு கவிஞன் "...கணவன் மட்டும் காணும் அழகை தடைகள் போட்டுக் காட்டுறியே..." எனப் பாட்டாக வடித்திருக்கிறான். எது கலாச்சார உடை, எது காப்பிய உடை, எது கண்ணியமான உடை, எது கருமிய உடை எனத் தெரிந்தும் கூட இவர்கள் இதனை அணிவதுதான வெட்கமாக இருக்கிறது.

பண்பாட்டு நடத்தைகளில் காதல் என்பது ஒரு முக்கிய இடத்தை வகிக்கின்றது. ஆனால் இன்று மனிதர்களிடம் காணப்படுகின்ற காதல், காதலாக அல்லாமல் மோகமாக விருட்சமெடுத்து நிற்கின்றது. பெண்களின் வெறும் தசைகளை மட்டும் பார்த்துக் காதலிக்கும் எம் ஆண்கள் சமுதாயம் மட்டுமல்ல, பெண்கள் ஆண்களின் கையடக்கத் தொலைபேசி, பை நிறையக் காசு, சரளமாக ஆங்கில மொழி பேசக் கூடிய ஆற்றல் என வகையாகப் பிரித்துக் காதலிக்கிறார்கள். இது மட்டுமல்ல பருவ காலத்திற்கேற்ப காதலர்களை மாற்றிக் கொண்டே இருப்பார்கள். பருவ காலம் தினம் தினம் கூட வரும். ஒரு காதலன் தான் காதலிக்கும் பெண்ணுக்கு இப்படிக் கவிதை எழுதுகிறான்...

ப்ரியமே!
என் காதல் காப்பியம்
கதாநாயகியில்லாமல்
தவிக்கிறது...
என்றோ என் காப்பியததின்
கதாநாயகி நீ என
முடிவு செய்துவிட்டேன்...

இக்கவிதையைப் பார்த்துவிட்டு இவனைக் காதலித்தால் அப்பெண். சிறிது காலத்தில் அப்பெண் காதலுக்கும், அவனுக்கும் பிரியாவிடை கொடுத்தாள். அப்போது மீண்டும் ஒரு கவிதை எழுதினான்...

அன்பே! உனக்காய்த்தான்
Vegetarian ஆனேன்...
ஆனால் - உனக்கோ
Nonvegetarian
பிடிக்குமென்று - என்
நண்பனிடம் சென்றுவிட்டாயே....

இதுவே இன்றைய காதலை உதாரணங் காட்டப் போதும். இது மட்டுமல்ல. சில காதலர்கள் இருப்பார்கள். அவர்களைப் பற்றிச் சொல்லவில்லை என்றால் அவர்களின் மரியாதை என்னவாவது. இதோ அவர்களின் ஒரு பிரதிநிதியைப் பற்றி இக்கவிதை சொல்கிறது...

அன்பே!
உன்னைக் கண்டேன்
என்னையே மறந்தேன்
உன் தங்கையைக் கண்டேன்
உன்னையே மறந்தேன்...

எப்படி இருக்கிறது எம் காதலர்களின் செயற்பாடு. அதுமட்டுமல்ல இன்றைய காதலர்கள், காதலென்றால் என்னவென்றே அறியாமல் போகிற போக்கில் காதலிக்கிறார்கள். எனவே காதலின் புனிதம் தெரியாமல் பிதற்றிக் கொண்டிருக்கிறார்கள். இது சர்வ சாதாரணமாகவே இச் சமூகத்தில் நிகழ்கிறது. இதைத்தான் ஒரு புதுக் கவிஞன் பாடினான் இவ்வாறு...

"...அத்தானு சொல்லிடுவா ஆசையைக் காட்டி
அண்ணான்னு சொல்லிடுவா ஆளையும் மாற்றி
பொம்பளைங்களெல்லாம் தீவிரவாதி
ஆம்பளைங்களெல்லாம் அகிம்சாவாதி..."

சில இளம் பெண்களின் நடவடிக்கையால் ஒட்டுமொத்தமான பெண்கள் சமுதாயத்தையே குறை கூறும் அளவுக்கு வந்துவிட்டது. எம் பண்பாடு பெண்களைக் கண்டால் கும்பிடக்கூட முடியும் என மதிப்பளித்துக் கொண்டிருக்கும் போது சில பெண்களின் இவ் நடவடிக்கையால் ஒட்டுமொத்தமான பெண்கள் சமுதாயத்தையே குறை கூறும் நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளது.

எனவே இன்று தமிழனாகப் பிறந்து, எதற்காக வாழ்கிறோம் என்று தெரியாமல் மிருக வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இவ்வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கும் போது, நாம் எப்போதும் மற்றவர்களின் உந்துதலால் படுகுழியிலே வீழ்ந்து கிடப்போம். எனவே எப்போது எமக்கென்றிருக்கும் பாரம்பரியங்களைக் கற்று, தமிழனாக உருவெடுக்கின்றோமோ அப்பொழுதிலிருந்து எம்மை வெறும் படுகுழியில் தள்ள முடியாது. அதுவரை நாம் தமிழன் என்றால் தலை குனிந்து தான் இருக்க வேண்டும்.

உ. லெ. மு. ரெஷா
கணிதப் பிரிவு
உயர்தரம் 2002

பூரணவுதயம்...

விழிகளின் தேடலில்
விடியக் காட்சியாய்
ஒரு பொழுது
நீ அங்கு நின்றாய்...

கண்ணுக்குள் கூசிக்
குதித்திடும்
வண்ணமிடுக்காய்
அழகே நீ
என் முன்னே...
எத்தனை உதயங்களை
சந்தித்த என் கண்கள்
இன்று தான் பிரகாசமடைகின்றன
உன்னால்...

துள்ளும் அழகே
துவண்டு விழுந்தது
என்னுள்ளம்
உன் காலடியில்...
வஞ்சியிவள் வனப்புக்கு முன்னே
வசந்தம் தேடும்
வண்டாய் நான்...

நனவில் மட்டுமல்ல
கனவில் கூட கதாநாயகியாய்
நீ மட்டும் எனக்கு...

"பூரணமானவளே"
உன்னைப் பூஜிக்கிறேன்
தினம் தினம் யாசிக்கிறேன்
அனு தினமும்
எனக்காய் உன்னை...

புலர்கின்ற பொழுதுகளில்
உன் வருகைக்காய்
என் விழிகள் விரிகின்றன
விரைவாக...

உன் ஓரப்பார்வை
பட்டால் போதும்
பாடல்கள்
ஆயிரம் பிறந்திடும்
எனக்குள்...

ப்ரியசகியே
புரிந்திடு என் அன்பை
அறிந்திடு
என் நெஞ்சை...

அன்பே!
நாளைக்கேனும்
உன்னைத்
"தேட வந்தவன்"
என்னைத்
தேடி வருவாயா?

காத்திருப்புகளுடன்!

சு. சித்தார்த்
வர்த்தகப் பிரிவு
உயர்தரம் 2002

With Best Compliments

from

UNION

INTERNATIONAL ACCESSORIES (PVT) LTD.

33-2/10, 2nd Floor, Plaza Complex
Galle Road, Colombo 6, Sri Lanka
Tel : 94-1-555979, 555980, 590420, 595785
Fax : 94-1-594059, 595785
E-mail : unionwtc@slt.lk

கண்ணீருடன் விடைபெறுகிறேன்....

உதிரமெங்கும்
உணர்ச்சிப் பிரவாகம்!
உலகின் உன்னதமான
நேரத்தினைத்
தொலைத்தவனாய் நான்...

அத்தனை
அற்புதமான காலப்பகுதியை
இத்தனை சீக்கிரத்தில்
இழந்த வேதனை
எனக்குள்...

எத்தனை கூத்துக்கள்,
எத்தனை பாட்டுகள்
அத்தனையும்
கனவில் மட்டும்
இப்போது...

நினைக்கிறேன்
எனக்குள்...
அன்னையின் மடியில்
புரண்டிட்ட உணர்வு
என் பாதங்களின்
ஒவ்வொரு தடங்களும்
பாடசாலை வளவில்
பதிக்கப்பட்ட
வேளையில்...
ஆயினும்,
வேளைக்கு
வேலை செய்யும் நான்
ஏனோ என் பழக்கத்தை
மாற்றிக் கொண்டேன்
ஒரு விடயத்தில்...

அத்தனை
சுலபத்தில் நுழைவதில்லை என்கால்கள்
பாடசாலை வளாகத்திலுள்...
எத்தனையோ நாட்கள்
மறிக்கப்பட்ட நான்
மிரட்டப்பட்டேன்
மாணவர் தலைவர்களால்...
இருந்தும்
முதற்பாடம் முடிந்த பின்தான்
என் வருகை
கல்லூரிக்குள்...

தொல்லைகள்
ஆயிரம் செய்வதில்
வல்லவர்கள் நாம்
என்பதை உணர்த்தினோம்
எம் "படையுடன்" பலமுறை
பேரூந்தில்
பாட்டுடன் கூத்தும்
"Foot Board" பயணமும்
சுகமாய் இருந்தது
எனக்கு

பரீட்சை பாகற்காயாய்க்
கசக்கின்ற வேளையில்
மட்டும் புரிந்தது
என் முன்னால்
இருப்பவனின் உதவும் உள்ளம்...

கத்தியின்றி இரத்தமின்றி
இத்தனை பெரிய
நிலத்தில் ஓர்
கூட்டாட்சி எம்மால்...

கூட்டமாய் நாம் வந்தால்
எதிரிகளை
"குறுகிக் குனிய" வைக்கும்
எம் குட்டி *"Gangcy"*
குடியிருந்த கோயிலிது...

பாடங்கள் அனைத்தும்
நடந்திட்ட போதும்
படிக்க வகுப்பில்
இருப்பதில்லை நான்...
வேளைகள் ஒன்றும் தவறாமல்
மன்ற வேலைகள் செய்யச்
சென்றிடுவேன்...

விளம்பரங்கள் சேர்க்க நான்
விரும்பி அலைந்திட்ட
பொழுதுகளில்
சிந்திய வியர்வைத் துளிகள்
ஒவ்வொன்றினாலும்
சிகரத்தில் நான்...

நயம்தரும் பைந்தமிழ் தன்னை
பாரெங்கிலும் பரப்பிடும்
மன்றம் தன்னில்
செயல்களை ஆற்றிடும்
செயலாளராய் இன்று...
இன்று ஒலிக்கும்
இந்தப் பாடசாலை கீதந்தன்னில்
விரும்பித்துடிக்கும்
என் இதய ஒலியின்
சந்தமும் கலந்திடும்...

நாளை இந்தப் பொன்னான
பயணம் முடியும் கணத்தில்
வேத்தியனாய்
வெளியேறுகின்றேன்
கண்ணீருடன்...

ம. அம்சராஜ்
வர்த்தகப் பிரிவு
ஆண்டு 2002

எனக்கும் சிரிப்பு வருகிறது

பாசமுள்ள பெற்றோரை
பாவிகள் என்று சொல்லி
பாதியில் வந்தவருக்கு
பார்ட்டி கொடுத்த - என்னை
நினைக்கையில்...
எனக்கும் சிரிப்பு வருகிறது....

பள்ளிமுதல் - பஸ்வரை
அவள் பின்னால் - மனிதனாய்,
மிருகமாய் மாறிமாறி
ஓடித்திரிந்த காலத்தை
நினைக்கையில்...
எனக்கும் சிரிப்பு வருகிறது....

ஓடுகிற பஸ்ஸில்....
ஓட்டம் பிடித்தேறி
தேடுகிற அவள் விழியை
தெரியாமல் இரசித்த - என்னை
நினைக்கையில்...
எனக்கும் சிரிப்பு வருகிறது....

விடியும் முன்னர் - அவள்
வீட்டருகில் சென்று...
வீட்டிலிருந்து பள்ளிவரை
பத்திரமாய் அனுப்பி வைத்து,
தாமதமாய் பாடசாலை சென்று
ஆசானிடம் அடிவாங்கியதை
நினைக்கையில்....
எனக்கும் சிரிப்பு வருகிறது.....

பேதை அவள் - பேச்சினைக் கேட்க
பேரூந்தில் தினம் தின மேறி
பேசாத அவள் வாயும்
பேசும் எனக் காத்திருந்த - என்னை
நினைக்கையில்.....
எனக்கும் சிரிப்பு வருகிறது.....

பாதி இரவில் - அறையில்
பதுங்கியிருந்து - அவளுக்காய் கவிதை
எழுதிய நாட்களை
நினைக்கையில்....
எனக்கும் சிரிப்பு வருகிறது....

வஞ்சி அவள்
வசிப்பிடம் தேடி
வார்த்தை ஒன்று
அவளிடம் பேசி
பிஞ்சு நெஞ்சில்
காதலை வளர்த்த - என்னை
நினைக்கையில்....
எனக்கும் சிரிப்பு வருகிறது....

மனதிலே காதல் கொண்டு
"மறப்போம்" என்ற சொல்லை
மரியாதையாய் சொன்ன
என்னை நினைக்கையில்....
எனக்கும் சிரிப்பு வருகிறது....

உ. லெ. மு. ரெஷா
கணிதப் பிரிவு
உயர்தரம் 2002

With Best Compliments

from

Ko-Lanka Pure Silk (Pvt) Ltd.

Manufacturers of Cotton
Handloom and Sri Lankan Natural
Silk Products

Pallekelle Estate
Kandy
Tel : 08-420179 / 420269

With Best Compliments

from



Raj Travels and Tours (Pvt) Ltd.

57 B-1, Basement
York Street, Colombo 1
Tel : 075-351274, 381456, 381486
Fax : 387030
E-mail : aircom46@hotmail.com

With Best Compliments

from

Fashion Walk

Dealers in Footwear & Readymade Garments

Fashion Plaza Market
First Floor, 220 1/4
2nd Cross Street, Colombo 11
Tel : 0777-878386, 0777-790804
Fax : 074-617602

With the Best Compliments

of

S. Sivabalasundaram & Co.

191, Central Road
Colombo 12
Tel : 438538

With Best Compliments

from

BOBBY JEWELLERS

ORDERS EXECUTED PROMPTLY
DEALERS IN 22 KT JEWELLERY

159, SEA STREET, COLOMBO 11
Tel : 449682, 458930
Fax : 458931

இளமையும் மென்மையும்

தாம் தோன்றிய காலத்தை வெளிப்படுத்தி, காலத்தை வென்று நிலைப்பன இலக்கியங்கள். தமிழிலக்கியங்கள் என்பன சாகரம் போன்றன. அச்சாரகம் முழுவதும் நிறைந்திருப்பன வெண்முத்துக்கள். இலக்கிய சாகரத்தில் மூழ்குபவன் ஏதாவது ஒரு முத்துடன் திரும்பி வருவது நிச்சயம்.

சங்க கால இலக்கியங்களில் அக்கால ஆபரணங்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளன. அவையனைத்திலும் முக்கியமாக விளங்கிய சில - சிலம்பு, மேகலை, மணி, குண்டலம், வளை என்பனவாம்.

இவற்றின் பெயருடையதாய் எழுந்தன - சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, குண்டலகேசி வளையாபதி எனும் ஐம்பெரும் காப்பியங்கள். உலகப் பொதுமறை திருக்குறளுக்கு ஒப்பாகக்கூடியன மகாபாரதம், இராமாயணம், மநுஸ்மிருதி, பழைய வேதங்கள் ஆகும். இவை அனைத்திலும் சிலப்பதிகாரத்திலும், இராமாயணத்திலும் கூறப்பட்டுள்ள மென்மைத் தன்மையை ஆராய்தல் இலக்கியச் சுவை பயப்பதாய் உள்ளது. காலத்தால் முந்தியது சிலப்பதிகாரம். எனவே முதலில் சிலப்பதிகாரத்தில் இளங்கோவின் வருணனைகளை நோக்குவோம்.

மாதவி சேர்க்கையால் பொருளை இழந்து கோவலன் வறுமையடைந்தான். வருத்தமுற்ற கண்ணகியும் தன்னிடமிருந்த சிலம்புகளைக் கொடுத்து இழந்த பொருளை ஈட்ட விரும்பினாள். அதற்காக மதுரை செல்ல விரும்பிய கோவலன் கண்ணகியையும் உடன் வருமாறு அழைத்தான். அவளும் இசைந்தாள். இரவில் காரிருளில் இருவரும் புறப்பட்டனர். திருமாலின் கோவிலை வணங்கி, புத்த பெருமான் கோவிலையும் இந்திர விகாரங்களையும் கடந்து சென்றனர். காவிரியின் கழிமுகத்துறை வாயிலைக் கடந்து அதன் வடகரையில் உள்ள கவுந்தியடிகளின் பள்ளி அயலிலுள்ள சோலையை அடைந்தனர். இளமையும் மென்மையும் உள்ள கண்ணகி கால்நடை பயணம் செய்து பழகியவள் அல்லள். ஆனால் ஊழ்வினை நெடுவழி செல்ல வைத்தது. எனினும் கோவலனுடன் சேர்ந்து வாழவேண்டும் என்ற நினைவால் கற்களும், முட்களும் நிறைந்த பாதை துன்பத்தைக் கொடுக்கவில்லை. எனினும் இயற்கையாய் அமைந்த மென்மைத் தன்மை அவளை வருத்தியது. நடக்க முடியாது வேதனைப்பட்டாள். களைப்பால் மூச்செறிந்தாள். கோவலனைப் பார்த்து "மதுரை மூதூர் யாது?" என வினவினாள்.

"இருங்கொடி நுசுப்போடு இணைந்தபடி வருந்தி
நறும்பல் கூந்தல் குறும்பலவுயிர்த்து
முதிராக் கிழவியின் முள்ளெயி றிலங்க
மதுரை மூதூர் யாதென வினவ" (நாடுகாண் காதை)

கண்ணகியின் இளமையும், மென்மைத் தன்மையும் இளங்கோ எடுத்துரைக்க எண்ணினார். இளமையைக் குறிக்கும் வகையில், கொடிபோன்ற இடையை உடையவள் என்றும், முதிராத மழலைச் சொல் பேசுபவள் எனவும் முள்போன்ற கூரிய பற்களை உடையவள் எனவும் கூறுகிறார். மென்மையை எடுத்துக் காட்ட "மதுரை மூதூர் யாது?"என வினவுவதைக் கூறுகிறார். கண்ணகி பூம்புகார் நகரை மட்டுமே தெரிந்தவளாக வாழ்ந்தாள். கண்ணகி மட்டுமள்ள அந்நகரிலுள்ள யாவருமே ஊரைவிட்டு வெளியே போனவர்கள் அல்லர். இதனை சிலப்பதிகாரம் பின்வருமாறு கூறுகிறது.

"பதியெழு அறியாப் பழங்குடியினர்" (மங்கல வாழ்த்துப் பாடல்)

எனவே சிறிது தூரம் நடந்தவுடனே "மதுரை யாது?" என வினவும் போது அவளது மென்மைத் தன்மை புலப்படுகிறதல்லவா?

இனி இராமாயணத்தை நோக்குவோம்.

இராமன் தந்தையின் கட்டளையை ஏற்று நாட்டை நீங்கிக் காட்டுக்குப் புறப்பட்டான். சீதையும் இலக்குவணனும் பின்னே வர இராமன் முன்னே சென்றான். மூவரும் அயோத்தி நகரின் வாயிலை விட்டு வெளியே வந்தார்கள். காட்டுக்குப் புறப்பட்ட போதே சீதை உள்ளமும், உடலும் தளர்ந்து விட்டாள். நாட்டிலிருந்து எவ்வளவு தூரத்தில் காடு உள்ளது என்பதை அவள் அறியாள். அரண்மனையில் வாழ்ந்த அவளுக்கு காடு எத்தகையது என்பதும் தெரியாது. அயோத்தியின் மாநகர மதிலோடு கூடிய கோட்டையின் வாசலைக் கடந்து வெளியே வருவதற்கு முன்பாகவே தன் அன்புக் கணவனை நோக்கி "காடு எவ்விடத்தில் உள்ளது"என்று கேட்டு நின்றாள்.

"நீண்ட முடிவேந்தனருள் ஏந்திநிறை செல்வம்
பூண்டதனை நீங்கி நெறி பேதலுறு நாளின்
ஆண்ட நகராரையொடு வாயில்அகலாமுன்
யாண்டையது கானென விசைத்ததும் இசைப்பாய்"

(சுந்தர காண்டம், உருக்காட்டுப் படலம்-செய்யுள் 61)

சீதையின் இளமையையும் மென்மையையும் எடுத்தியம்ப எண்ணினான் கம்பன். சீதை இளமை மிக்கவள். நெய்மையான உடலை உடையவள். மென்மையான உள்ளம் படைத்தவள். நாட்டை அன்றிக் காட்டைக் கண்டறியாதவள். மென்மையான பாதங்கள் நிலத்திலே தழுவ அவள் நெடுவழி நடந்தவலல்லள். எனவே கோட்டை வாயிலைக் கடக்க முன்னமே காடு எவ்விடத்திலே உள்ளது என்று இராமனிடம் வினவுவதன் மூலம் அவளின் மென்மைத் தன்மை புலப்படுகிறது.

கண்ணகி நகரவாயிலைக் கடக்க முன் உடல் தளர்ந்தாள். சீதை கோட்டை வாயிலை கடக்க முன் உடல் தளர்ந்தாள். கண்ணகி நகரத்தில் வாழ்ந்த சாதாரண குடிமகள். ஆனால் சீதை அரண்மனையில் வாழ்ந்த மன்னன் மகள். எனவே இதில் யார் மென்மைத் தன்மை கூடியவர் என்ற விவாதம் தேவையற்றது. இவற்றின் மூலம் அக்காலப் பெண்களின் மென்மைத் தன்மை புலப்படுவதோடு, அக்காலப் பெண்கள் இல்லங்களிலேயே அடைக்கப்பட்டுக் கிடந்தனர் என்பதும் புலப்படுகிறது. இவ்வழக்கம் பாரதி காலம் வரை நீடித்தது. இதனைக் கண்ட பாரதி,

"வீட்டுக்குள்ளே பெண்ணை பூட்டி வைப்போமென்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்"

என்று உணர்ச்சி பொங்கப் பாடி அச்செயலைக் கண்டித்தார். எது எவ்வாறெனினும் சங்க காலம் தொட்டு பெண்களில் நிலவி வருகின்ற இயற்கையான மென்மைத் தன்மை மேலுள்ள இலக்கியங்கள் மூலம் புலப்படுகிறது.

பரமநாதன் டினேஷ் குமார்
உயிரியல் பிரிவு
உயர்தரம் 2002

With Best Compliments

from



MAYFAIR COMMUNICATION

540, Galle Road
Colombo 3

என் கடந்த கால நினைவுகள்...

என் தந்தையின் இழப்பை காணும் வரை நான் அழவில்லை. ஒரு மாலை நேரத்தில் மலையோடு மோதும் அந்த நாள் வந்த போது தான் என் உறவின் மார்பில் சாய்ந்து மாலை மாலையாய் அழுதேன். நுவரெலியா, கண்டி வைத்திய சாலையில் 31 நாட்கள் சுவாசித்த கடைசி மூச்சுக்களுடன் ஓய்வு கொண்டு விடைகோள் விழா முடிந்து, என் தாய் வீடு வந்தாள். பொண்மணி அழுது நின்ற போது என் உதடுகள் ஆறுதல் சொன்னது. இருந்தும் என் இதய ஆழத்திலிருந்து கவிதையொன்று அழுது கொண்டிருந்தது குழந்தை மாதிரி...

பதினேழாண்டு இல்லறத்தில்
முதலாம் முறையென்
மார்பு நனைப்பவனே
அதை நினைத்து

அழாதே கண்மணி
குழந்தையல்ல நீ
குலுங்கியழ
இது
எண்ணித் துணிந்த
கருமம் தாமோ? அல்லவே
பின் ஏன்
உன் கண்களில் உப்பு மழை?
பாகம் பாகமாய் கழிவது வாழ்வு
முதல் பாகம் முற்றும்
இரண்டாம் பாகம் எழுது

சிந்திச் சிதறும் உன்
கண்ணீர்த்தாரை
துக்கமா? சந்தோஷமா?
கரு மணியிற் பாவாய்
உன் கண்ணீர் துடைப்பேன்
என் கண்ணில் நீர் மல்க.
அடைவேன் தந்தையின் இலக்கை

M. L. M. ரின்ஸி
வர்த்தகப் பிரிவு
உயர்தரம் 2003

With Best Compliments

from

SUBAANI COMM

Self Dialing Telephone Calls (I.D.D. & Iocal), Fax
Photocopy Services, Binding, Laminating
Internet, E-mail & Type Settings

27, Lawson Street, Nuwara-Eliya
Fax / Phone : 0094-52-35469

என் மனம் புகுந்தவளே!

அந்தி பூத்த செந்தாமரை போல்
என்றும் பூக்கும் புன்னகையில்
கொன்றுவிட்டாய் என் மனதை

உன்னைக் காணாத நாட்களிலெல்லாம்
நெஞ்சம் முட்களாகக் குத்துதடி
உன்னைக் காண்கின்ற நாட்களிலெல்லாம்
நெஞ்சம் பூக்களாகப் பூக்குதடி

உன் சிற்றுடம்பைக் கண்டதுமே
என் கட்டுடம்பு களைந்ததடி
உன் கயல் விழிப் பார்வையிலே
என் நிழல் மனம் நிலைத்ததடி

தொலைபேசி மணியோசை கேட்டிடவே
மணி பார்ப்பேன் மணிக்கணக்காய்
மணியோசை கேட்கும் வேலைவரை
என் மீசை துடிக்கும்
என் ஆசைப் பெண்ணே!

என் மனம் என்ன
பாலைவன ரோஜாவா
உன் வார்த்தைத் துளிகள் பொழிய மறுப்பதற்கு
உன் மௌன மேகத்தை கலைத்துவிட்டு
வார்த்தை மழையைப் பொழியவிடு
ஒரு மனித ரோஜாவை வாட விடாதே

நீ
விட்டுவிட்டுப் பார்க்கும் பார்வையிலே
மனப் புத்தி கெட்டு தவிக்குது வியர்வையிலே
நான்
மெல்ல மெல்ல நுழைந்தேன் காதல் போர்வையிலே
இனி வாழ்வில்
நீதான் என் உயிரே!

ஸ்ரீதரன் கஜன்
வர்த்தகப் பிரிவு
உயர்தரம் 2003

With Best Compliments

from

SIVA ENTERPRIZE

Welcome to Nuwara Eliya

Welcome to Siva Enterprize

Leading Estate Suppliers
General Hardware Merchants

Block CI - Siva Complex,
Lawson Street, Nuwara-Eliya
Tel : 052-22109, 052-22941

சம்மதம் தருவாயா?

ஓரப்பார்வையாலே இதயம்
ஈரப்போர்வையானதடி
மௌனச் சிரிப்பு என்னை
பாவை விரும்பிச் சென்றதடி

பால் போன்ற கன்னமும்
தோளின் நிற வண்ணமும் - உன்
கால் போன இடமெல்லாம் - என்
காலை ஈர்த்து சென்றதடி

மெல்ல நடையழகிலும்
செல்ல உடையழகிலும்
கருத்த சடையழகிலும்
மனம் உன் விடையறிய தயங்குதடி

கொஞ்சி மொழி கேட்டிடவும்
பிஞ்சு மனம் அறிந்திடவும்
வஞ்சிக்கொடி நீ விரும்பிடவும்
நெஞ்சு இச்சை கொண்டு துடித்ததடி

ஆனால், பெண்ணே நீ
சொற்களை ஒழித்துக் கொண்டு வெறும்
பற்களை மட்டும் காட்டினாய் - நெஞ்சில்
முற்களால் நீ குத்தாமல் - நாணற்
புற்களாய் முளைத்து விடு

என் கட்டான மனதிலே
மொட்டாகப் பூத்தாய் சட்டென்று காய்த்தாய் - இன்று
சிட்டாகப் பறந்தாயே - தினம்
சொட்டுசொட்டாய் மனம் பறித்தாயே

அன்று என்னுள் மாற்றம் தந்தாய்
இன்று என்னை ஏமாற்றிச் சென்றாய் - நீ
திரும்பிப் பார்க்கும் போதெல்லாம் நான்
திருப்தி கொண்டேன் என் மனதை
நீ உன் தீர்ப்பைத் திருத்தும் வரை நான்
திருந்த மாட்டேன்
திருட்டுப் பெண்ணே

சி. விதூஷன்
வர்த்தகப் பிரிவு
உயர்தரம் 2003

With Best Compliments

from

உங்கள் இல்லங்களில் நடைபெறுகின்ற திருமணம்,
பிறந்த தின விழா, பூப்புனித நீராட்டு விழா மற்றும்
அனைத்து வைபவங்களிலும் சிறந்த ரக சிற்றுண்டி மற்றும்
ஆகார வகைகளைப் பரிமாறிக் கொள்ள இன்றே நாடுங்கள்

SARASWATHIE LODGE

191, Galle Road, Bambalapitiya, Colombo 4
Tel : 581913

காதல் வரம்

உன் அழகினில் என் மனம் பறித்து,
பார்வையிலே உயிர் பறித்து,
அலையவிட்டாய் பதை பதைத்து.

உன் கண் என்ன கவிக் களஞ்சியமோ,
கண்ணாலே கவி பேசி என்னை,
கவி எழுத வைத்துவிட்டாய்.

உன் சின்ன நடை அழகை என் கண்ணோரம் காட்டிவிட்டு
எங்கே மறைந்து விட்டாய் இன்னுமுனைக் காணவில்லை
தெருவோரம் பார்த்திருந்தேன் என் நடைதனையே மறந்துவிட்டேன்.

வெள்ளி தோறும் கோவிலுக்கு இடையறாது செல்கிறாய்,
உனைத் தெய்வமென நான் நினைத்து,
வருகின்றேன் உன் வரம் தேடி.

உன் கண் ஜாலம் மறைத்துவிட்டு,
காதலின் மந்திரத்தை
நீ உன் வாயால் சொல்வாயா.

ந. சதீஸ்வரன்
வர்த்தகப்பிரிவு
உயர்தரம் 2003

With Best Compliments

from

Lepoz

Exclusive Textiles & Garments for Him & Her
and Dealers for Handloom Products

702, Galle Road, Colombo 3
Tel/Fax : 599626

நிழல் தேடும் நிஜம்

ஓ என்னவளே
உன் கால் பட்ட
கடல் நீரும்
எனக்கு உவப்பாக
இருக்கவில்லை!
அது என் இதயம்
வரை இனிக்கிறது!

அதோ மேற்கு வானில்
தெறியும் சூரியன்
கூட உன்னைப்
பார்த்து சிவக்கின்றான்!
உன் மேனி
பட்ட தென்றல்
எனக்குக் கோடி
பெறும்!

உன் காலடி பட்ட
மண் எனக்குத் தந்த வரம்!

உன் கண்கள்
என்னை மீட்டும் சுரம்!
உன் சந்தன முகம்
சிந்திய வியர்வைத் துளி
என் ஆத்மா
வரை மணக்கிறது.

உன் கண்கள் பேசும்
கவிதைகளை வரைய
வார்த்தைக்கு
வடிவம் இல்லை.

நீ சுவாசித்து
விடும் மூச்சுக்காற்றை
சுவாசித்த என்
நாசித்துவாரத்தின்
அத்தனை மயிர்க்
கலங்களும்
சிலிர்க்கின்றன

உன் ஒவ்வொரு
சிரிப்புக்கும்
என் இதயத்தில்
மின்னல் வெட்டி
ஆத்மாவில்
மழை பொழிகின்றது.

உன் புருவத்தின் கூர்மை
என் இதயத்தில்
ஆழமாய்ப் பாய்கின்றது
கண்ணே!

உன் மூக்கு நுனியின்
பருவச் செழிப்பில்
நான் என் இதயத்தில்
பயிர் செய்கின்றேன்!

உன் மொழி கேட்டால்
என் இதயத்தில்
வலி மறந்து
வழி பிறக்கும்!

பெண்ணே
நீ குழி பறித்தால்
என் விதி பெயர்ந்து
பொலிவிழக்கும்.

T. J. அஸ்லம்
வர்த்தகப் பிரிவு
உயர்தரம் 2003

With Best Compliments

from

A. T. A. (INTERNATIONAL) LIMITED

Representative in Sri Lanka for

ELE International

ELE International Ltd. - UK

Suppliers of

Material Testing Equipment
* Soil
* Concrete
* Cement
* Asphalt

Environmental Instrumentation
* Hydro Meteorology
* Water
* Agronomics

19/3 A, Swarna Road, Colombo 6, Sri Lanka
Tel : 94-1-592523, 590724 Fax : 94-1-500284
E-mail : ataintl@cga.lk Web Site : www.ele.com

கல்வியே நம் எதிர்காலத்தை நிர்ணயிக்கும்

எண்ணும் எழுத்தும் எங்களிரு கண்ணென்பார் சான்றோர் ~ முகத்தில்
புண்ணும் குழியும் உண்டென்பார் ~ கற்றிலார் (ஆதலினால்)
எண்ணும் எழுத்தும் அறிவிக்க ஆசான்கள் இருக்கிறார்கள்
கண்ணே கல்வி கற்பதே நம் கடமை

தலைவாரி அன்னை பள்ளிக்கு பாராட்டிச் சீராட்டி அனுப்பினாலும்
கலைகளும் கல்வியும் கருத்தாழமாக கற்க வேண்டியது உன் கடமையல்லவா
களைகளை ~ சமுதாய களைகளை களைக்க வேண்டியவர் ~ நீவீரே
பிழைகளைக் கண்டிக்க ஆசான் பிரம்பெடுத்தால் நீவிர் படையெடுப்பது
முறையல்லவே

பாடசாலை என்னும் சமூகத்தின் நல்ல உழைப்பாளிகளாக
பாசமிகு சகோதரர்களாக வாழாது
பள்ளிக்கே கரி பூசுவது ஆசான்களுக்கு கல்லெறிவது
பள்ளிப் பலகைக்கு பெயர் மாற்றுவது ஆர்ப்பாட்டம் செய்வது தகாதல்லவா!

பிறந்தோம் ஒரு நாள்
இறப்போம் என்றோ ஒரு நாள்
வாழ்வோம் எடுத்தபடி
அதுவரை வாழ்வை ரசிப்போம், ருசிப்போம் இன்பமாக

M. S. M. ஷமீல்
உயிரியல் பிரிவு
உயர்தரம் 2003

With Best Compliments

from

S. Srivarman

Grade 3H

சிறுமையைச் சிதைக்க சீறிய பாவலன்

பாரத நாடு அடிமை இருளில் மூழ்கி ஜாதிக்குள் ஜாதி, மதத்திற்குள் மதம் என அமைந்து தாய்நாடு, தன்மொழி, பண்பாடு எனும் உணர்வற்று உறங்கிய சமுதாயத்தின் நீடு துயில் நீக்க வந்த - நாட்டுரிமையை வளர்க்க பாட்டுரிமையை பயன்படுத்திய பைந்தழிழ்ப் பாவலன் பாரதி.

கவிதைகளையே ஆயுதங்களாகப் பாடிப் பாடி மக்களை விடுதலை களத்திற்கு இட்டுச் சென்ற புரட்சி புலவன் பாரதி. வீரப்பரம்பரை நாட்டுப் பெருமை பேசி அவர்தம் தோள் விம்ம படித்தறியாப் பாமரனையும் கொதித்தெழ வைத்தது அவன் கவிதைகள்.

வறுமையில் வாடி, வாழ்க்கைப் படகிற் தத்தளித்த போதும் "நமக்குத் தொழில் கவிதை" என்ற தமது வாக்கைப் போதனையுடன் சாதனை செய்து காட்டத் தவறவில்லை. தமிழன்னையை மறக்கவில்லை.

"செந்தமிழ் நாடெனும் போதினிலே" எனக் கவி முழக்கம் செய்தான். நல்ல காலம் - செந்தமிழ் என்று பாடினார். கொடுந்தமிழ் வல்லார் பெருக்கங்கண்டிருக்கும் இக்காலத்தில் அதனை இழிவுபடுத்தவே செந்தமிழ் நாடென்று பாடினான்.

ஒரு நாள் பாரதி தெருவிலே நடந்து சென்று கொண்டிருந்தான். அப்பொழுது ஒரு வழிப்போக்கன் பாரதியைப் பார்த்து, " புலவரே, தாங்கள் தத்துவப் பாடல்கள், தெய்வீகப் பாடல்கள், சுதந்திரப் பாடல்கள், காதல் பாடல்கள் என எத்தனையோ பாடல்களைப் பாடி விட்டீர்கள், ஆனால் ஏன் இந்தத் தாலாட்டுப் பாடலை மட்டும் பாடவில்லை?" என்றான். அதற்குப் பாரதி "தமிழன் ஏற்கனவே தூங்கிக்கொண்டிருக்கின்றான். தாலாட்டுப் பாடி இன்னும் அவனை தூங்க வைக்க நான் விரும்பவில்லை" என்றான். இவ்வாறாக தன் மக்களுக்காகவே தன்னை அர்ப்பணித்துக் கொண்ட அர்த்தமுள்ள கவிஞனாக பாரதி திகழ்கின்றான்.

கொள்வாரும் கொடுப்பாரும் இல்லாத ஒரு சமூக அமைப்பைக் கனவு கண்டான் பாரதி. பலர் வறுமையில் வாடுகின்றார்கள். சிலர் உண்டு களித்திருக்கின்றார்கள். இந்த நிலைக்குக் காரணம் விதியல்ல, மனிதன் தான் என உணர்ந்தவன் பாரதி. ஒரு மனிதனுக்கேனும் உணவு கிடைக்வில்லையென்றால் அது பெரும் அநீதி. அப்படியான நிலையிலுள்ள இந்த உலகத்தையே அழித்திடுவோம் என்று சீறினான் பாரதி. பாரதியின் சீற்றம் பாட்டாக மலர்கின்றது.

இனியொரு விதி செய்வோம் - அதை
எந்த நாளும் காப்போம்
தனியொருவனுக் குணவிலை யெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்!

பாரதி கண்டிப்பாகக் கட்டளை இடுகின்றான்.

வயிற்றுக்குச் சோறிட வேண்டும் - இங்கே
வாழும் மனிதர்கட் கெல்லாம்

வறுமையைப் போக்கும் வழி என்ன என்று சிந்திக்கின்றான் பாரதி. அதன் காரணத்தை மக்கள் உணர வேண்டும். அப்பொழுது தான் வழி பிறக்கும்.

செய்தொழிலால் அல்லது பிறப்பால் சாதிப் பாகுபாடு காட்டக்கூடாது என வலியுறுத்திச் சொல்கிறான்.

சாதிக் கொடுமைகள் வேண்டாம் - அன்பு
தன்னில் செழித்திடும் வையம்

ஜாதி மதங்களைப் பாரோம் - உயர்
ஜன்மம் இத் தேசத்தில் எய்தினராயின்

வேதியராயினும் ஒன்றே - அன்றி
வேறு குலத்த வராயினும் ஒன்றே.

பெண்கள் அடிமையாக இருக்கும் ஒரு சமுதாயத்தில் விடுதலை வேட்கை உருவாக முடியாது எனப் பாரதி கருதினான். அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் பெண்மையின் நாற்குணங்களையும் ஆண் சமுதாயம் வலியுறுத்துகின்ற போது பெண், அடிமை நிலைக்குத் தள்ளப்படுகின்றாள் என்ற எண்ணத்தினால் 'நாணமும் அச்சமும் நாய்கட்டு வேண்டுமாம்' எனப் பாரதி பாட நேர்ந்தது. பாரதி படைத்த புதுமைப் பெண் 'நிமிர்ந்த நன்னடை நேர் கொண்ட பார்வையும் நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும் நிமிர்ந்த ஞானச்செருக்கும்' உடையவள். பாஞ்சாலியைப் பணயப் பொருளாக வைத்துச் சூதாடிய நிகழ்ச்சி பெண்ணடிமையின் உச்சக்கட்டம் என்றே பாரதி கருதினான். தருமரைக் கண்டிக்கும் வீமனின் கூற்றாக,

இது பொறுப்பதில்லை - தம்பி
எரிதழல் கொண்டு வாடா
கதிரை வைத்திழந்தான் - அண்ணன்
கையை எரித்திடுவோம்

என வரும் பகுதி பாரதியின் சீற்றத்தையே வெளிப்படுத்துகின்றது. பெண்ணை இழிவு செய்வது மடமை. அத்தகைய மடமையைக் கொளுத்த வேண்டும் என்று கருதியவன்

மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமையைக் கொளுத்துவோம்

என்கிறான்.

தமிழ் மக்கள் ஆங்கில மோகங் கொண்டு தமிழை மறந்த நிலை கண்டு பொங்கியெழுந்த பாரதி பல விடங்களில் தமிழின் மேன்மையை விரிவாகப் பாடியுள்ளான்.

தமிழ்மொழி மூலம் கல்வி புகட்டப்பட வேண்டும். தமிழில் அறிவியல் கருத்துக்களைக் கூற முடியும் எனச் சுட்டிச் காட்டுகின்றான்.

அன்னிய மொழிகளைக் கற்றவர்கள் தாய் மொழியைக் கற்கப் பின்னிற்கும் நிலையைக் கண்ட பாரதி

வேறு வேறு பாஷைகள் கற்பாய் - நீ
வீட்டு வார்த்தை கற்கிலாய் - போ போ போ

எனத் தன் சினத்தை வெளியிடுகின்றான்.

இங்ஙனம் மனித இனத்தின் ஆஸ்தான கவியாகத் திகழ்ந்து பாரதி மண்ணிலே காலூன்றி மக்கள் மேம்பாட்டிற்குத் தடையாக இருந்த எல்லாச் சக்திகளையும் தம் பாட்டாலும், கட்டுரைகளாலும், கதைகளாலும் சாடியதன் மூலம் புதியதொரு சமுதாய அமைப்பைக் கட்டியெழுப்பினான்.

பாரதி மண்ணை விட்டு மறைந்தாலும், மகா கவியாக எல்லாத் தமிழ் மனங்களிலும் மங்காது, மறையாது வாழ்ந்து கொண்டிருக்கின்றான்.

இராசு. சத்யானந்தன்
உயிரியல் பிரிவு
உயர்தரம் 2003

With Best Compliments

from



Jayanthan Kulasingham

23, Rodrigo Avenue
Nawala

செருப்பான நட்பு

எனக்கு நான்
உனக்கு நீயென
நினைத்துக் கொண்டு
முண்டியடித்து
முன்று முடிச்சு
போட்ட பின்தான் புரிந்தது
பொருத்தமற்றவர்கள்
மணமுடித்துக் கொண்டது போல்
நானும் நீயும்
நண்பர்களாய்
மணமுடித்துக்கொண்டோமென்று.

பொறுத்த மற்ற தம்பதிகள்
மணமுடித்துக் கொண்டதற்காயும்
முழு உலகிற்காயும்
ஒருவரையொருவர் விருப்பமின்றி
விரும்பிக் கொண்டு,
வாழவேண்டிய ஒவ்வொரு
கணப் பொழுதையும் கசப்பாய்
கழிப்பதுபோல் நாமிருவரும்
நட்பைக்கழிக்கின்றோம்.

வானவில் தொட்டு
எம் வாழ்வின் இணைந்த கரங்களால்
நட்புக்கு வர்ணம் பூசநினைத்து
இறுதியில் உன்கரத்தால்
நட்பின் முகத்தில் பூசப்பட்டது கரியே!

நீயும் நானும் ரொக்கட்டில்
பக்கம் பக்கமாய் அமர்ந்து
நிலவில் உலாச் செல்வதாய்
கனாக் கண்டேன், ஆனால்
வகுப்பறை பெஞ்சிலேனும்
அருகருகே அமர்ந்ததில்லை.

குழந்தைக்கு பிறப்புக் கொடுக்கும்
தாய் எதிர்பார்ப்புகள் பல
மனதில் நட்டபின்பே
குழந்தையைப் பிரசவிப்பாள்
நானும் எதிர்பார்ப்புகள்
பலவற்றைச் சுமந்தபடியே
நட்பைப் பிரசவித்தேன்
இறந்து பிறந்த குழந்தை போல்
இறந்தே பிறந்த நட்பைக் கண்டு
முழுதாய் மனமுடைந்தேன்.
பிரசவம் பார்க்கத்தெரியாமல்
பார்த்து இறக்கவைத்தது
நீயே!

உனக்கு மருத்துவம் பிடிக்கும்
எனக்குச் சட்டம் விருப்பம்
நட்பின் ஒவ்வொரு வலைவிலும்
காயம் பட்ட போதெல்லாம்
நீ போட்டது என்னவோ
மட்டமான சட்டங்களே
மருத்துவம் அறியா நான்
வளைவுகளில் உண்டான ரணங்களை
குணங்கொள்ளச் செய்தேன்.
உன் சட்டங்களுக்கு
ஜடங்கள் கூட
உருக்குலைந்துபோகும்
நட்பிற்கு ஏதடா சட்டம்?
உலகைத் தாங்கும்
அட்லஸ் கூட
நட்பின் முதுகில் நீ ஏற்றும்
சுமை கண்டு சினங்கொள்வான்.
உன் இன்பங்களை உலர்த்த
உன்னவளும் உலகமும் தேவை

உன் துன்பங்கள் தாங்கமட்டும்
நான் தேவையோ?
சரி, பரவாயில்லை,
என் மனதினுள் எண்ணி
இழுகள் கூட இலகுவாய்த் தாங்கும்
என் தோளில் உன் துன்பங்களை
நட்பின் பெயரால் ஏற்றிக்கொண்டேனே...
மறந்துவிட்டாயா?

நீ அழுத
ஒவ்வொரு சொட்டுக் கண்ணீரும்
இன்னும் ஈரமாய்ப் பிசுபிசுப்பதை
அறிவாயா?
ஓ....
அறிந்திருக்க மாட்டாய்
பிசுபிசுப்பது என்கையிலல்லவா!

நான் உனக்காய்
கண்ணீர் விட்டபோதெல்லாம்
நீ எனக்காய் உமிழ்நீரை
மட்டுமே உமிழ்ந்தாய்.

உனக்கு நான்
தட்டிக்கொடுத்த போதெல்லாம்
நீ சவுக்கால் மட்டுமே
எனக்கு நீ
அடிகொடுத்தாய்.

உயிர்கொடுப்பானாம்
உயிர்த்தோழன்
உன் உயிர் தேவையில்லை
என்னுயிர் பறிக்காதிருந்தால் போதும்.
நண்பா...
வயல்களின் இலக்கணங்கள்
அதன் வரப்புகள்,
துன்பம் ஏந்தலும் இன்பம் பகிர்தலுமே
நட்பின் இலக்கணங்கள்

உன் துன்பம் ஏற்றி ஏற்றி
செருப்பாய் தேய்ந்த போதும்
நான் தேய்ந்துவிட்டேன் என
எனை செருப்பாய் கழித்ததும் போதும்
நட்பைப் பற்றி நினைத்து நினைத்து
நித்திரை கொள்ளாத
நீண்ட கண்ணீர் இரவுகள்
கழித்ததும் போதும்
எவருக்குமெட்டா என் நட்பை
எட்டாய் வளைத்ததும் போதும்
நீ எனைக் கழிக்காதே
நானே விலகிக் கொள்கிறேன்.

அடுத்து யார் உன்னிடம்
நட்பை நாடி
உனது செருப்பாய்
தேய்வார்களோ???

(முற்றிலும் உண்மை)

அஸீம் ம. மக்கீன்
கணிதப் பிரிவு
உயர்தரம் 2003

பிற்குறிப்பு:-

கவிதைக்குக் கீழ் "யாவும் கற்பனை" என்றிட்டால் அதை உண்மை என நினைத்துவிடும் சிலர் உண்மைதனைக் கூறச் சொல்வர். "முற்றிலும் உண்மை" என்றிட்டால் அதை முழுதாய் விட்டு விடுவர். ஆகவே இங்கு "முற்றிலும் உண்மை" என எழுதப்பட்டுள்ளது.

தோல்வி என்றால்...

நீங்கள் தோற்றவர் என்று பொருள் அல்ல,
நீங்கள் இன்னும் வெற்றியடையவில்லை என்று பொருள்.

நீங்கள் எதையும் சாதிக்கவில்லை என்று பொருள் அல்ல,
சில பாடங்கள் கற்றுக்கொண்டிருக்கிறீர்கள் என்று பொருள்.

நீங்கள் அவமானப்பட்டுவிட்டதாகப் பொருள் அல்ல,
முயன்று பார்க்கும் துணிவு உங்களிடம் இருக்கிறது என்று பொருள்.

உங்களிடம் சரக்கு இல்லை என்று பொருள் அல்ல,
வேறு உத்திகளைக் கையாள வேண்டிய அவசியத்தை
உணர்ந்துவிட்டீர்கள் என்று பொருள்.

வாழ்க்கை வீணாகிவிட்டதாகப் பொருள் அல்ல,
மீண்டும் ஆரம்பிக்க ஒரு வாய்ப்புக் கிடைத்துள்ளது என்று பொருள்.

விட்டுவிட வேண்டும் என்று பொருள் அல்ல,
இன்னும் செம்மையாக உழைக்க வேண்டும் என்று பொருள்.

உங்களால் அடையமுடியாது என்று பொருள் அல்ல,
அடையக் கொஞ்சம் தாமதமாகலாம் என்று பொருள்.

கடவுள் உங்களைக் கைவிட்டு விட்டார் என்று பொருள் அல்ல,
உங்களுக்கு வேறு நல்ல எதிர்காலத்தை நிர்ணயம் செய்து
வைத்துள்ளார் என்று பொருள்.

ச. அரவிந்த்
உயிரியற் பிரிவு
உயர்தரம்-2003

அன்னை எனும் அன்பான சொல்

ஒரு பத்துத் திங்கள் என்னை சுமந்தாயே!
ஈருலகிலும் என்னை உயர்த்திவிட!

ஈரைந்து மாதங்கள் காத்தாயே
என்னைச் சான்றோன் எனக்கூறிவிடவா?

எத்தனை கடவுள் இருந்தாலும்
நான் காணும் கடவுள் நீயே!

கண்ணை இமை காப்பது போல என்னைக் காத்தாயே!
அன்னை எனும் சொல்லைப் புனிதமாக்கிவிடவா

நிலத்தில் கூட விழவிடாமல்
உன் மனதால் என்னை ஏந்தினாயே!

எத்தனை ஜென்மங்கள் ஆனாலும் நீ என் தாய்!
நான் உன் சேய்

I. M. அப்ராஸ்
ஆண்டு 8Q

With Best Compliments

from

Chemax Prints (Pvt) Ltd.

Printers, Publishers & Paper Convertors

7, Charles Place
Dehiwala, Sri Lanka
Tel : 723963, 737127

ஆனித் தீ

ஆனித் திங்கள்
முதலாம் நாள்
உணர்வுகளை உசுப்பிய
யாழ் நூலகத்து நெருப்பு -
அவர்கள்
யார் என்பதை
மீண்டும் முரசறைந்தது!
அங்கு.....

மனிதம் மரணித்தது
நாகரிகம் மறைந்து போனது
மெத்தப் படித்தவர்களின்
ஜனநாயக இருளை
அந்தப் புத்தக வெளிச்சம்
படம் போட்டுக் காட்டியது

அந்த நெஞ்சங்களைப் போலவே
நெருப்பும்!

அதன் பஞ்சப்பசிக்கு
புத்தகக் களஞ்சியம்
பாற்சோற்றுப் படுக்கை
பொசுங்கியது

புத்தகங்கள் மட்டுமல்ல
வரலாற்றின் பக்கங்களும் தான்
அன்று, நசுங்கியது
நம்பிக்கைகளும் தான்!
நீறு பூத்திருக்கும் நெருப்பு,
இன்றும்.....
வார்க்கப்படுவது நீரல்ல, நெய்

ரா. டிலுக்ஷன்
கணிதப்பிரிவு
உயர்தரம் 2004

என் காதலியே!

கண்கள் மேல் கண் இமைக்கு ஒரு காதல்,
கடல் மேல் கடல் அலைக்கு ஒரு காதல்,
வீணை மேல் கை விரலுக்கு ஒரு காதல்,
இரவின் மேல் வண்ண நிலவுக்கு ஒரு காதல்,
நீரின் மேல் நீர்க் குமிழிக்கு ஒரு காதல்,

தேனின் மேல் சிறு வண்டுக்கு ஒரு காதல்,
பூவின் மேல் இளம் தென்றலுக்கு ஒரு காதல்,
கவிதை மேல் அந்தக் கவிஞனுக்கு ஒரு காதல்,
அன்பே உன்மேல் எனக்கு ஒரு காதல்,
காதலியே உனக்கு யார் மேல் காதல்?

மொஹமட் முவாரிஸ்
வர்த்தகப் பிரிவு
உயர்தரம் 2003

With Best Compliments

from

VMS Travels & Tours (Pvt) Ltd.

Galadari Hotel
64, Lotus Road, Colombo 1
Tel : 447370, 323929, 326157, 432647, 432651, 447372, 347624-5
Fax : 94-1-437249 E-mail : vikky@eureka.lk

Branch Office :
Jaic Hilton Tower
200, Union Place, Colombo 2
Tel : 300620-3
Fax : 300624

இயற்கைக் காட்சி

கிழக்கு வானம் பிறந்ததாம்
கிளிகள் பாடிப் பறந்ததாம்
அக்கினிக்குஞ்சது வானில்
அடிவயிற்றில் பிறந்தது

கடலலை பொங்கிட
கமலம் மலர்ந்திட
காகமது கரைந்தது
காசினியும் விழித்துக் கொண்டது

நீலவானம் விழித்திட
நீண்ட பனைகள் அசைந்திட
நீலமகளும் குழந்தைகளும்
நிமிர்வுடன் எழுந்தனர்

பூக்களோடு புல்லினமும்
புலர்ந்து கொண்டன
பூவாசம் வீசிட
பூவையரும் புனைந்தனர் பூமாலை

காட்டருவி பெருகிட
காளைகள் உழுதிட
நெற்கதிரும் தென்னைகளும்
நீளமான அரவமாய்

இயற்கை
அன்னையின்
இனிய இன்பங்களை
இரசிப்பதும் உரைப்பதும்
இறைவனின் கொடையே

து. லுசாந்தன்
ஆண்டு 7Q

கற்க வேண்டிய சில துளிகள்

எங்கிருந்தோ வந்தோம் எதிர்பாராமல் சந்தித்தோம்
இன்பமுடன் பழகினோம் துன்பத்துடன் பிரிகிறோம்
இன்பத்தை கண்டு இன்புற்று விடாதே
துன்பத்தை கண்டு துவண்டு விடாதே
இரண்டையும் ஒன்றாக நினைத்து வாழ்க்கையில் முன்னேறு

கடலுக்கு அழகு மீனும் தாவரமும்
காட்டுக்கு அழகு கவரி மானும் புள்ளி மானும்
நாட்டுக்கு அழகு நல்லாட்சியும் நீதியும்
ஒரு பெண்ணுக்கு அழகு அடக்கமும் பண்பும்

J. ஜெகதீஸ்
வர்த்தகம் பிரிவு
உயர்தரம் 2003

With Best Compliments

from

SRIMAARUTHY PAWN BROKERS

110, Nuwara-Eliya Road
Talawakelle
Tel : 052-58622
Fax : 052-58368

எமக்கு உதவியளித்த

றோயல் கல்லூரி கனிஷ்ட பிரிவு

(ஆண்டு 1 - ஆண்டு 5)

மாணவர்களுக்கும்,

ஆசிரியர்களுக்கும்,

பெற்றோர்களுக்கும்

நன்றிகள் பல...

With Best Compliments

from

SEVANA

SEVANA DEDICATED TO SHELTER THE NATION

BUY SEVANA LOTTERY WITH A SURE CHANCE TO WIN

We draw upon your dreams

Sevana Lottery
National Lotteries Board
234/2, Galle Road
Colombo 3

With Best Compliments

from

UNIE ARTS (PVT) LTD.

Quality Off-set Printers

of

Books	Diaries
Posters	Calendars
Carton Makers	Invitation Cards
Hot Stamp Printing	Arangetram Souvenirs

COMPUTER GRAPHIC DESIGNING & TYPE SETTING IN ALL THREE LANGUAGES

Sole Agent & Distributor in Sri Lanka for

Valli Software Solutions - India

Tamil, Sinhala & other Indian Languages

கணணிப்பொறியில் தமிழில் எழுத... தமிழால் இயக்க...
எதிர்கால கணணி யுகத்தைத் தமிழால் வெல்வோம்!

48B, Bloemendhal Road, Colombo 13, Sri Lanka
Tel : 094-01-330195, 478133 Fax : 094-01-330195
E-mail : unieart@sltnet.lk

With Best Compliments

from

Boss Stationers
&
Boss Artone Printers

Offset and Screen Printing

3, Modern Market
Hospital Road, Jaffna

தமழ் நயம் மலர் மென்லேும் தளைக்க
நல்லாசிகளையும் பாராட்டுகளையும் பகிர்கின்றோம்.

Sri Turga Jewellery

ஸ்ரீ துர்க்கா நகை மாளிகை

சகல விதமான தங்க நகைகள் 22Kt. இல்
புதிய டிசைன்களில் வடிவமைப்பவர்கள்

188, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

With Best Compliments

from

S. Y. N. Exports

Exporters of Sri Lanka Produce

Office:
123, 1st Floor, People's Park Complex, Colombo 11, Sri Lanka
Tel : 437248 Fax : 94-1-437248 Mill : 037-81117
Telex : 22983 SYN CE
E-mail : synexports@eureka.lk

Registered Office :
112/8, Weliamuna Road, Hendala, Wattala, Sri Lanka

With the Best Compliments

of

V. A. S. T. K. S. NADAR & CO.

Dealers in Bottles, Corks, R. O. P. P. Caps, Food Colours
Essence, Perfume, Labels, Talcum Powder
Joss Sticks, Plastic Lids, Etc..

41, Dam Street, Colombo 12
Tel : 336121, 436003, 441306, 074-616562
Fax : 433729

With Best Compliments

from

OCEANICK IMPEX

Authorised Sole Agents for KIBS Products in Sri Lanka
Distributors for Veytex Products, Importers, Exporters of Textiles and Fancy Items

192, Main Street, Colombo 11, Sri Lanka
Tel : 336720, 327168, 336721 (Direct)
Fax : 326961

With Best Compliments

from

SHINGAPOORE JEWELLERS

சிங்கப்பூர் ஜுவலர்ஸ் සිංගප්පූර් ජුවලර්ස්

Dealers in Genuine 22 ct. Gold Jewelleries

315, Galle Road, Wellawatta
Colombo 6, Sri Lanka
Tel : 363158

With Best Compliments

from

Sulaiman
Lukman
Thawseer

உயர்வாய் நண்பா!

அச்சம் வேண்டாம் அருமை நண்பா!
ஆண்மை இருக்க வேண்டும் நண்பா!
கச்சிதமாகச் செயல்படு நண்பா!
களவு செய்ய வேண்டாம் நண்பா!

ஆணவம் பொறாமை அற்றிரு நண்பா!
அனைவரும் ஒன்றாய் இருப்போம் நண்பா!
கானகத்தில் யானைக் கூட்டம் போல!
ஜாதி பேதமின்றி இருப்போம் நண்பா!

ஏழைகளிடம் இரக்கம் காட்டு - களவு
எடுப்பதை எல்லாம் அகற்றிடுவாயே!
வாழையைப் போல உதவி செய்ய
பழகிக் கொள்ளடா அருமை நண்பா!

எதிரியிடமும் இரக்கம் காட்டு!
மனம் பதறிடாமல் வாழ்ந்து காட்டு !
தவறிடாமல் வேலை செய்வாய் - உலகில்
உயர்வாய் என் அருமை நண்பா!

ஆ. கூஷரப்
ஆண்டு 6Q

With Best Compliments

from

EASTERN TRADE CENTRE

Rice Merchant

புதிய உலகம்

கணனி யுகம்; கண்ணுக்குள் உலகம்
செய்மதிகளின் பார்வைக்குள்
எங்கோவோர் மூலைக்குள்
வலைவிரித்தாடுகிறது விஞ்ஞானம்

தீக்காயம் கூடத் தீண்டப்படாக் காலமன்று
இதயம் திறக்கும் சிகிச்சைகளோ இன்று
மருத்துவம் கண்ட புதுமை
விஞ்ஞானத்தின் அருமை!

நிலவைப் பார்த்து அழைத்ததொரு காலம்
கண்ணாடியில் விம்பம் பிடித்து மகிழ்ந்ததொரு காலம்
அண்டம் தாண்டிச் சென்று மீண்டதும் ஒரு காலம்
இன்று செவ்வாய், சனியிலும் சீவியமுண்டெனும் காலம்

புதிய மிலேனியம் புதுமையாகப் புறப்பட்டிருக்கிறது
விஞ்ஞானம் எனும் விசித்திரத் தேர் பூட்டி
இயந்திர ராஜ்யத்தில் உண்ணல், உறங்கல்
ஏன்? தோள் கொடுக்கும் தோழர்களும் ரொபோக்களே

அவனின்றி அசையாத அணு - இன்று
அணுவணுவாய்ப் பிளக்கும் ஆய்வில்
விந்தைகள் தந்த விஞ்ஞானம் - இன்றோ;
வீணாகப் பல உயிர்களைக் கொன்று

புதுமைகள் பல புரிந்திட வேண்டும்
விதிகளை மாற்றவே புறப்பட வேண்டும்
விஞ்ஞான வளர்ச்சியில் எழுச்சியே வேண்டும்
பயன்பெறும் கனவுகள் நிலைத்திட வேண்டும்

றிமாஸ் அகமட்
ஆண்டு 6Q

With Best Compliments

from



TEXTA

Specialist in Suitings
Wholesale & Retail Dealers in Textiles

124, 3rd Cross Street
Colombo 11
Tel : 335463

மரமும் மனிதனும்

ஓரறிவே பெற்ற தெனச்
சொல்லும் மரங்கள் - நமக்கு
உதவுகின்ற முறைகளை நாம்
எண்ண முடியுமா?

நிழல் தரும், காய்தரும்
கனிகளும் தரும் - பின்
மழை மிகப்பொழிவதற்கு
உதவி செய்யும்!

ஆறு அறிவு பெற்றவராய்
அகந்தை கொள்ளும் - நாம்
அறிந்து விரும்பி மற்றவர்களுக்கு
என்ன செய்கிறோம்

சாக்கடையை உண்டு வளர்ந்த
மா மரங்களே - இங்கு
சர்க்கரையாய் இனிக்கும் சுவைப்
பழங்கள் வழங்க.....

தாயின் பாலை உண்டு வளர்ந்த
மனிதப் பிறவி நாம் - உயிர்
அத்தனைக்கும் உதவி செய்ய
துடிக்க வேண்டாமா?

கிருஷ்ணகுமார் அவினஷ்
ஆண்டு 6Q

We Greet the Tamil Literary Associationa of

Royal College, Colombo

Meritorious achievement in their noble mission in serving the students

INSTITUTE OF INFORMATICS STUDIES

"Centre of Excellence in Global Information Technology"

100, Clock Tower Road, Jaffna
Tel : 021-2222831
E-mail : iis@sltnet.lk

பொறுத்திரு என் பூமித்தாயே

பொறுமையில் பொக்கிஷம்
பொங்கியதேன் தாயே.....?
பொல்லாத மானிடரில்
இல்லாத "மனிதம்" அது,
மரித்துப்போன பெருந்துயரால்
மாதாவே பொங்கினாயோ.....?

மாற்றானின் மண்டை யோட்டில்
மதுவருந்தி மகிழ்ந்திருக்கும்
மானிடனை கண்ணுற்றோ
பூமித்தாய் நீ பொங்கினாயோ?

"நாட்டில் மாற்றங்கள்"
என்று சொல்லி ஏமாற்றங்களை
ஏமக்களிக்க – கொடுப்பவரை கண்டதாலோ
என் தாயே பொங்கினாயோ.....?

ஆடையின்றி வாடையிலே.....
கூழ் கஞ்சி குடித்து
தினம் பட்டினியால், மிக
மெலிந்து பாதையிலே
போறவரை பார்த்துத்தான்
பொங்கினாயோ...?

என் தாயே.... கேள்.....!!!
இனி மேலும் ஏன் கோபம்
பூகம்பம் ஏன் வேண்டும்?
பொறுமைக்குப் பெயர் போனவளே,
பொறுத்திருக்க மாட்டாயோ.....?
நெல்லுக்கிறைத்த நீர் வாய்க்கால்
வழியோடி புல்லுக்கும் போகட்டும்!
பொறுத்திரு என்

பூமித்தாயே.....

பி. ஒஷான்
ஆண்டு 6R

With Best Compliments

from



NITHYA AGENCY

නිත්‍යා ඒජන්සි நித்யா ஏஜன்சி

112/1, 4th Cross Street, Colombo 11
Tel : 458769, 074-718534

காதலி

வானமே இல்லாதிருந்தால்
மேகமே இருந்திருக்காது
உன்னை நான் கண்டிராவிட்டால்
எனக்குக்காதலே தெரிந்திருக்காது

பெண்ணே, உன்
வெண்மையை விட பெண்மையை நேசிக்கிறேன்.
முகத்தை விட அகத்தை நேசிக்கிறேன்.
உன் அழகை ரசிப்பதை விட
உன்னோடு பழகுவதை ருசிக்கின்றேன்.

வானவில்லின் நிறமழகா - இல்லை
அதன் வளைவழகா என்று
கேட்டால் என்ன சொல்வது
ஒரு சிறுபூவின் நிறமழகா - இல்லை
அதன் இதழழகா என்று
கேட்டால் என்ன சொல்வது
அதுபோல் பெண்ணே உன்னில் எது அழகென்று
கேட்டால் என்ன சொல்வது

இடி இடிக்க முன் மின்னல் மின்னுவது போல்
நீ பேசும் முன் உன் புன்சிரிப்பு
முந்திக்கொள்ளுகிறதே அது அழகா
நட்சத்திரங்கள் வெட்கப்பட்டு
மின்னி மின்னி ஒளிப்பது போல் - நீ
விட்டு விட்டுப் பார்க்கிறாயே ஓர் ஓரக்கண் பார்வை
அது அழகா
தென்றல் காற்றோடு வீசம் சாரலைப்போல்
வெட்கி வெட்கிப் பேசுகிறாயே
கொஞ்சி மொழி அது அழகா

தாஜ்மஹாலின் பளிங்கைப்போல்
பளபளக்குதே உன்மேனி அது அழகா
ராத்திரியின் நிறத்தைத் திருடி

தோரணங்கள் தொங்கவிட்டாற் போல்
அசையுதே உன் இரட்டை ஜடைக் கூந்தல்
அது அழகா
பெண்ணே,
எதை நான் அழகென்று சொல்ல
உன் கண்ணீர் கூட எனக்கு
பன்னீர் தானே!
கிளையிருந்தும் இலைஇல்லாதது போல்
உனக்கு வாயிருந்தும் வார்த்தை
வருகிறதில்லையே!
பெண்ணே,
நான் காதலிப்பதற்காக வாழவில்லை
வாழ்வதற்காகவே காதலிக்கிறேன்.
நீ என்னைக் காதலி

ஜெ. ரோஹணகுமார்
வர்த்தகப் பிரிவு
உயர்தரம் 2003

வெட்டிய இருபது பேர்கள்

இருபது பேரைக் கத்தியினால்
இரக்கம் இன்றி வெட்டினேன் நான்
ஒருவரும் செத்துப் போகவில்லை
ஒரு துளி இரத்தமும் சிந்தவில்லை

"குய்யோ, முறையோ" என்றவர்கள்
கூக்குரல் கூடப் போடவில்லை
பொய்யேன் இல்லை சொன்னதெல்லாம்
மெய்தான் மெய்தான், மெய்யேதான்!

பத்துப்பேர்கள், கைகளிலே,
பத்துப்பேர்கள் கால்களிலே,
மொத்தம் இருபது பேர்களடா,
வெட்டப்பட்டவை நகங்களடா!

கு. சசிவர்ணன்
ஆண்டு 6Q

ஆசிரியர் தினம்

ஆசிரியர் வாழ இறைவனை வேண்டுவோம் நாமே

ஐப்பசித்திங்கள் தன்னில் - கல்வியால்
எம்பசி தீர்க்கும் குருவுக்காக - இத்தரணியில்
மாணவர் செல்வம் நாங்கள்
மகிழ்வுடன் கொண்டாடுவோம் இன்று

அழிவிலா செல்வமாம் கல்விதனை
அள்ளியே எமக்கூட்டும்
இழிவிலா இன்னவர் ஆசிரியர்வாழ
இருகரம் கூப்பி இறைவனை வேண்டுவோம்

எண்ணும் எழுத்தும் கசடறக்கற்பித்த
கண்ணெனப் போற்றும் எம் ஆசிரியர்
மாண்புடன் என்றும் வாழ அன்புடன்
இறைவனை வேண்டுவோம் நாமே.

காயத்தை உருக்கி
எமக்குத் தூய மனத்துடன் கற்பிக்கும் எம் ஆசிரியர்
நோயற்று நீடுழி வாழ நாம்
தூயமனதுடன் இறைவனை வேண்டுவோமே

பா. சஞ்சுதன்
ஆண்டு 6R

With Best Compliments

from



Sritharan

"உயிர்களிடத்தில் அன்பு வேண்டும்"

"உயிர்களிடத்தில் அன்பு வேண்டும்" என்றார் அமரகவி பாரதியார். உயிர்கள் அனைத்தும் இறைவனின் படைப்புகள். அவை வெவ்வேறு வகையினவாயிருக்கலாம். ஆனால் அவை அத்தனையும் இறைவனின் வடிவங்கள் என்றே நாம் கொள்ள வேண்டும். உயிர்கள் இன்பமும் துன்பமும் அடைகின்றன. சிலர் உயிர்களை வேதனைப்படுத்துகின்றனர். அன்பு செலுத்துவதற்குப் பதிலாக துன்பம் செலுத்துகின்றனர். அதன் மூலம் தான் இன்பப்படுகின்றனர். இந்நிலை முற்றாக ஒழிய வேண்டும்.

நமக்கு யாராவது அடித்தால் நாம் வேதனைப்படுகிறோம். பிற உயிர்களுக்கு நாம் வேதனை செய்யும் போது அவை வேதனைப்படுகின்றன. அதனை நாம் உணர மறந்து விடுகிறோம்.

சில சிறுவர்கள் வண்ணாத்திப் பூச்சி, பொன்வண்டு போன்றவற்றைப் பிடித்து நூலில் கட்டி பறக்கவிட்டு மகிழ்கிறார்கள். கிளியைப் பிடித்து சிறகுகளை வெட்டிவிடுகிறார்கள். மைனா, கிளி போன்றவற்றைப் பிடித்துக் கூட்டில் அடைத்து விடுகிறார்கள். அவை தங்கள் இனத்தைப் பிரிந்து, சுதந்திரத்தை இழந்து தங்கள் துன்பத்தை வெளிப்படுத்த முடியாமல் கூடுகளில் கிடந்து தவிக்கின்றன.

ஒரு புறாவுக்காகத் தன் தசையைக் கொடுத்த சிபிச்சக்கரவர்த்தி, மானுக்காக பினை நின்ற நபிபெருமானார் ஆட்டுக்குட்டியின் துயர் தீர்த்த புத்த பெருமான் போன்றவர்களின், கதைகளை கேட்டிருக்கின்றோமல்லவா? ஆனால் அவர்கள் காட்டிய வழியைப் பின்பற்றுகின்றோமா? உயிர்களிடத்துக் கருணைகாட்ட, அன்பு செலுத்தப் பின்பற்றுகிறோம்.

எல்லா உயிர்களிளும் இறைவன் இருக்கிறான் என்ற உணர்வுடன் நாம் செயற்பட வேண்டும். பிற உயிர்களை நம் உயிர்கள் போல் மதித்து வாழ்ந்திடப் பழகுதல் வேண்டும். அதுவே மிகச் சிறந்த வாழ்வு நெறியாகும்.

S.V. சயன்தன்
ஆண்டு 6R

With Best Compliments

from



Middle-East Manpower Recruitments

Manpower Recruitment

Labour Licence #484

46, 1st Floor, New Super Market
Maligawatta, Colombo 10, Sri Lanka
Tel : 430651, 075-361689
Fax : 430651, 075-361689
E-mail : middlee@vinet.lk, pvchandralal@vinet.lk, dulani@vinet.lk

உண்மை உயர்வு தரும்

திருவள்ளுவர் பெருமான் "யாம் உண்மையாகக் கண்ட பொருட்களுள் வாய்மையைவிட எத்தன்மையாலும் சிறந்தவைகளாகச் சொல்லத் தக்கவை வேறு ஒன்றுமில்லை" என்று கூறுவர். காந்தி அடிகளும் "வாய்மையை விட வேறு தெய்வம் பிறிது உலகில் இல்லை" என்று உரைப்பார். வாய்மை என்பது சத்தியம் என்னும் பொருளில் வழங்கி வருகின்றது. சத்தியத்தை நினைவு, சொல், செயல், என்னும் மூன்று நிலைகளிலும் பேணுதல் வேண்டும். அங்ஙனம் பேணும் மூன்று நிலைகளும் முறையே உண்மை, வாய்மை, மெய்மை என்று கூறப்படும்.

எந்த உயிருக்கும் சிறிதும் துன்பத்தை உண்டு பண்ணாத சொல்லே வாய்மை என்று கூறப்படும். நினைவினாலும் செயலினாலும் கூட பிறருக்கு சிறுதும் துன்பம் செய்தல் ஆகாது. உலக சமயங்கள் அனைத்தும் வாய்மையை உயர்த்திக் கூறும்.

தூய்மை உள்ள இடத்திலேயே உண்மை இருக்க முடியும். தொடக்கத்தில் வாய்மை பேணுவது சற்றுக் கடினமாக இருக்கும். உறுதியம், ஊக்கமும் விடாமுயற்சியும் சத்தியத்தை நிலை நிற்கச் செய்யும். உண்மையானது ஒருவனை இறுதியில் வெற்றிக்கும் உயர்விற்கும் கொண்டு போய்ச் சேர்க்கும். புறத்து அழுக்குகளை கழுவிச் சுத்தம் செய்வதற்கு நீர் உதவுகின்றது. மனத்தைத் தூய்மை செய்ய வாய்மை உதவுகிறது. பெரியோர் எமது மனம் இருண்டு போய் இருக்கின்றது என்று கூறுவார்கள். அந்த இருளை அகற்றுவது வாய்மை. அது அணையாத தீபமாய் விளங்குகின்றது.

பண்டை நாளிலே குருகுலங்களில் மாணவர்கள் கற்கப் புகும் போது குருதேவர் "உண்மை பேசு, அறம் செய்" என்னும் இரண்டினையும் உபதேசிப்பது பெருவழக்கமாக இருந்து வந்தது. காந்தி மகான் அனைத்து நிலைகளிலும் வாய்மையைக் கடைப்பிடித்தார். அரசியல் வாழ்வில் கூட வாய்மையில் தவறி நடந்தாரில்லை. வாழ்நாளிளெல்லாம் உண்மை பேசிக் கண்கண்ட தெய்வமாக உயர்ந்தார்.

மாமன்னன் அரிச்சந்திரன் வாய்மையைக் காப்பதற்காக நாடு நகரை இழந்தான். மனைவி சந்திரமதியை விற்றான். அருமை மகனை இழந்தான். தானும் சுடலை காப்பவனுக்கு அடிமையானான். அளவற்ற துன்பங்களை அனுபவித்தான். சந்திரமதி தான் செய்த குற்றத்திக்காக விதியின் சதியால் மரண தண்டனைக்கு ஆளாகினாள். மரண தண்டனையை நிறைவேற்றும் பொறுப்பு மயானம் காக்கும் தொழிலை மேற்கொண்ட அரிச்சந்திரனிடம் ஒப்படைக்கப்பட்டது.

மயானத்தில் தண்டனையை நிறைவேற்றும் நேரம் வந்துவிட்டது. அங்கே விசுவாமித்திரர் ஓடி வருகின்றார். "யான் முன்னர் தந்த நாட்டைத் தரவில்லை என்று பொய் சொல்லு" என்று கேட்கிறார். "இழப்புகள் அனைத்தையும் இல்லையாக்கும் படி செய்து தருவேன்" என்று ஆசைவார்த்தை கூறினார்.

அப்போது அரிச்சந்திரன் "யான் இந்நாள் வரை பதியை இழந்து பாலனை இழந்து நிற்கிறேன். முத்திதான் எனக்குக் கிடையாத போதும் சத்தியத்தைக் கைவிடேன்" என்று கூறுகின்றான். மேலும் அவன் "வாய்மை என்னை மீளா நரகிடை கொண்டு போய் விடினும் கூட பொய் கூறமாட்டேன்" என்கிறான்.

சத்தியம் இறுதியில் அவனைக் காத்தது. இழந்த நாடு, பிள்ளை, மனைவி, மக்களை எல்லாம் மீட்டுத் தந்தது. இதிகாச மகா புருடனுமாகி விட்டான். உண்மையைக் கடைபிடிக்கும் ஒருவர் தருமங்களைச் செய்ய வேண்டியதில்லை ஒவ்வொருவரும் சிறுபிராயம் முதல் வாய்மையைப் பேணி நடத்தல் வேண்டும்.

த. ஹரிபிரசான்
ஆண்டு 6Q

மழை

வானம் கறுக்கப் பெய்கின்றாய்
மண் குளிர வருகின்றாய்
உயிரை மகிழ வைக்கின்றாய்
மழையே!
உன்னால் நம் தேசமெல்லாம்
மின்சாரம்.....
நீ இல்லையேல்
நாமில்லை நன்மழையே

மாலைப்பொழுது

கதிரவன் களைப்பினால்
கண் அயர
உயிரினங்கள் தம் இடம் தேடி
ஓடி ஒழிய
வானம் மருதாணி பூசிக்கொண்டு
சிவந்து போகும்
விண்மீன்கள் கண்சிமிட்ட ஆயத்தமாக
நிலாப்பெண் தன் முகம் காட்ட
ஆயத்தமாகிறது இந்த
இனிய மாலைப்பொழுது

V. கிரிஷாந்தன்
ஆண்டு 6R

With Best Compliments

from

Jegan Pharmacy

(Wholesale & Retail)

Distributors for

* Edna Chocolates & Pharmaceuticals
* Pharmco Marketing Services (Pvt) Ltd.
* Arkem Pharmaceuticals

462, B, Hospital Road
Jaffna
Tel/Fax : 021-2222194, 021-2223191

முரசு

வெள்ளை நிறத்தொரு பூனை எங்கள்
வீட்டில் வளருது கண்டீர்
பிள்ளைகள் பெற்றதப் பூனை - அவை
பேருக் கொரு நிறமாகும்

சாம்பல் நிறமொரு குட்டி - கரும்
சாந்து நிறமொரு குட்டி
பாம்பு நிறமொரு குட்டி - வெள்ளைப்
பாலின் நிறமொரு குட்டி

எந்த நிறமிருந்தாலும் - அவை
யாவும் ஒரேதரம் அன்றோ?
இந்த நிறம் சிறிதென்றும் - இஃது
ஏற்றமென்று சொல்லலாமோ?

வண்ணங்கள் வேற்றுமைப் பட்டால்
மானிடர் வேற்றுமை யில்லை
எண்ணங்கள் செய்கைகள் எல்லாம் - இவ்
யாவருக்கும் ஒன்றெனக் காணீர்

நிகரென்று கொட்டு முரசே - இந்த
நீணிலம் வாழ்பவர் எல்லாம்
தகரென்று கொட்டு முரசே - பொய்
சாதி வகுப்பினை எல்லாம்

அன்பென்று கொட்டு முரசே - அதில்
ஆக்கமுண் டாமென்று கொட்டு
துன்பங்கள் யாவுமே போகும் - வெறும்
சூதுப் பிரிவுகள் போனால்

அன்பென்று கொட்டு முரசே - மக்கள்
அத்தனை பேரும் நிகராம்
இன்பங்கள் யாவும் பெருகும் - இங்கு
யாவரும் ஒன்றென்று கொண்டால்

ஆடம்
ஆண்டு 6R

With Best Compliments

from



SILVER KING

Wholesale & Retail in Ever silver Fancy Goods &
Textiles, Gift Items Etc.

19, Jempettah Street, Colombo 13
Tel : 385516

ஆறுமுக நாவலர்

யாழ்ப்பாணத்து நல்லூர் என்றதும் அங்குள்ள தொன்மை வாய்ந்த முருகன் கோவில் நினைவுக்கு வரும். கோயிலின் அயலில் வெண்ணீரணிந்து உருத்திராட்சம் பூண்டு பட்டை தரித்து சிவனார் சேவடியை நினைத்திருக்கும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் படிம உருவில் இருக்கின்றார். சிவநெறியையும், செந்தமிழையும் பரிபாலனம் செய்து வருகின்றார்.

நாவலர் பெருமான் யாழ்ப்பாணத்து நல்லூரிலே, ஞானப்பிரகாசர் நன் மரபிலே 1822ம் ஆண்டு மார்கழி மாதத்திலே 18ம் நாளில் பிறந்தார். தந்தை கந்தப்பிள்ளை, தாய் சிவகாமி அம்மை. இளமையில் திண்ணைப் பள்ளியிலே படித்து பின்னர் சேனாதிராய முதலியார், சரவணமுத்துப் புலவர் முதலிய சான்றோர்களிடம் தமிழ் பயின்றார். பீற்றர் பார்சிவல் துரை நிருவிய பாடசாலையில் ஆங்கிலமும் கற்றுணர்ந்தார். அப்பாடசாலையின் ஆசிரியராகவும் கடமையாற்றினார். தமிழ் இலக்கண இலக்கிய நூல்களையும், சைவ சித்தாந்த சாத்திரங்கள், சைவத் திருமுறைகள், சிவாகமங்கள், புராண இதிகாசங்கள் முதலியவற்றையும் துறையாகக் கற்றார். சமஸ்கிருத மொழியையும் கற்றுத் தெளிந்தார்.

நாவலர் காலச் சமய நிலை அவரை இல்லற வாழ்க்கையில் புகவிடாமல் பிரமச்சாரியாக இருந்து தமிழ் மொழிக்கும், சைவநெறிக்கும் பெருந்தொண்டாற்றத் தூண்டியது. பார்சிவல் துரை வேண்டுகோளின் படி கிறிஸ்தவர்களின் புனித நூலாகிய பைபிளை தமிழில் மொழி பெயர்த்து, தமிழ் கூறும் நல்லுலகின் பாராட்டையும் பெற்றார்.

தமக்குத் துணையாக நின்று சைவத் தமிழ் தொண்டினை இயற்றத் தகுதியான மாணவர்களைத் தேர்ந்தெடுத்தார். சமய நூல்களையும், நிகண்டு இலக்கணம் முதலியவற்றையும் கற்பித்தார். சமய சொற்பொழிவுகள் மூலம் தாய் மொழியிலும் சுய சமயத்திலும் மக்களுக்கு பெரும் பற்றினை உண்டாக்கினார்.

சைவசமயச் சூழ்நிலையிலே தமிழ்ச் சிறுவர் தாய்மொழியினைக் கற்க வேண்டுமென்று விரும்பினார். யாழ் நகரிலே சைவப் பிரகாச வித்தியாசாலையைத் தொடங்கினார். தமிழ் நாடு முழுவதிலும், சிதம்பரம் முதலிய நகரங்களிலும் சைவப் பாடசாலைகள் அமைய வேண்டிய அவசியத்தை வற்புறுத்தினார். சிதம்பரத்தில் தாமே சைவப் பிரகாச வித்தியாசாலையை அமைத்தார். பள்ளி மாணவர்களுக்கு வேண்டிய நூல்களைத் தாமே எழுதினார். அவ்வகையில் எழுந்தவையே 1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம் பாலர் பாடங்கள். இந்த நூல்கள் இன்றும் தமிழ் கற்போருக்கு சிறந்த கருவியாய் விளங்குகின்றன.

சிறுவர்களுக்கும், முதியோர்களுக்கும் இன்றியமையாத, வேண்டி இருந்த நூல்களைப் பற்றிச் சிந்தித்தார். புதிய நூல்களையும் ஏட்டிலிருந்த பழைய நூல்களையும் அச்சிடுவதற்கு எண்ணினார். சென்னை மாநகரிலே வித்தியானுபாலன் அச்சியந்திர சாலையை நிருவினார். நூல்கலைப் பிழையின்றி அச்சிட்டுதவினார்.

இலக்கன வினாவிடை, இலக்கணச் சுருக்கம், நன்னூற் காண்டிகை உரை முதலிய நூல்களை எழுதி வெளியிட்டார். நன்னூல் விருத்தியுரை, சேனாவரயம் போன்ற பல பழைய நூல்களை எல்லாம் பதிப்பித்தார். செய்யுள் நடையிலே அமைந்த பெரிய புராணம், திருவிளையாடற் புராணம் முதலியவற்றை வசன நடையிலே எழுதியுள்ளார். "தமிழ் வசன நடையைக் கவர்ந்த வல்லான்" என்று பாராட்டியது.

இவரது பணிகளைக் கண்டு திருவாவடுதுறை ஆதீனம் நாவலர் என்ற பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தது இராமநாதபுர சமஸ்த்தான காவலர்கள் நாவலர்நன் முயற்சிகளுக்கு தாமாகவே முன் வந்து ஆதரவு வழங்கினார்கள்.

நாவலரது மதிப்புக்குரிய மகத்தான தொண்டைக் கண்டு அறிஞர்கள் "நல்லை நகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேல் சொல்லுந் தமிழ் எங்கே? சுருதி எங்கே? புராண இதிகாசங்கள் எங்கே? பக்தி உணர்வு எங்கே?" என்று பாராட்டி மகிழ்ந்தனர்.

றுமால் ஜோஷ்வா
ஆண்டு 7Q

சூழலைப் பாதுகாப்போம்

நாம் சூழலைப் பாதுகாப்பது மிகவும் அவசியமானது. சூழலைப் பாதுகாக்காவிட்டால் மனித வர்க்கத்துக்கே அது பெரும் சோதனை விளைவிக்கும். வளி, நிலம், நீர் என்பன கூடியளவு மாசுபடுகின்றது. இதை நாம் தடை செய்ய வேண்டும்.

வளி மாசடைவதற்கு பல காரணிகள் உள்ளன. அவையாவன தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் இரசாயனப் பொருட்கள் கலந்த புகை, விவசாய விசிறு பொருட்கள், பீடை, களைக்கொல்லி என்பன சூழல் மாசடையக் காரணங்களாகும். இவற்றைக் கூடியளவு நிவர்த்தி செய்ய அனைவரும் ஒன்றிணைதல் வேண்டும். வளி மாசடைதலைக் குறைக்க பின்வரும் முறைகளைக் கையாளலாம். இலங்கையில் நீர் மாசடைதலே முக்கிய இடம் வகிக்கிறது. இது கடல் நீர் மாசடைதல், நன்னீர் மாசடைதல் என இரு வகையாகும். முதலில் நன்னீர் மாசடைதலை எடுத்துக் கொள்வோம். நாம் பருகும் நீரை எடுத்துக் கொண்டால் அதுவும் நன்னீர் நிலைகளிருந்து கிடைக்கின்றது. அந்நீர் தூயதாக்கப்பட்டு குழாய்களால் அனுப்பப்பட்டாலும் நாம் அதைக் கொதிக்க வைத்துப் பருகுவதற்குக் காரணம் என்ன? ஆம், அதில் வெற்றுக் கண்ணுக்குப் புலப்படாத பல கிருமிகள் காணப்படும். கிருமிகளை தோன்றக் காரணம் யாது? நாம் நீரிலிடும் குப்பை கூழங்களால் ஈக்கல் தம்முள்ளே வைத்திருக்கும் கிருமிகள் நீரோடு சேர்த்து பலவித நோய்களை ஏற்படுத்தும். மனிதன் தான் பின்பு அதனால் ஏற்படும் நோய்களை அனுபவிப்பது.

நீர் மாசடைதலை தடுக்க நீரில் குப்பை கூழங்களை இடுவதைத் தடுத்தல், இரசாயனப் பொருட்கள் இருந்த கொள்கலன்களை நீரில் இடுவதைத் தவிர்த்தல் என்பவற்றால் நீர் மாசடைவதைக் கூடியளவு தடுக்கலாம். இதனால் வாந்திபேதி, தைரொயிட் காய்ச்சல் பரவுவதைத் தடுக்கலாம்.

காடழித்தலும், மரங்களை வெட்டுவதும் சூழல் மாசடைய இன்னுமொரு காரணியாகும். இதனால் நிலம் வரண்டுவிடும். நீர் நிலைகள் வற்றிவிடும். பனிப்பாறைகள் உருகுவதால் நீர் மட்டம் உயர்ந்து நாடுகள் நீரினுல் மூழ்கி மனிதர் வாழ முடியாத சூழ்நிலை ஏற்படும்.

காடழித்தலைக் கட்டுப்படுத்துவது தனி நபர் ஒருவரால் கூடிய காரியமில்லை. அரசாங்கமே இதைக் கட்டுப்படுத்த முடியும். மரங்களை வெட்டுவதைத் தடுத்தல் என்பவற்றைப் போல இன்னும் சொல்லிக் கொண்டே போகலாம்.

சூழலைப் பாதுகாப்பதற்கு நாம் அனைவரும் ஒற்றுமைப்படல் அவசியம். ஒற்றுமையால் ஆகாதது ஒன்றுமில்லை என்பதற்கிணங்க நாம் ஒற்றுமையால் சூழலைப் பாதுகாக்கலாம்.

ஒற்றுமையே பலன்

ஏரன் ஜோன்
ஆண்டு 7Q

With Best Compliments

from



METCO TRADING COMPANY

Island wide Distributors of

"Moffi", "Fine Fit", "Ever-Fit" & "Lido" Products

All Kinds of Quality Socks, Baby Products & Ready-made Garments etc.

215, 1/6, Second Cross Street, Colombo 11

Tel: 432601, 335460 Fax : 94-1-344050

E-mail : netco@sltnet.lk

கல்வி வகுப்பறையில் மட்டுமல்ல

பாடசாலையில் வகுப்பறையில் ஒரு பாடத்திட்டம் இருக்கும். படிப்பதற்கென்று சில புத்தகங்கள் இருக்கும். பாடத்தின் படி ஆசிரியர்கள் கற்பிப்பார்கள். புத்தகங்களைப் படிப்போம். கணக்குகள் செய்வோம். வாரமுடிவிலோ தவனை முடிவிலோ வருட முடிவிலோ படித்த விடயத்தில் பரீட்சை நடக்கும் கவனமாகவும் திறமையாகவும் படித்தால் சித்தியடையலாம். படிக்காவிட்டால் சித்தியடையாமல் போகலாம். ஆனால் இத்தோடு கல்வி முடிவதில்லை.

செய்திப் பத்திரிகைகள், வார மாத சஞ்சிகைகள், பாடத்தோடு தொடர்பில்லாத அறிவை வளர்க்கும் நூல்கள் போன்றவற்றின் மூலமாக நாங்கள் எத்தனையோ புதிய விடயங்களை அறிய வாய்ப்பு உண்டாகின்றது. வானொலி கேட்டல், தொலைக்காட்சி, திரைப்படங்கள் என்பவற்றைப் பார்த்தல் போன்றவற்றினாலும் எங்கள் கல்வியறிவு வளர்கின்றது.

நாங்கள் வகுப்பறையிலே புதிய இடங்கள், நாடுகள் பற்றியெல்லாம் படிக்கின்றோம். சுற்றுலாச் சென்று அவற்றை நேரில் பார்ப்பதன் மூலம் எமது அறிவு முழுமை பெறுகிறது. புத்தகங்களிலே படிக்கும் போது தெளிவில்லாதவை பலவும் நேரில் காணும் போது தெளிவாகின்றது.

அறிஞர்களின் சொற்பொழிவுகளைக் கேட்டல், அவர்களோடு கலந்துரையாடல், நண்பர்களோடு ஏதாவதோர் விடயம் பற்றி வாதம் செய்தல் ஆகியவற்றாலும் கல்வி வளரும். தொழிலாளர்கள், விவசாயிகள், அலுவலகங்களிலே தொழில் புரிவோர் முதலானோரிடம் நாம் கலந்துரையாடலாம். இவ்வாறு கலந்துரையாடும் பொழுது சில சந்தேகங்களை நீக்கிக் கெள்ளலாம்.

கடைகளுக்கு நேரில் செல்லுதல், பொருட்களை வாங்குதல், அஞ்சலகம், வைத்தியசாலை முதலிய இடங்களுக்குச் சென்று கருமம் பார்த்தல் என்பவற்றாலும் உலக அனுபவம் விரிவடையும். எனவே கல்வி வகுப்பில் மட்டும் கற்பதன்று என்பதை உணர்ந்து மாணவர்களாகிய நாம் பிறவழிகளிலும் கல்வியை விருத்தி செய்தல் வேண்டும்.

"கற்கக்கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத்தக"

"சீனா தேசம் சென்றாலும் சீர் கல்வியைக் கற்றுக் கொள்"

ஒமர்ஷா சாகிர்ஷா
ஆண்டு 7R

With Best Compliments

from

Fahumu Deen

(Chemistry Teacher)

Kotahena - Brilliant
Wellawatte - Sangam
Kandy - Zec

தந்தை தாய் பேண்

"தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை
தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை"

என்பது ஆன்றோர் வாக்கு. இரண்டே இரண்டு எழுத்துக்களால் ஆக்கப்பட்ட தாய் என்ற புனிதமான வார்த்தையில் புதைந்து கிடக்கின்ற தத்துவங்கள் எத்தனை! எத்தனை! அம்மா என்று அழைக்கும் போது வாயில் அமுதூறுவது போல் அல்லவா இருக்கும்?

வீண் இன்றேல் நிலவில்லை
முகில் இன்றேல் மழையில்லை
மொட்டு இன்றேல் மலர் இல்லை
அன்பு இன்றேல் உயிரில்லை
அன்னை இன்றேல் நான் இல்லை

இக்காலத்தில் கடவுள் இருக்கிறாரா? கடவுளை நீ கண்டாயா? என்று கேட்பவர்களுக்கு சரியான பதிலடியாக அமைவது ஔவைப்பாட்டியின் 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்ற பொன் மொழியாகும். ஆம் தாயானவள் எம்மைப் பத்து மாதம் சுமந்துப் பெற்று எடுக்கிறாள். எமக்காக பல மருந்து வகைகளையும் உட்கொண்டு கஷ்டப்படுகிறாள். ஒரு தாய் தன் மகன் அறிஞனாகவும் ஆண் சிங்கமாகவும் இருக்க விரும்புகிறாள். தாய்ப்பாலில் பாலை மட்டுமா ஊட்டுகிறாள்? இல்லவே இல்லை. தன் மகன் அடையவேண்டிய உயர் நிலைக்கு வித்திட்டு அன்பு, கருணை, வீரம் என்பவற்றையும் சேர்த்து ஊட்டுகிறாள்.

"தாய்ப்பாலில் வீரம் கண்டேன்
தாலாட்டில் தமிழைக் கண்டேன்"

என்று கூறியுள்ளார்.

தந்தை வெயில், மழை பாராது நெற்றி வியர்வை நிலத்திலே சிந்த எமக்கு நல்லுணவு, உடை முதலியவற்றைப் பெற்றுத் தந்திருக்கிறார். "தாயோடு அறுசுவைபோம் தந்தையோடு கல்வி போம்" என்ற கூற்றிற்கிணங்க தந்தை தன் மகனை அவயத்தில் முந்தியிருக்கச் செய்பவர்.

இதையே திருவள்ளுவர்,

"தந்தை மகற் காட்டும் உதவி
அவயத்து முந்தியிருக்கச் செயல்"

என்று கூறியுள்ளார்.

எனவே தந்தையும் தாயும் கண் கண்ட தெய்வங்களாகப் போற்றப்பட வேண்டியவர்கள்.

ஈன்றபொழுதில் பெரிதுவக்கும் தன் மகனை
சான்றோர் எனக் கேட்டதாய்

சு. கௌதம்
ஆண்டு 7R

With Best Compliments

from

IBRAHIM EATING HOUSE

(Beruwala Hotel)

* Hotel Fast Food
* Buriyani
* Fried Rice
* Rice & Curry
* Kothu Rotty
* Short-eat Items
* Cool Drinks
* Tea & Plain Tea
* Sweet Items Etc.

* சுட சுட உணவு வகைகள்
* புரியாணி
* பிரய்ட் ரைஸ்
* சோறும் கறியும்
* கொத்து ரொட்டி
* சோர்ட் ஈட்ஸ்
* குளிர்பானம்
* தேனீர்
* இனிப்பும் பண்டங்கள்

ஞாயிறு தினங்களில் கிடுகுச் சாப்பாடு ஸ்பெஷல்

298, 2A, International Buddhist Centre Road, Wellewatta, Colombo 6
(Near Delmon Hospital)
Tel : 01-503792

Head Office:

IBRAHIM EATING HOUSE

(Beruwala Kade)

* Buriyani
* Rice & Curry

* புரியாணி
* சோறும் கறியும்

ஞாயிறு தினங்களில் கிடுகுச் சாப்பாடு ஸ்பெஷல்

25, Symonds Road, Maradana, Colombo 10
Tel : 01-696930

நான் விரும்பும் பெரியார்

தமிழ் வானில் ஒளிவீசும் தாரகை! தன்னிகரில்லாத் தண்டமிழ்க் கவிஞன்! இறவாப் புகழ் பெற்ற அழியாப் படைப்புக்கள் செய்த வரகவி! வான்வரை புகழ் விரித்த பாரதி! இவர் தமிழின் சாரதி! இவரே நான் மிக விரும்பும் பெரியார் ஆவார். இவரது புகழ் வார்த்தைகளில் அடங்காதது. எனினும் சிந்தையில் வந்த சில கருத்துக்களைச் சொல்ல நினைக்கிறேன்.

1882 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 11ஆம் நாள் எட்டயபுரத்திலே பாரதியார் பிறந்தார். சின்னச்சாமி ஐயரும் இலக்குமி அம்மாளும் தவப்பயனால் இவர் தம் பெற்றோராயினர். ஐந்து வயதிலே தாயை இழந்த இவர் தந்தையின் அரவணைப்பில் வளர்ந்தார்.

சுப்பிரமணியன் என்பது இவரின் இளமைப் பெயராகும். பிள்ளைப் பருவத்திலேயே பள்ளிப் படிப்பு இவருக்குப் பாகற்காயானது. குருவிகளையும், அருவிகளையும், நீலக் கடலையும் நெடிய உயர்ந்த மலைகளையும் அவர் விரும்பி இரசித்தார். பாடத் தொங்கினார். இயற்கையின் அழகை இனிய தமிழ்ப் பாடல்களுள் அடக்கினார். சுயமாகக் கவியாற்றல் கொண்டதால் "வரகவி" எனப் புகழப்பட்டார்.

பதினோராம் வயதில் இவருக்கு அவர்தம் பாத்திறமையால் "பாரதி" என்ற பட்டம் பண்டிதர்களால் வழங்கப்பட்டது. பிற்காலத்தில் தன் கல்வித் தகைமைகளை அதிகரித்துக் கொண்டார். இவர் சுதந்திரத்தின் மீது தணியாத தாகம் கொண்டு புரட்சிப் பாடல்கள் செய்தார். அடிமைத் தளைகளால் பிணிக்கப்பட்டிருந்த தமிழரைக் கிளர்ந்தெழச் செய்தார்.

தாளாத வறுமையும் தாங்கெணாத் துன்பங்களும் இவரை வாட்டின. ஆனாலும் இவர் தளராது பற்பல கவிதைகள் செய்தார். இவரது பாப்பாப் பாட்டு, கண்ணன் பாட்டு, குயிற்பாட்டு, பாஞ்சாலி சபதம் போன்ற படைப்புக்கள் பெரும் புகழ் பெற்றன. அத்துடன் "சாதிகள் இல்லையடி பாப்பா" என்று சாதிக் கொடுமைக்கு எதிராக முழங்கினார். பெண் விடுதலைக்காய்ப் பெரிதும் உழைத்தார். புதுமைப் பெண்ணைப் படைத்தார். வசன கவிதைகள் பலவற்றைச் செய்தார். தீர்க்கதரிசனத்தால் சுதந்திர இந்தியாவைக் கண்டு பள்ளுப் பாடல்கள் பாடினார். பல பத்திரிகைகளை நடத்தினார்.

இவர் தந்த ஆக்கங்கள் பலவும் தமிழன்னைக்கு அழகிய ஆபரணங்களாயின. வான்வரை இவரது புகழ் விரிந்தது. இவர் 1921 ஆம் ஆண்டு புரட்டாசி மாதம் 12 ஆம் நாள் இறையடி சேர்ந்தார். ஆனால் காலத்தை வென்ற இவரது கவிதைகளுக்கு இறப்பென்றும் இல்லை. இவர் பற்றிய எண்ணங்கள் என்றென்றும் எம் மக்கள் மனதில் வாழும். இது திண்ணம்.

ஜெ. செந்தூரன்
ஆண்டு 7R

With Best Compliments

from

STANDARD TRADING COMPANY

Importers and Dealers in Engineering Workshop Carpentry and Cutting Tool's, Bolts & Nuts, Welding Equipments, Specialists in PVC Pipe Fitting's Etc.

155E, M.J.M. Lafir Mawatha
(Messenger Street) Colombo 12
Tel : 074-617252 Fax : 726182

நமது கடமை

பள்ளிக்கு செல்லும் சிறுவர் நாம்
பண்புடன் கல்வி கற்க வேண்டும்
வளரும் வயதில் மனதினிலே
வல்லமை கொண்டு வாழ்ந்திடல் வேண்டும்

தமிழ் நாடு என்பது எமது வீடு
தமிழ் இனம் முழுவதும் நம் உறவு ஆகும்
தமிழரைப் போற்றி வாழ்வதே
தமிழ்ப் பாலர் எம் கடனாகும்

ஈராயிரம் ஆண்டின் முன்பே
ஈர்த்து எம்மை நல்வழிப்படுத்தி
அறிவுக் கண்ணை திறந்து நிற்கும்
அற்புதக் குறளைக் கற்றிடல் வேண்டும்

அன்று பொறுமை சால்புடனே
ஆர்வம் நேர்மை முயற்சியுடன்
மங்காப் புகழும் சேர்த்து நாங்கள்
மாட்சியுடனே வாழ்ந்திடல் வேண்டும்

நாளை நாங்கள் கடத்தினால்
காலம் எம்மை கழித்து விட்டு விடும்
அன்றைய செயலை அன்றே முடித்து
அற்புத விளக்காய் திகழ்ந்திடுவோம்

மு. திவாகர்
ஆண்டு 8R

With Best Compliments

from

Mayura Trade Centre

Dealers in Textiles
Fancy Goods & Electronic Items

6, Model Market
Main Street, Nuwara-Eliya
Tel : 052-22466
Fax : 052-23746

எல்லா மதமும் சம்மதமே!

இந்து முஸ்லிம் பௌத்தமும்
எல்லா மதமும் சம்மதமே!
எந்த பேதமும் இனி வேண்டாம்.
எங்கும் சமத்துவம் மலரட்டும்!

சிந்திய இரத்தம் கொஞ்சமல்ல
சிந்தித்துப்பார்த்தால் தவறுமல்ல!
இலங்கைத் தம்பி மறவாதே
இதனை என்றும் நினைவில்வை!

சரித்திரம் நன்றாய்ப் பார்த்துப்பார்
சந்தித்த போர்கள் நினைத்துப்பார்!
வெறித்தனம் தேவையா எண்ணிப்பார்
வென்றிடும் சமத்துவம் ஒன்றேதான்!

M. L. M. யூசுப்
ஆண்டு 8R

அருள் விளக்கேற்றிடுவோம்

மனிதரை மனிதர்
சரிநிகர் சமமாய்
மதிப்பது நம் கடமை
வள்ளுவப் பெருமான்
சொல்லிய வழியில்
வாழ்வது அறிவுடமை

உழைப்பை மதித்து
பலனைக் கொடுத்து
உலகில் போரைத் தடுத்திடுவோம்
அண்ணன் தம்பியாய்
அனைவரும் வாழ்ந்து
அருள் விளக்கேற்றிடுவோம்.

M. ஆடம்
ஆண்டு 6R

With Best Compliments

from



COLOMBO SURVEY CONSULTANTS (PVT) LTD.

**Surveying, Land and Property Sales and Earth Work,
Including Site Preparation, Hiring of
Earth Moving Equipments and Dump Trucks**

21, Hamers Avenue, Colombo 6
Tel : 500551

நான் விரும்பும் தொழில்

உலகில் மனிதனாய்ப் பிறந்த ஒவ்வொருவருமே தமது வாழ்வில் இலட்சியமாக வெவ்வேறு கொள்கைகளையும் தமது ஜீவனோபாயத்திற்காக பல்வேறு தொழில்களையும் நாடுகின்றனர். மனித வாழ்வுக்குத் துணை புரியும் எண்ணற்ற பல தொழில்கள் உலகில் காணப்படுகின்றன. ஒவ்வொருவரும் தமது விருப்பத்திற்கும், ஆற்றல்களுக்கும் ஏற்ற வகையில் ஒரு தொழிலைத் தேர்ந்தெடுக்கின்றனர். அந்த வகையில் நான் விரும்பும் தொழில் மருத்துவத் தொழிலாகும்.

இதை விரும்புவதற்கான காரணம் தன் சுயநலம் பாராது பிறருக்குச் சேவை செய்ய வேண்டுமென்பதே. சிலர் இத்தொழிலை வருவாய்க்காகவே செய்கின்றனர். இன்னும் சிலர் இலட்சிய கொள்கைக்காகவும், சிலர் மற்றவர் சேவைக்காகவும், பயனுக்காகவும் செய்கின்றார்கள். இதற்காகவே வைத்திய தொழிலை நான் விரும்புகிறேன்.

மனிதனுக்கு உடம்பு இன்றியமையாதது. திடகாத்திரமான உடலுள்ளவர்களுக்கு, உறுதியான உள்ளமும் இருக்கிறது. இந்த உடம்பை நோயில் இருந்து பாதுகாக்கவும், நோயைக் குணப்படுத்தவும் மருத்துவம் உதவுகின்றது. ஊதியம் தருவதுடன் மக்களின் நோயைக் குணப்படுத்துபவனும் வைத்தியரே. 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பதற்கு ஒப்பாக அந்தக் குறைவற்றச் செல்வத்தை வைத்தியன் அளிக்கின்றான்.

நோயாளி தாங்க முடியாமல் வரும் போது மருத்துவன் சாந்தியளிக்கின்றான். பணக்காரன், ஏழை என்ற பாகுபாடின்றி மனத்திருப்தியுடன் சேவையாற்றுவது எனது விருப்பம்.

நான் இயற்கையிலே இலட்சியமான மருத்துவத் தொழிலை விரும்புகிறேன். ஆகவே வருவாயும், சேவையும், விருப்பமும் ஒருங்கே அமைந்த இத்தொழில் உயர்ச்சியையும் பலனையும் அளிப்பது திண்ணம்.

சாத்றம்சான்
ஆண்டு 8Q

With Best Compliments

from



CELEBRAZION

Celebrazion

Dealers in Textiles, Ready made Garments
Footwear, Fancy Goods, Electronics
Specialist Wedding & Silk Sarees

26, New Bazaar Street
Nuwara-Eliya, Sri Lanka
Tel : 052-35573, 077-608413

சமாதானமும் புறாக்கறியும்

இன்று உலகில் சமாதானம் என்ற வார்த்தைக்கே அர்த்தம் அடியோடு அழிந்து விட்டது. எந்த மூலை முடுக்கை எடுத்துப்பார்த்தாலும் யுத்தம், யுத்தம், யுத்தம். இதுதான் மலிந்து கிடக்கின்றது.

இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம் என்ன என்று சற்று சிந்தித்துப் பார்த்தோமானால், ஒற்றுமையின்மையே முதற் காரணம் எனலாம். அதாவது சாந்தி, சமாதானம், பரஸ்பரம், நல்லுணர்வு என்பன எங்கேயோ மாயமாய் மறைந்து விட்டன. இதனால் இன்று வீட்டுக்கு வீடு, நாட்டுக்கு நாடு, சமூகத்திற்குச் சமூகம் ஏன் ஆளுக்கு ஆள் கூட ஒற்றுமையின்மையால் அடிபட்டு அல்லோலகல்லோலப்படுவதை நாம் கண்கூடாக் காட்சிகளாகக் காண்கின்றோமல்லவா?

அது மட்டுமா எங்கு பார்த்தாலும் இனப்பிரச்சினைகள், மதப்பிரச்சினைகள், தொழிற் சங்கப் பிரச்சினைகளே அதிகரித்துக் காணப்படுகின்றன. ஏன் இலங்கையை எடுத்துக் கொண்டாலும் கூட இனப்பிரச்சினை தலைவிரித்துத் தாண்டவமாடுகிறது. இதனால் எவ்வளவு அப்பாவி மக்களின் உயிர்கள் பலியாக்கப்பட்டு உடமைகள் சேதமாக்கப்பட்டன? எவ்வளவு மக்கள் தங்கள் தங்கள் சொத்து சுகங்களை இழந்து அகதிகளாக்கப்பட்டனர்?

உதாரணத்திற்கு என்னை எடுத்துக் கொண்டால் நான் யாழ்பாணத்தில் ஒருவயது பச்சிளம் பாலகனாக இருக்கும் போதே சொத்து சுகங்களை இழந்து சொந்த வீட்டைவிட்டு, சொந்த ஊரைவிட்டு அறியாப்பருவத்தில் எனது குடும்பத்தாருடன் வெளியேற்றப்பட்டேன். இதற்குக் காரணம் என்ன? இந்தப் பாழாய்ப் போன யுத்தம் என்பதை எவராலும் மறைக்கவோ, மறுக்கவோ, மறக்கவோ முடியாது.

உதாரணத்திற்கு காகக்கூட்டமொன்றை எடுத்துக் கொண்டால் அவை எவ்வளவு ஒற்றுமையாக தம் இனத்தோடு கூடி வாழ்கின்றன. இந்த ஐந்தறிவு படைத்த ஜீவன்களே ஒற்றுமையாக வாழ்கின்றன என்றால் பகுத்தறிவு படைத்த நமது மனித ஜாதிகளுக்குப் புத்தி எங்கே போய்விட்டது?

இன்று எமது நாட்டில் பேச்சு வார்த்தை நடந்து வருகின்றது. வரவேற்கத்தக்க விடயம். என்றாலும் கடந்த காலங்களிலும் சமாதான முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு சமாதான பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன. ஆனால் வெற்றியளிக்கவில்லை. காரணம் என்னவென்றால் சமாதானப் பேச்சுவார்த்தையின் இடையே புறாக்கறிகளும் பரிமாறப்பட்டன. தற்போது நடந்துவரும் பேச்சுவார்த்தைகளிளாவது புறாக்கறி பரிமாராமல் வெண்புறாக்களைப் பறக்கச் செய்வோம்.

தற்போது எமது இலங்கைக்குச் சமாதானம் எனும் தேரில் வெண்புறாக்கள் வலம் வரவிருக்கின்றன. இவ்வேலையில் மனித நேயம் படைத்த நாளைய தலைவர்களாகிய மாணவர்கள் நாம், சமாதானத் தேரை இழுத்து இலங்கை எங்கும் வெண்புறாக்களைப் பறக்கச் செய்து இச் சமாதானத்தை நிலைக்கச் செய்ய ஒன்றுபட்டுப் பாடுபடுவோம்.

எம். ஐ. இனாமுல் ஹஸன்
ஆண்டு 8R

With Best Compliments

from



NATALIOA

GUEST HOUSE AND RESTAURANT

107, Piyadasa Sirisena Mawatha
(Opp. Ananda College)
Colombo 10, Sri Lanka
Tel : 075-516114, 077-318822
Fax : 075-555656

அன்பு நண்பா

எனது உயிர் நண்பனல்ல நீ - நண்பா
எனது உயிரே நீதானடா - நண்பா

நட்பைப் புரிய வைத்தாயடா - நண்பா
அதை உணர்த்தி நின்றாயடா - நண்பா
அதற்கு உதாரணமாகவும் நின்றாயடா - நண்பா

உன் அருகில் இருக்கும் போது ஏனோ - நண்பா
வாயில் வசைகளே வருவதில்லை - நண்பா

உன் உண்மையுள்ளம் புரிந்ததடா - நண்பா
உன் புரிந்துணர்வும் புரிந்ததடா - நண்பா

பாசம் தன்னை பயில்வித்தாயடா - நண்பா
என்மீது பாசமழை பொழிந்தாயடா - நண்பா

ஒழுக்கம் தனை ஒப்புவித்தாயடா - நண்பா
ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் என்றாய் - நண்பா

பக்குவமாய் பிரதிபலித்தாயடா - நண்பா
பண்புதனை பண்டிதனாய்க் கூறினாயே - நண்பா

நனவினிலே கனவாய் வந்தாயடா - நண்பா
கனவிலும் கனவாய் வந்தாயடா - நண்பா

துன்பத்திலே சிரித்தாயடா - நண்பா
இன்பத்திலும் திருவாய் மலர்ந்தாயடா - நண்பா

தைரியம் தந்தாயடா - நண்பா
தந்திரம் சொன்னாயடா - நண்பா

ரோசமுள்ள நண்பா! நீ என்றும் குழந்தை தானடா - நண்பா
மறுபடியும் சொல்லுகிறேன் - நண்பா

நீ எனது உயிர் நண்பனல்ல - எனது
உயிரே நீதானடா - நண்பா

S. விசாகன்
ஆண்டு 8R

With Best Compliments

from

M/S Sivashamugarajah & Co.

General Merchants & Commission Agents
Co-operative Suppliers
45, 4th Cross Street
Colombo 11
Tel : 436077, 338114

மனதைக் கவரும் மலர்கள்

இயற்கை வனப்புக்கு எழில் ஊட்டி நிற்பன பல. அவற்றுள் தாவர வர்க்கமும் ஒன்று. அதிலும் பூத்துக் குலுங்கும் மலர்களைக் கொண்ட மரம், செடி, கொடிகளென்றால்..... சொல்லவும் வேண்டுமா?.... ஆஹா!.... அற்புதம்!..... அற்புதம்!....

எந்தவொரு மலரென்றாலும் அது மலருமுன் ஓர் அழகு. மலர்ந்து கொண்டிருக்கும் போது ஓர் அழகு. முழுமையாக மலர்ந்த பின் மற்றுமொரு தனியழகு. ரீங்காரம் செய்து வரும் வண்டுகள் தொடக்கம் பெரும் ஆங்காரம் கொண்டு ஆளும் அரசர்கள் வரை மலர்களை விரும்பாதவர் எவருமே இருக்க முடியாது. அப்படி எவரும் இருப்பின் அவர் உயிரற்ற அல்லது உணர்ச்சியற்றவராகத் தான் இருக்க வேண்டும்.

மங்கையரால் பெரிதும் விரும்பப்படும் இந்த மலர்கள் மங்களப் பொருட்களில் ஒன்றாகவும் கொள்ளப்படுகின்றது. மலர் கொடுத்து வரவேற்றல், மலர்ச் செண்டு கொடுத்து வாழ்த்துதல், மலர் மாலை அணிவித்து கௌரவித்தல் போன்ற பல மங்கள காரியங்களுக்கு மலரைப் பயன்படுத்துகின்றார்கள்.

இன்று அநேகர் அந்தூரியம், கானேஷன், ஓர்கிட் போன்ற உயர் ரக மலர்ச்செடிகளை வளர்த்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் நல்ல வருமானத்தைப் பெற்று வருகின்றார்கள்.

மண்ணிலிருந்து பொருள் வரினும் - அதை
மாற்றி மணம் பெறச் செய்திடுவோம்!
கண்ணுக் கினிய நிறங்களெல்லாம் - விண்ணிற்
காணுங் கதிரிடம் பெற்றிடுவோம்

வண்டின் வரவெதிர் பார்த்து நிற்போம் - நல்ல
வாசனை வீதியில் வீசி நிற்போம்!
உண்டு களிக்க மது அளிப்போம்! - சற்றே
உட்காரப் பீடமும் இட்டுவைப்போம்

மன்னரும் கண்டெதிர் வந்திடுவார்! - கட்டி
மார்போட ணைத்து மகிழ்ந்திடுவார்!
இந்நிலத் தின்பம் பெருகிடவே - நாங்கள்
என்றும் உயிர் வாழ்த்தி நடுவோமம்மா!

S. M. இலியாஸ்
ஆண்டு 8R

With Best Compliments

from



Tex Lanka

- Manufacturers of Textiles
- Specialists in Yellow Line Suitings
- Curtain Sateen Materials
- 45 inches Polyester Dress Materials

All Syntetic Cotton Materials

Factory :

St. Mary's Mawatha
Makanduka Road, Badalgama
Tel : 031-99461, 031-98068
Fax : 031-98069

சமாதானம் மலர வேண்டும்

சண்டை போராட்டங்கள்
சாக்கடைப் போல்
ஆக வேண்டும்
அவ்வாறிருக்க எம்மில்
சமாதானம் மலர வேண்டும்

குண்டு வெடியோசை
ஒழிய வேண்டும்
குயில்கள் பாட - மயில்கள்
ஆட இயற்கை செழிக்க வேண்டும்
இதற்கு உலகில்
சமாதானம் மலர வேண்டும்

கருவறையிலே கருகி
சாம்பலாக்கும் வெறிபிடித்த
மனிதர்கள் எரியும்
மெழுகு போல் எரிந்து மடியவும்
கரும்பு போல் எம் வாழ்வு
இனித்திடவும்
இவ்வுலகிலே
சமாதானம் மலர வேண்டும்

வன்முறைகள்
ஓய வேண்டும்
சுயநலம் பிடுங்கி - வேரோடு
அழிந்திட வேண்டும்
எம் வாழ்வில்
மகிழ்ச்சி நிலைத்திட - உலகில்
சமாதானம் மலர வேண்டும்

வீண் பேச்சும்
வேற்றுமை உணர்வும் - மனிதரில்
ஒழிய வேண்டும்
ஒற்றுமை நம் மண்ணில்
தலைதூக்கவே - இவ்வுலகில்
சமாதானம் மலர வேண்டும்

கூனியாயுள்ள மனித
வாழ்வில் இன்றே
கும்பாபிஷேகம் ஒன்றே
நடத்தப்பட வேண்டும்
மனித நேயந்தனை மீண்டும்
ஒளிரூட்ட வேண்டும்
அதற்கு இவ்வுலகிலே
சமாதானம் மலர வேண்டும்

சாலை ஓரம் எங்கும்
சோலை மணம் வீச வேண்டும்
எம் சொந்தமெல்லாம்
ஒன்று சேர்ந்து எம்
தாய் மண்ணில் எங்கும் அலைந்து
திரிந்திட வேண்டும்
சொர்க்கம் போல் இனிதாய்
வாழ்ந்திட இவ்வுலகில்
சமாதானம் மலர வேண்டும்

ஜாதி இன பேதம் - சுடர்
தீயிலே மூழ்க வேண்டும்
சாந்தம் இம்மண்ணில் எங்கும்
பரவிட வேண்டும்
வெள்ளைப் புறாக்கள் சோடியாய்
உலகம் சுற்றி வந்திடவே
இந்த பூவுலகிலே சமத்துவம்
நிறைய மகிழ்ச்சி பொங்க
அகதி எனும் சொல் ஒழிய
இனிய இதமானதொரு நிலையான
சமாதானம் மலர வேண்டும்

ச. அருண்பிரியந்தன்
ஆண்டு 9 Q

With Best Compliments

from

Hansa Travels & Tours

Leading Buddhist Pilgrimage Tours & Travels
Group Organizer in Sri Lanka & India

25/3, Gunasekara Gardens
Nawala Road, Rajagiriya, Sri Lanka
Tel : 888386, 075-350638
Fax : 075-350638

அ(இ)ந்தக் கால நண்பர்கள்

நட்பின் இலக்கணத்துக்கு ஏற்றபடி நடந்தார்கள்,
அந்தக்கால நண்பர்கள்

நட்பின் வரைவிலக்கணத்தை மட்டும் சீராகச் சொல்கிறார்கள்,
இந்தக்கால நண்பர்கள்

நட்புக்காக உயிரையும் கொடுத்தார்கள்,
அந்தக்கால நண்பர்கள்

நட்பை வைத்து உயிரையே வாங்குகிறார்கள்,
இந்தக்கால நண்பர்கள்

தேவையைக் குறிப்பால் அறிந்து உதவி செய்தார்கள்,
அந்தக்கால நண்பர்கள்,

தேவைக்கு மட்டும் குறிப்பறிந்து வந்து ஒட்டி நிற்கிறார்கள்,
இந்தக்கால நண்பர்கள்

செய்த தவறை சுட்டிக்காட்டி திருத்தி வழிநடத்தினார்கள்,
அந்தக்கால நண்பர்கள்,

செய்யாத தவறையும் புறம் நின்று கூறி ஏளனம் செய்கிறார்கள்,
இந்தக்கால நண்பர்கள்

உதவி கேட்டுச் சென்றால் தம்மால் இயலாததையும் செய்தார்கள்,
அந்தக்கால நண்பர்கள்

உதவி கேட்போம் எனத் தெரிந்து இயலாதது போல் நடிக்கிறார்கள்,
இந்தக்கால நண்பர்கள்

அந்தக்கால நண்பர்களை.....
அந்த உலகம் அவர்களின் செயல்களைப் புரிந்து வாழவைத்தது

இந்தக்கால நண்பர்களை.....
இந்த உலகம் இவர்களின் செயல்களை இகழாமலாவது
வாழவைக்கட்டும்.

கோ. துவாரகன்
ஆண்டு 9R

With Best Compliments

from



Ajantha Rest Inn
&
Ajantha Hotels Ltd.

125, Olcott Mawatha
Colombo 11, Sri Lanka
(Opposite to Railway Station)

உள் விளைவு

மரணத்தின் மீதான பயம்
மரணத்தின் பின் என்ன நேருமோ என்பது தான்

மரணம் அருகில் வரும் போது தான்
இந்தப் பயம் கூட ~ இல்லாத பொழுது
நாம் மரணத்தை மறந்து தான் வாழ்கின்றோம்

எனதான ஒரு நாளில்
சாதாரணமாக, மரணபயமற்றவனாக
என் செயலனைத்தையும் செய்கிறேன்

எந்த விதமான கெடுதலும், துயரும்
இல்லாத நாளாக
சாந்தமாக அமைந்தது அந்நாள்

இந் நன்நாளின் இரவில்
ஆழ்ந்து தூங்குகையில்
பெரும் கெடு கனவு காண்கின்றேன்

அத்தனையும் இந்தச் சாந்தமான நாளின்
நிகழ்வுகளின் எதிர்மாற்றமாக
எப்படி எங்கிருந்து கிளர்ந்ததிது

ந. ரகுநாத்
ஆண்டு 10R

With Best Compliments

from

General Traders

59/7, New Moor Street, Colombo 12
Tel : 0777-769506

எதிர்காலம் எம் கையில்

ஆண்டு 11 இல் பரீட்சை எடுக்கின்ற ஒவ்வொரு மாணவனதும் குறிக்கோள் 10 "A" எடுக்காவிட்டாலும் குறைந்தது ஆண்டு பன்னிரெண்டை தொடரக்கூடிய நல்ல பெறுபேறுகள் கிடைக்கவேண்டும் என்பதே. அடுத்து வரும் உயர்தர பரீட்சையில் அதியுயர் புள்ளிகள் பெற்றால் மட்டுமே பல்கலைக் கழகம் வரவேற்கும்.

பல்கலைக்கழகம் பட்டம் பெற்றதோடு ஒருவரது தேவைகள் முடிவடைவதில்லை. பட்டத்திற்கேற்ற பதவி, பட்டம். தொடர்ந்து திருமணம், குடும்பம். என இவ்வாறாக எதிர்காலம் என்ற ஒன்றை எதிர்பார்த்து, எடைபோட்டு ஏற்றமுறுபவனும், ஏமாறுபவனும் சமுதாயத்தில் உள்ளதைக் காணலாம்.

இறந்த காலம் வரப்போவதில்லை. எதிர்காலம் தெரிவதில்லை. நிகழ்காலம் ஒன்றே கண்டுகொண்டிருப்பது. கடந்த காலத்தைப் பற்றிக் கவலைப்படுவதும், எதிர்காலத்தைப் பற்றி ஏங்குவதும் ஒருவரை அமைதியற்றவராக்கிவிடும்.

உன்மையில் ஒருவரின் எதிர்காலம் யார் கையில் உள்ளது? பெற்றோரிலா? ஆசிரியரிலா? அல்லது அடுத்தவர் கையிலா? இதற்கான விடையுடன் வருகிறது குட்டிக் கதையொன்று.

அவரை ஒரு சோதிட மேதை என்றே கூறிவிடலாம். எதிர்காலத்தைப் பற்றி ஏராளமாகக் கூறி தாராளமாக உழைத்தார். "வாழ்ந்தாலும் ஏசும் தாழ்ந்தாலும் ஏசும்". பொறாமை யாரைத்தான் விட்டது. ஆம், சோதிடரை சோதித்துப் பாதிப்படையச் செய்வதென்று பள்ளி மாணவர் இருவர் திட்டம் தீட்டினர். ஒரு மாணவன் தனது காற்சட்டைக்குள் சிட்டுக்குருவி ஒன்றை மறைத்து வைத்துக் கொண்டு அடுத்த மாணவரோடு சோதிடரிடம் சென்றான்.

"ஐயா சோதிடரே, நீர் எதிர்காலம் பற்றி எள்ளளவும் பிழையின்றிக் கூறுவீராமே, அப்படியாயின் இவன் காட்சட்டையில் இருக்கும் சிட்டுக்குருவி உயிருடன் உள்ளதா? அல்லது இறந்துள்ளதா என்று கூறும்" என்றான்.

"மாணவர்கள் சோதிடனையா சோதிக்கிறார்கள்? அவர்களின் திட்டம் என்ன என்பதை அறியாத மடையனா நான்" என மனதுக்குள் நினைத்துக் கொண்ட சோதிடர் "சிட்டுக்குருவியின் எதிர்காலம் (வாழ்வும், சாவும்) இம்மாணவனின் கையில் உள்ளது" என்றார். மாணவர்கள் திகைத்துப் போனார்கள்.

ஒருவர் தனது எதிர்காலத்தைத் தானே தீர்மானிக்க வேண்டும். நல்ல எதிர்காலத்தை ஏற்படுத்துவதும் நட்டாற்றில் வீழ்த்துவதும் அவரவரைப் பொறுத்ததே. உலகில் வாழ்ந்த, வாழ்ந்து கொண்டிருக்கின்ற பெரியோர்களின் சரித்திரம் இவ்வுண்மையை, புரிய வைக்கும்.

ஒருவன் எதை நினைக்கிறானோ அவ்வாறே வந்துவிடுகிறான். "நம்பிக்கை நல்வழி காட்டும். சந்தேகம் சங்கடத்தைத் தரும்" எனும் வாசகங்கள் ஆழ்ந்து சிந்திக்கப்பாலானது. மேலும் "உன்னை உன்னாலேயே உயர்த்திக்கொள், உன்னை இழிவுபடுத்தாதே, நீயே உனக்கு நண்பன், நீயே உனக்குப் பகைவன்" போன்ற அறிவுரைகளும் இங்கு குறிப்பிடப் பொருத்தமாகும்.

நாம் எப்பொழுதும் நல்லதையே சிந்திக்க வேண்டும். சிந்திப்பதோடு நில்லாது அவற்றுக்கு செயல் வடிவம் கொடுக்க வேண்டும். அதன் மூலமே நாம் மேன்னைம அடைகின்றோம். "நாலுபேர் மெச்ச வாழ்" என்பது முதுமொழி. இந்த நால்வரும் யார்? அவர்கள் முறையே மாதா, பிதா, குரு, தெய்வம் என்பவர்களாவர். அன்பைப் பெற்றுக் கொண்ட அன்னையை முதலிலும், அன்னை மூலம் தந்தையையும், தந்தை மூலம் குருவையும் காண்கின்றோம். இம்மூவரையும் முறையே கண்டவர்கள், அதாவது பணிவோடு நடந்துகொண்டால் தெய்வத்தைக் காணலாம் என்பதாகும்.

ஆறுவயதிலே ஆரம்பக் கல்விக்காகச் சிறுவர்கள் பாடசாலையில் சேர்க்கப்படுகிறார்கள். கல்விச் செல்வம் ஒன்றே அள்ள அள்ளக் குறையாததும் புகழ்மிக்கதும். கல்வியின் சிறப்புப் பற்றி அறிஞர், பெரியோர்கள் ஆண்டாண்டு காலமாகக் கூறி வந்துள்ளனர். "இளமையில் கல்" என ஔவைப் பாட்டியும் "ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு எழுமையும் ஏமாப்பும் உடைத்து" என வள்ளுவப் பெருந்தகையும் கல்வியின் மேன்மையைச் சுட்டிக் காட்டியுள்ளனர்.

நினைப்பதெல்லாம் நடப்பதில்லையே என்று சிந்தியாது, நினைப்பவற்றைச் சிந்திப்போம். இவ்வாறு செல்கையில் வருகின்ற சவால்களைச் சமாளிக்க மனதைத் திடப்படுத்துவோம். இதற்கு மனதில் உறுதி வேண்டும், தளர்ந்து போகக் கூடாது.

வாழ்க்கை என்பது பூக்கள் நிறைந்த பூங்காவல்ல. கூடவே முற்களும் நிறைந்தது என்றார் ஒரு பெரியார். சுருங்கக்கூறின் மேடு பள்ளம் உள்ளதுதான் வாழ்க்கை என்பது.

எமது முன்னேற்றம் எமது கையிலேயே உள்ளது. உயர்வாகச் சிந்திப்போம், ஊக்கமுடன் உழைப்போம், உயர்வடைவோம். அதன் மூலம் எமது பெற்றோருக்கும் எமது கல்லூரிக்கும் பெருமை தேடிக் கொடுப்போம்.

முயன்றால் முடியாததும் முடியும்!

அ. விசாகன்
ஆண்டு 10R

ஜன்ம பூமி

பன்னிரண்டு வருடங்கள் பறந்ததுவே வீட்டைவிட்டு....
பதினாறு வயததுவும் நிறைந்தது இந்நாட்டி லுற்று.....
கண்ணிரண்டில் வழிந்தோடும் கண்ணீரில் மாலைகட்டிக்
கடவுளவன் எமக்கிட்ட தலைவிதிக்குச் சூட்டி வைத்தோம்!

நன் மண்ணாகத் திகழ்ந்த பூமி
செம் மண்ணாகக் கிடக்க..... மீண்டுமென் பாதங்களை.....
அம் மண்ணில் பதித்தேன்...
பதினொரு வருடங்களுக்கு முன்பு.....

பாலகனாய் நின்ற ஞாபகம்..... என்....
பாதங்களைப் பார்த்துச் சிரிக்கிறது.. அந்த
மண்மகளின் பூ முகம்....
நானும் சிரித்தேன்.....

நீண்டகாலப் பிரிவு கண்ணீராய் ஊற்றெடுக்க.....
மாண்ட என் உறவு மீண்டும் உயிர்த்தெழுந்தது
மண்மகளின் மேனியின் சிவப்பு.... அதைக்காண
என் மனத்திற்கோ வெறுப்பு

குருத்து வருமுன்னே வேரைப் பிடுங்கும்
கொலைஞர்களுக்கும் இடங்கொடுத்து
வாழ வழிசமைத்து, சோகவிழி படைத்து....
ஆறாத ரணங்களையும் மாறாத வடுக்களையும்
மார்பில் சுமந்து கொண்டிருந்த என் ஜென்மபூமி

பிணங்களே பசளையானதால் நீண்டுயர்ந்த
பனங்காடுகளும் பற்றைகளும்....
குடியழிந்து போன எங்குல மக்களுக்குப் பதிலாகக்
குடி புகுந்து நின்ற கோடாலிப் பாம்புகளும்.....
இவையெல்லாம் என் கண்முன் தோன்ற.....

என் பாதச் சுவடுகள் பதிந்த இடங்களைப்
பார்வையிடாது தடுத்த பாதகர் தடைகளும்.....
மீண்டும் நான் பதித்து வந்த பாதச் சுவடுகளைப்
பற்றைகள் பற்றும் நிலைகளுமா நிரந்தரம்?

மீண்டுமென் வருகைக்கு காத்திருக்கும் மனத்தோடு
விடை கொடுத்த ஜன்ம பூமி.....
மீட்டுகின்ற சோகராகம்...
எனக்கு மட்டுமா கேட்கிறது சாமி?

அ. ஹரிஷன்
ஆண்டு 11Q

With Best Compliments

from

SELVO ENTERPRISES

Dealers in all Kind of Electrical Goods

130/9/2, Main Street
Jazima Arcade, Colombo 11
Tel : 074-714183

காவியங்கள் சூடுகின்றேன்!

நடன மோஹனா! - ஹே!
நடனம் நீயடா! - உந்தன்
நளின மிக்க நடனம் கண்டு
உறங்கு வேனடா!

நீ சிரிக்கும் சிரிப்பைக் கண்டு
சிற்பங்களும் தலையசைக்கும்,
நீ பேசும் அழகைக் கண்டு
சித்திரமும் தாளமிடும்

தாய் மண்ணில் நீ நடந்தால்.....
புற்றரைக்கும் புல்லரிக்கும்....
பாய் தன்னில் நீ தவழ்ந்தால்
பாறைகளும் முச்சு விடும்

உன்விழியை என் விழிக்குள்
நான் தொலைத்துத் தேடுகின்றேன்.....
உறங்காயோ! என் மகனே!
உணர்வழிந்து வாடுகின்றேன்.....

கண்மணியே! கற்பகமே!
என்றுன்னைப் பாடுகின்றேன்
கண்வளராய் என் மகனே!
காவியங்கள் சூடுகின்றேன்!

அ. ஹரிஷன்
ஆண்டு 11 Q

With Best Compliments

from



WILLS TRAVELS (PVT) LTD

93, Chatham Street, Colombo 1, Sri Lanka
Tel : 422979, 431162, 421158, 347054
Direct : 451626 Fax : 421180
E-mail : wills@isplanka.lk

With the Best Compliments

of

Mrs. R. Shanmugananthan

With Best Compliments

from

Mrs. S. Amirthalingam

With the Best Compliments

of

ARTHUR TOURS

184, Galle Road, Colombo 6
Tel : 582978, 363796, 360797

With Best Compliments

from

Amman Gold Jewellery

අම්මන් ගෝල්ඩ් ජුවලරි

அம்மன் கோல்ட் ஜுவலரி

150, Galle Road, Wellawatta, Colombo 6
Tel : 554869

With the Best Compliments

of

Jewel Mark Creations

Importers, Exporters and Manufacturers of Gems and Jewellery

171/1, Sea Street
Colombo 11



With Best Compliments From

VIRAKESARI
வீரகேசரி
THE PREMIER TAMIL DAILY IN SRI LANKA

வார வெளியீடு
வீரகேசரி
THE VIRAKESARI ILLUSTRATED WEEKLY

மித்திரன்
வாரமலர்
MITHIRAN VARAMALAR

EXPRESS NEWSPAPERS (CEYLON) LTD.

#185, Grandpass Road, Colombo-14, Sri Lanka.
Tel : 320881-3, 439985-6. Fax : 448205, 439987.
E-mail : kesari24@virakesari.lk
Branches : Wellawatte-074-513515, Kandy-08-222607,
Batticaloa-065-22109, Jaffna-021-2730.
Website : www.virakesari.lk

With best compliments

from

Year 1J

வகுப்பாசிரியரதும் மாணவர்களினதும்

வாழ்த்துக்கள்

வகுப்பாசிரியர்
திருமதி S. கோபாலகிருஷ்ணன்





பாடசாலைக்குள்ளான "தமிழ்த்திறன் காண்" போட்டி முடிவுகள்

தரம்	நிலை	சொல்வதெழுதல்	கட்டுரை
1H	1	V. சாருந்தன்	S. துஷ்யந்தன்
	2	T. ஹரிசுதன்	S. பிரசாந்த்
	3	R. ராகுல்	V. சுஜீவன்
1J	1	I. ஹஸன் அலி	S. சேஷம்
	2	G. ஹரினாத்	S. துஷ்யந்தன்
	3	J. கவின்	T. காந்தரூபன்
2H	1	A. செந்தூரன்	I. இனாஸ்
	2	M. பானுகோபன்	S. அருஷன்
	3	M. முன்ஷிவ்	V. ஜீவிதூஷன்
			N. அஷ்வந்த்
2J	1	M. Z. K. ஸீஷான்	K. விவேஷ்
	2	R. கோகுல்கோபிராம்	S. பாலகஜன்
	3	S. சஷிசேகர்	S. இமாட் மொஹிதீன்
		A. ஷம்லி	M. S. M. முஆத்
3H	1	J. பிரவீன்	J. பிரவீன்
	2	S. சேயோன்	A. ரொனி
	3	T. திவ்யன்	S. சேயோன்
3J	1	A. R. R. அஹமட்	R. ராகுலன்
	2	M. A. அலதாஸ்	J. அபிராம்
	3	R. ராகுலன்	M. I. M. ஷகீர்
		R. அருண்தீப்	I. M. இன்பாஸ்

தரம்	நிலை	பேச்சு	பொது அறிவு
4H	1	B. அஜன்	N. டிலுக்ஷன்
	2	K. R. ரமணன்	S. அருணோதயன்
	3	I. இம்தியாஸ்	F. M. ஹன்ஸலா
		V. வெங்கட்	
4J	1	R. ஸ்ரீகணேசன்	B. கேருசாந்த்
		N. பிரவீன்	
	2	–	T. ஹேஷ்மன்
	3	M. அகீல் அஹமட்	N. பிரவீன்
		B. சிவாஸ்	

தரம்	நிலை	பேச்சு	கட்டுரை
5H	1	P. சுசாந்தன்	S. திவ்யகாஷ்
	2	M. துவாரகன்	P. தனுஷன்
	3	M. A. A. ஷாதிர்	T. துவீல்
		S. அப்னேஷ்	P. ஹரேந்திரா
5J	1	T. ஹெஷோபன்	T. ஹெஷோபன்
	2	R. தர்ஷன்	S. லவன்
	3	S. வேணுசஜன்	M. S. A. ஷகூர்
			M. A. M. செஷான்

பாடசாலைக்குள்ளான "தமிழ்த்திறன் காண்" போட்டி முடிவுகள்

கீழ்ப்பிரிவு

கவிதை	1ம் இடம்	-	M. பிரணவன்
	2ம் இடம்	-	S. விசாகன்
	3ம் இடம்	-	T. லுஷாந்தன்
கட்டுரை	1ம் இடம்	-	S. பாலமயூரன்
	2ம் இடம்	-	J. முகுந்தராஜ்
	3ம் இடம்	-	S. உமாசங்கரன்
	3ம் இடம்	-	M. மயூரேசன்
சிறுகதை	1ம் இடம்	-	S. அர்ச்சுனா
	2ம் இடம்	-	S. சிவசங்கரன்
	3ம் இடம்	-	S. ஜீவகன்
பேச்சு	1ம் இடம்	-	S. சிவசங்கரன்
	2ம் இடம்	-	P. ஜெயமயூரேஷ்
	3ம் இடம்	-	S. பாலமயூரன்
	3ம் இடம்	-	J. முகுந்தராஜ்

மத்திய பிரிவு

கவிதை	1ம் இடம்	-	S. சூரியபிரதாப்
	2ம் இடம்	-	A. ஹரிஷன்
	3ம் இடம்	-	S. அர்ச்சுனா
கட்டுரை	1ம் இடம்	-	P. பிரணவன்
	2ம் இடம்	-	S. சதானந்த்
	3ம் இடம்	-	R. M. ரிப்தி
சிறுகதை	1ம் இடம்	-	N. பிரசன்னா
	2ம் இடம்	-	S. ரவிசங்கர்
	3ம் இடம்	-	S. சுபசங்கர்
பேச்சு	1ம் இடம்	-	N. பிரசாத்
	2ம் இடம்	-	M. S. M. சபான்
	3ம் இடம்	-	S. அருண்பிரியந்தன்

மேற்பிரிவு

கவிதை	1ம் இடம்	-	V. விமலாதித்தன்
	2ம் இடம்	-	M. அசீம்
	3ம் இடம்	-	J. ரோகணகுமார்
கட்டுரை	1ம் இடம்	-	N. நிஷாந்தனன்
	2ம் இடம்	-	M. A. M. டில்பர்
	3ம் இடம்	-	M. சந்திரகாந்த்
சிறுகதை	1ம் இடம்	-	P. சுந்தரகுமார்
	2ம் இடம்	-	S. கஜன்
	3ம் இடம்	-	N. கோபினாத்

பாடசாலைக்குள்ளான விவாதப் போட்டி முடிவுகள்

1ம் இடம்	-	R. சத்தியானந்தன்
	-	P. விகாஷ்
	-	S. மகாரமணன்
	-	N. பிரசன்னா
2ம் இடம்	-	A. ரஜீவன்
	-	M. ரிகாஸ்
	-	P. சுந்தரகுமார்
	-	S. சூரியபிரதாப்
3ம் இடம்	-	T. ஜெயப்பிரகாஷ்
	-	T. கோகுலரமணன்
	-	M. A. M. டில்பர்
	-	T. ஸ்ரீரமணன்

பல்வேறு சிரமங்களின் மத்தியிலும் நடுவர்களாக கடமையாற்றிய ஆசிரியர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகள்.

வெற்றியீட்டிய மாணவர்களுக்கு எமது வாழ்த்துக்கள்

செயற்குழு 2002

With the Best Compliments

of

M. S. Expo (Pvt) Ltd.

Agents and Distributor for
SKS HOTEL BANQUET FURNITURE from Malaysia

S-2/8, Anderson Flats
Colombo 5
Tel/Fax : 500888
E-mail : shaans@slt.lk

பாடசாலைக்குள் நடாத்தப்பட்ட போட்டியில்
கீழ்ப்பிரிவில் முதலிடம் பெற்ற கட்டுரை

விந்தை செய்யும் விஞ்ஞானம்

நாம் பிறக்கின்றோம், வாழ்கின்றோம், இறக்கின்றோம். இவற்றில் வாழ்வுக்கும் சாவுக்கும் இடையில் நாம் செய்யப் போகும் சாதனை தான் எமது வரலாற்று ஏட்டில் பதியப் போகும் சிவப்புள்ளியாகும். இவ்விடைப்பட்ட காலத்தில் எமது வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் எமது உடலுடனும், உள்ளத்துடனும், பௌதீகச் சூழலுடனும் ஒன்றித்து நிற்பது விஞ்ஞானம் ஆகும். இந்த விஞ்ஞானம் சகல துறைகளிலும், சகல பாடங்களிலும் மறைமுகமாகவோ, நேரடியாகவோ ஒன்றித்துள்ளது.

தற்போது நம் நாட்டில் உள்ள விஞ்ஞான வளர்ச்சி போல் பண்டைக் காலத்தில் இருக்காவிட்டாலும், சில்லும் அச்சாணியும் பாவித்தல், வண்டிச் சில்லுக்கு இரும்பு வளையம் போடும் முறை போன்றவற்றின் மூலமும் பண்டைக் காலத்தில் விஞ்ஞானத் தொழில்நுட்பத்திறன் இருந்திருப்பதை அறியலாம்.

பண்டைக் காலத்திலிருந்து படிப்படியாக வளர்ந்து வந்த விஞ்ஞானம் இடைக்காலத்தில் தோன்றிய சில விஞ்ஞானிகள் மூலம் வலுப்பெற்றது. உயிரையே பணயம் வைத்து பல விஞ்ஞானிகள் பரிசோதனை செய்ததனால் பல பரிசோதனை அடிப்படையிலான தீர்க்கமான முடிவுகள் வலுப்பெற்றன. விஞ்ஞானத்தின் பிறப்பிடம் தோல்வியாகும். ஒரு தோல்வியை சந்திக்கும் போது தான் வெற்றி பெற வேண்டுமென்ற வைராக்கியம் ஏற்படும். அதேபோல் தான் தோல்வியிலிருந்து விடுபட விரும்பிய தோமஸ் அல்வா எடிசனால் மின்குமிழை கண்டுபிடிக்க முடிந்தது. ஒரு நாள் விட்டில் தீப்பெட்டி தீர்ந்து போனதால் படிக்க முடியாத நிலைகுள்ளாக்கப்பட்ட எடிசன் அடுத்த நாள் சோதனையில் பிரகாசிக்கவில்லை. அதனால் கவலையுற்ற எடிசன் பல இன்னல்களுக்குப் பின் இழை விளக்கைக் கண்டுபிடித்தார். மின்னல் தாக்கியதால் ஒருவர் இறந்தமையால்தான் பெஞ்சமின் ப்ராங்க்ளின் மின்னற் கடத்தியைக் கண்டுபிடித்தார். இவ்வாறே விஞ்ஞானிகள் ஒவ்வொருவரும் தோல்விக்குப் பின்னால்தான் விஞ்ஞானி ஆயினர். மற்றும் சிந்தனைத் திறன் மிக்க ஐசக் நியூட்டன் சாதாரண ஆப்பிள் பழத்தைப் பற்றி சிந்தித்து ஈர்ப்பு விசையைக் கண்டுபிடித்தார். இவ்வாரே பலரின் முயற்சியின் விளைவால் வலுப்பெற்ற விஞ்ஞானம் இன்றைய உலகில் முதலிடத்தைப் பிடித்திருக்கிறது.

நிலாவைக் காட்டி பந்து எனக் கூறி சோறூட்டிய காலம் போய் நிலாவிலேயே பந்தடிக்கும் காலம் வந்து விட்டது. எதிரிகளை அம்பு விட்டு தாக்கும் காலம் மறைந்து அணு ஆயுதங்களையும், உயிரியல் ஆயுதங்களையும் ஏவி விடும் காலம் வந்து விட்டது. பொதுவாகக் கூறப் போனால் விஞ்ஞானம் தற்போதுக் கொடி கட்டிப் பறக்கிறது.

"முயற்சி தான் விஞ்ஞானம்"

என்ற நியூற்றனின் கூற்றிற்கிணங்க தற்போது பல நிறுவனங்கள் புதுப்புது கண்டுபிடிப்புகளை மேற்கொள்கின்றன.

தற்போதைய மனிதர்களின் நண்பர்களாகத் திகழ்வது கணணியாகும். இது 1952ல் கண்டுபிடிக்கப்பட்ட விஞ்ஞான ரீதியான இயந்திரமாகும். கணணி தற்போதைய சமூதாயத்தில் இன்றியமையாத ஒரு பொருளாகத் திகழ்கின்றது. சமையற் துறையில் ப்ளெண்டர், மின் சோற்றடுப்பு போன்ற உருவில் விஞ்ஞானம். தொழிற் துறையை நோக்கினால் கணணி, குளிரூட்டி போன்றவற்றின் உருவில் விஞ்ஞானம். கல்வி நிறுவனத்தில் பார்த்தால் அமிலங்களின் உருவில் விஞ்ஞானம். வீட்டில் பார்த்தால் தொலைக்காட்சி, தொலைபேசி உருவில் விஞ்ஞானம். வானத்தைப் பார்த்தால் செய்மதி, ஏவுகணை உருவில் வானத்தைத் துளைக்கும் விஞ்ஞானம். பொதுவாகப் பார்த்தால் உலகத்தில் மனிதரைவிட விஞ்ஞானமே பல இடங்களை நிரப்பியுள்ளது.

விஞ்ஞானத்தில் பல நன்மைகள் உள்ளன. அதே விஞ்ஞானத்தால் பிரதி விளைவுகளுமுள்ளது. விதியால் வெல்ல முடியாத எதையும் விஞ்ஞானம் வென்று விடும்.

விஞ்ஞானத்தில் பல பிரதி விளைவுகளும் அடங்கியுள்ளது. உலகத்தை ஒரு நொடியில் தூளாக்கக் கூடிய பல ஏவாயுதங்கள் இந்த விஞ்ஞானம் மூலம் ஆக்கப்படுகின்றன. தொழிற்சாலைகளும் வாகனங்களும் வெளிவிடும் புகைகள் மூலம் ஓசோன் படலத்தில் பல துவாரங்கள் ஏற்பட்டு சூரியனின் புற-ஊதாக் கதிர்கள் பூமியை வந்தடைகின்றன. ஜப்பானில் ஹிரோஷிமா, நாகசாக்கி என்னும் இடங்களில் விழுந்த அணுகுண்டின் மூலம் இரு நகரங்களிலும் பாரிய உயிரிழப்புகள் ஏற்பட்டதோடு, இன்னும் பல குழந்தைகளின் ஊனத்திற்கும் அது காரணமாகின்றது. இந்த விஞ்ஞானத்தின் வருகையாலும், வளர்ச்சியாலும் இப்பூமி பெரிய அளவில் இயற்கை ஆபத்தை எதிர்நோக்குகிறது.

ஆனால் இவ்வளவு அழிவுகளுக்கும் காரணம் விஞ்ஞானம் மட்டுமல்ல, மனிதனின் மூளையும்தான். எதையும் நல்ல முறையில் பயன்படுத்துவது தான் மனிதனின் குணம். சாதனை பல படைக்கும் விஞ்ஞானத்தை மதித்து, காத்து விஞ்ஞானத்தின் விந்தையை வளரச் செய்வதே ஒரு விஞ்ஞானம் கற்கும் மாணவனான எனது கடமையாகும்.

இத்துடன் எனது கட்டுரை முடிந்தாலும் விஞ்ஞானத்தில் விந்தை தொடரும்.

S. பால்மயூரன்
ஆண்டு 8R

பாடசாலைக்குள் நடாத்தப்பட்ட போட்டியில்
கீழ்ப்பிரிவில் முதலிடம் பெற்ற சிறுகதை

தெருப் பிச்சைக்காரன்

"அம்மா தாயே இரண்டு நாட்களாக சாப்பிடவில்லை ஏதாவது தந்தால் புண்ணியமாகப் போகும்" என்று வாசலில் இருந்து ஒரு சத்தம் வந்தது. "அடியே விசாலாட்சி அந்த சோமு பிச்சைக்காரன் வந்துவிட்டான் போல. ஏதாவது கொடுத்தனுப்பு" என்று கூறினார் சண்முகம். "இந்தா இதைக் கொண்டு போய்த் தின்" என்று பழஞ்சோறை பிச்சைக்காரனின் தட்டில் வேகமாக கொட்டினாள். சோமு அதை வாங்கிக் கொண்டு அங்கிருந்த அரசமரத்தடியில் கொண்டு போய்ச் சாப்பிட்டான். அப்போது அந்த மரத்தின் மீது அமர்ந்திருந்த காகம் அந்த சோற்றினுள் எச்சம் இட்டது. சோமு அந்தச் சோற்றை அப்படியே குப்பைக்குள் எறிந்தான். அவனுடைய கண்களில் இருந்து கண்ணீர் பொல பொல என வழிந்தது. தானும் தன் தந்தையும் விட்ட பிழையால் தான் இப்படி ஆகவேண்டிவிட்டது எனத் தன்னையும் தந்தையையும் திட்டினான். அவனது மனம் இப்போது தனது கடந்த காலத்திற்குச் சென்றது.

கோலையூர் எனும் கிராமத்திலே "சிவலிங்கம் ஜமீந்தார்" என்றாலே அந்த ஊர் மக்கள் தலையில் உள்ள தலைப்பாகையைக் கழற்றி இடுப்பில் கட்டி வணக்கம் செலுத்தும் அளவிற்கு அவரின் மதிப்பும் மரியாதையும் உயர்ந்திருந்தது. அவர் ஏழை ஜனங்களுக்கு உதவுகிற படியால் அவரை எல்லோரும் மதித்தார்கள். ஆனால் அவருக்குப் படிப்பறிவு இல்லை. அவருக்கு மகனாக பிறந்தவன் தான் இந்தச் சோமு. தான் படிக்காவிட்டாலும் தன் மகன் சோமுவை நன்றாகப் படிக்க வைக்க ஆசைப்பட்டார் சிவலிங்கம். ஆனாலும் சோமுவுக்கு படிப்பு ஏறவில்லை. தானும் பாடசாலையை விட்டு அப்பாவோடு சேர்ந்து கொண்டான். அப்பா எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் அவன் கேட்கவில்லை. அவனை அடித்துத் திருத்த முற்பட்டவேளை அவனின் மனைவியான ரஞ்சிதம் தடுத்துவிட்டாள். சிவலிங்கத்திற்கு ஒரு தம்பி இருந்தான். அவன் பெயர் கௌசிகன். அவன் மிகவும் படிப்பறிவு உள்ளவன். தனது அண்ணனின் சொத்துக்கள் முழுவதையும் பறித்துவிடத் தீர்மானித்தான். அதற்காக தகுந்த சந்தர்ப்பத்தை எதிர்ப்பார்த்துக் காத்திருந்தான். ஒருநாள் வெற்றுப் பத்திரத்தில் கைநாட்டு வாங்கிக் கொண்டு சொத்தைத் தான் எடுத்துக் கொண்டு ஊரை விட்டு அண்ணனின் குடும்பத்தைத் துரத்தினான். சிவலிங்கம் மிகுந்த கஷ்டம் அடைந்தார். தன் தம்பி தனக்கு இப்படிச் செய்வான் என்று அவர் கனவில் கூட நினைக்கவில்லை. இதனால் தற்கொலை செய்யும் நோக்கில் ஓர் ஆற்றில் மூவரும் குதித்தனர். மூவரையும் ஆறு வேகமாக இழுத்துச் சென்றது. ஆனால் விதி, சோமு ஒரு கரையில் ஒதுங்கினான். மற்ற இருவரும் எங்கோ சென்று விட்டனர். அன்றிலிருந்து சோமு பிச்சை எடுத்துச் சீவிக்கலானான். தனது சித்தப்பா கிடைத்தால் அவனைக் கொல்லுவேன் என்றும் தனது பெற்றோர்கள் என்றைக்காவது திரும்பி வரமாட்டார்களா என்ற நம்பிக்கையோடும் காத்திருக்கிறான் சோமு. பீ....பீ..... என்ற காரின் ஓசை அந்த பிச்சைக்காரனின் மனதை இயல்பு நிலைக்குக் கொண்டு வந்தது. அவன் சிரித்தான்.

S. அர்ச்சுனா
ஆண்டு 8Q

With Best Compliments

from



MEMCO ELECTRICALS

Importers and Dealers in Electrical Goods

116/22, 1st Cross Street
Colombo 11
Tel : 447485

பாடசாலைக்குள் நடாத்தப்பட்ட போட்டியில்
கீழ்ப்பிரிவில் முதலிடம் பெற்ற கவிதை

வாழ வழி காட்டுவார்கள்

வாழ்வுக்கு விழியாம் கணபதியை வணங்கி,
வாழ்க்கைக்கு வழிகாட்டப் பாடிப் பணிந்தோம்

தேவைக்கு உன்பாதம் அடைக்கலம் புகுந்தோரை,
தெருவிலே கைவிடும் உன்னெண்ணம் என்னவோ....?

சோதனைகள் வந்ததாலே எம்மண்ணே சிவப்பு!
சோகமழை பெய்யுதடா யாரிதற்குப் பொறுப்பு?

வாழ்வுக்கு வழிகாட்ட ஓரிடம் வேண்டியே,
தாய்மண்ணை மீட்கவே போரிட்டு களைத்தோமே.

பாரிலே ஓரிடம் தழிழர்க்கு வேண்டியே,
பரந்த மனம் கொண்டு எம் வேண்டுதலை ஏற்பாய் நீ!

ஈர்பத்து ஆண்டுகள் இரத்த மழை பொழிந்த எம்,
தாயகத்தில் ஒருபோதும் நீங்காதோ எண்ணங்கள்?

வஞ்சகம் செய்து பசும் நாட்டினை பறித்தோரை,
வருடங்கள் போயினும் சமரிட்டு பகிர்வோம்

தாயகத்தை மீட்கவே களமிறங்கி உயிர்நீத்த,
தமிழரின் கனவுகள் நனவாக நீ கதி

பாயிரம் பாடினோம் பணிந்து நாம் வணங்கினோம்,
பலகோடி மக்களின் இரங்கலை ஏற்பாயே!

தமிழரெம் தாயகத்தை மீட்கவே அமர்செய்த
தமிழரெம் நினைவுகளை நிறைவேற்ற அருள்புரி விநாயகா!

என்றும் நாம் உன்னையே பணிகிறோம் கணபதி
ஏழ்கடல் தாண்டியும் தமிழ் பரவ அருள் புரி!

M. பிரணவன்
ஆண்டு 7Q

With Best Compliments

from



MANARA ENTERPRISES

Dealers for Tailor's Requirements and Stationeries

24, 2nd Cross Street
Colombo 11, Sri Lanka
Tel / Fax : 330806
Tel : 421620

With the Best Compliments

of

UML

Union Metals (Pvt) Ltd.

Manufacturers of Aluminium Circles and Peacock Brand Utensils

53/3, Pattiwilla Road, Gonawala, Kelaniya
Tel : 570377

With Best Compliments

from

e Globe Solutions (Pvt) Ltd.

6, Deanstone Place, Colombo 3
Tel : 074-718517, 074-795632
Fax : 94-74-795633
E-mail : eglobe@eureka.lk

With the Best Compliments

of

CITY CABS

552222 **Vehicle for any occasion** **245-245**

Head Office:
422, Galle Road, Colombo 6, Sri Lanka
Tel: 0094-1- 552222-4,559292
Fax: 0094-1-507171
Email: Citycabs@sltnet.lk

Branch:
379/A, Nagoda, Kandana
Sri Lanka
Tel : 00941-245-245

With Best Compliments

from



FIVE STAR TEXTILES CENTRE

Wholesale & Retail Textile Dealers

95, 2nd Cross Street, Colombo 11, Sri Lanka
Tel: 441810, 345280
Fax: 94-1-345184, 449952

With the Best Compliments

of



Konica Hardware

General Hardware, Cement, P. V. C. Pipes,
Water Pumps, Electrical Goods,
Tools & Paint Merchants

255, Main Street, Negombo
Telephone : 031-31824

With the Best Compliments

of



Raju Nirupan

21, 17th Lane, (College Street)
Colombo 13, Sri Lanka
Tel : 344878

With the Best Compliments of

ECom Services (Pvt) Ltd.

Internet Cafe..

Fully Air Conditioned

Van for Hire
077-538029
077-519372
077-302068

30 B, St. Benedicts Mawatha
Kotahena, Colombo 13
Tel : 075-330784
Fax : 075-330762

- ☆ Internet Browsing, E-mail (High Speed)
- ☆ Net 2 Phone, I. D. D., Local Calls
- ☆ Laser Colour Printout
- ☆ Colour Scanning
- ☆ Laminating
- ☆ Type Setting
- ☆ Photo Copy
- ☆ Mobile Phone Accessories

With Best Compliments

from

சக்தி டெக்ஸ்
සක්ති ටෙක්ස්

180/1, B/3, கேசர் வீதி,
அத்தர்மஹால் சுப்பர்மார்க்கட்,
கொழும்பு 11
தொலைபேசி : 389867

180/1 ඊ/3, කෙයිසර් වීදිය
අත්තර් මහාල් සුපර් මාර්ක්කෙට්
කොළඹ 11
දුරකථන : 389867

With the Best Compliments

of

K. Kowshikan

Year 8R

With Best Compliments

from

Building Materials Corporation Ltd.

541, Sri Sangaraja Mawatha, Colombo 12, Sri Lanka

Tel : 326701-2

Office: 15, Wijeba Mawatha, Off Hospital Road
Kalubowila, Dehiwala
Tel : 074-201279

With Best Compliments

from



Design
TEXTILES

133, Galle Road
Colombo 4, Sri Lanka
Tel : 587312

With Best Compliments

from

General Equipments Ltd.

400, Sri Sangaraja Mawatha
Colombo 10

With the Best Compliments

of

TRAVEL CARE INTERNATIONAL (PVT) LTD.

Manpower Recruitment and Consultants

Labour Licence No. 793

71-72, 1st Floor, People's Park Complex
Colombo 11, Sri Lanka
Tel/Fax : 0094-75-555661
E-mail : vivek@eureka.lk

With Best Compliments

from

Sri Rekaa Jewellers

Guaranteed Sovereign Gold

5/s, Sea Street Junction, Colombo 11
Telephone : 438665

With the Best Compliments

of

R. S. MERCHANTS

All Kind of Quality Rice

General Merchants & Commission Agents

233A, Prince Street
Colombo 11
Tel: 440335

With Best Compliments

from

Ambiga Jewellers

அம்பிகா ஜுவலர்ஸ் අම්බිගා ජුවෙලර්ස්

6, Station Road, Ja-Ela
Tel: 01- 232191

With the Best Compliments

of

CROWN HARDWARE STORES

351, Old Moor Street
Colombo 12

With Best Compliments

from

OCEAN TRADING CO.

General Hardware Merchants

Importers & Stockists of Factory Required
Suppliers of Marine & Engine Stores

376, Old Moor Street, Colombo 12
Tel : 436876, 438155, 459647
Fax : 074-618419

With the Best Compliments

of

GlenRo Color Lab

Photo - Finishers

298/1, George R. De Silva Mawatha
Kotahena, Colombo 13
Tel : 543013

With Best Compliments

from



Sharfaz
Shamraz
Year 5 H

With the Best Compliments

of

Rehana Hardware Stores

Importer & Dealers in General Hardware

20, 3rd Cross Street, Colombo 11, Sri Lanka
Tel : 421783, 545208
Telex : 21494 GLOBAL CE

With Best Compliments

from

M. Jayapradap

Year 3H

"I Love My School"

With Best Compliments

from

S. V. DISTRIBUTORS

Authorised Distributors for
CocaCola Beverages S/L Ltd.

55/22, Church Street, Colombo 2
Tel : 473348, 077-307660

With the Best Compliments

of





M. V. TOURS

Cars & Vans for Hire
With Driver

Tel : 555420, 077768068

With the Best Compliments

of

Poobalasingam Book Depot

No. 309, 2/3 Galle Road
Wellawatte
Tel : 074-515775, 504266

With Best Compliments

from

Pearl Textile

Importers & Wholesale Dealers

145, Keyzer Street, Colombo 11, Sri Lanka
Tel : 447069, 446836
Fax : 430295

With the Best Compliments

of

CO-OP CABS

388288

Western Province Transport Co-operative Society Ltd.
89, Mihindu Mawatha
Colombo 12

With Best Compliments

from

STAR SILK

147/11, Keyzer Street
Keyzer Plaza Market, Colombo 11
Tel : 341678

With Best Compliments

from

SIVASAKTHY

Commission Agents, Millers & Transporters

Agents & Dealers for Union Carbide Ceylon Ltd., Millers Ltd., Glaxo Welcome, Ceylon Biscuits Ltd & Distributors for Unilevers

85, Old Moor Street, Colombo 12
Tel : 438159 Fax : 342976

Branch:
32, Bazzar Street, Vavuniya
Tel : 024-22330, 024-21172 Fax : 024-21063

With the Best Compliments

of

A - Z Traders

General Merchant

Aluminium, Ever Silver, Plastic, Glass Wares,
Ointments, Gift Items Etc...

2, Wolfendhal Street
(Adamali Building)
Colombo 13
Tel : 337741, 449139

பாடசாலைக்குள் நடாத்தப்பட்ட போட்டியில்
மத்தியபிரிவில் முதலிடம் பெற்ற கட்டுரை

இலக்கியத்தில் நின்று வாழ்வாங்கு வாழ்

மனிதனாக வையகத்தில் பிறந்த நாம் இவ்வுலகத்தில் வாழ்வது பெரிய விடயமல்ல. எப்படி வாழ்ந்தோம் என்னென்ன சாதித்தோம் என்பதில் தான் விடயமுண்டு. குறுகிய நம் வாழ்க்கைக் காலத்தை கணப்பொழுதேனும் விரயமாக்காமல் பயனுடையதாக்க வேண்டும். அந்தக் காலத்திலே எழுதப்பட்ட, காலத்தால் அழியாத, பல இலக்கியங்களை நாம் கற்றுச் சுவைத்துள்ளோம். ஒவ்வொரு இலக்கியமும் மனித வாழ்க்கையின் பல் வேறுபட்ட அம்சங்களைச் சுவைபட விளித்துக் காட்டுகின்றன.

வையகத்தில் பிறந்த மனிதன் வாழ்வாங்கு வாழ வேண்டுமாயின் ஒழுக்கம், உண்மை, நேர்மை, வஞ்சகமின்மை (வஞ்சகம் செய்யாமை), பொறாமை கொள்ளாமை, அன்பு போன்ற நற்குணங்களையும் கொண்டு கல்வி, செல்வம், வீரம் ஆகிய முப்பெரும் செல்வங்களுடனும் வாழ வேண்டும். இதற்கு எமது முன்னோர் படைத்த இலக்கியங்கள் வழிகாட்டியாய் விளங்குகின்றன. முதலாவதாக நம் வாழ்க்கைக்கு அவசியமாக விளங்குவது ஒழுக்கமாகும்.

"ஒழுக்கம் விழுப்பந் தரலால் ஒழுக்கம் உயிரினுமோம்பப்படும்"

என்றார் வள்ளுவர். அதனால் ஒழுக்கமானது நல்வாழ்விலே உயிரிலும் மேலாகக் கருதப்படுகிறது என்பதை நாம் உணர வேண்டும். நாம் வாழ்க்கையில் முன்னேறுவது கடினமல்ல. ஆனால் அதை அடைய நாம் செல்லும் பாதை, ஒழுகிய நெறி என்பனவே முக்கியமாகும். இன்பத்தை மனிதன் அடையப் பல வழிகள் உண்டு. ஆனால் அறத்தால் வருகின்ற இன்பமே மெய் இன்பமாகும். அதனால் தான் "அறத்தால் வருவதே இன்பம் மற்றெல்லாம் புறத்த புகழும் இல" என்றார் வள்ளுவப் பெருந்தகை. நல் ஒழுக்கத்திலே தூய பாதையிலே வாழும் எமக்கு வாய்மை காக்க வேண்டியது அவசியமாகும். வாழ்க்கை முழுவதும் வாய்மையைக் கடைப்பிடித்து அரசிழந்து, நிதியிழந்து, மனையிழந்து, நிலைகெட்டு பற்றுக் கொண்ட இல்லாலைப் பிரிந்து, புத்திரனைப் பிரிந்து, வாழ வழி இழந்து இணையில்லாத் துன்பங்கண்டும், வாய்மையைக் காத்த பெருமையை அரிச்சந்திரனின் வரலாற்றிலிருந்து நாம் அறியலாம். அதனால் தான் காந்தியடிகளும் அரிச்சந்திரனைப் போன்று வாய்மையைக் காத்து, இன்று காலத்தால் அழியாத புகழ் படைத்துள்ளார்.

நாம் எப்படித்தான் வாழ்ந்தாலும், கடவுள் வழிபாட்டைக் கடைப்பிடிக்க வேண்டியது எமது தலையாய கடமையாகும். கடவுளை அவமதித்த தக்கன் வெட்டுண்டு இறந்தான். சூரன் மாண்டான். கஜமுகாசுரன் பலியாகினான் என இலக்கியங்கள் விளம்பி நிற்கின்றன. அது மட்டுமல்ல கடவுள் வழிபாட்டினால் மார்க்கண்டேயன் மரணத்தை வென்றமையும் பிரகலாதன் இரணியனிடமிருந்து தப்பியமையும் கூட நம் இலக்கியங்கள் விளம்பி நிற்கின்றன.

ஓர் உயிராகத் தரணியிலே அவதரித்த நாம் ஏனைய உயிர்களிடத்தும் அன்பு கொள்ள வேண்டும். அதனால் தான் திருமூலர் கடவுளோடு அன்பை ஐக்கியப்படுத்தினார் போலும்.

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவதையும் அறிகிலார்"

என்றார். திருமந்திரப் பாடலடிகள் மூலம் அன்பின் முக்கியத்துவத்தை நாம் அறிந்து கொள்ளலாம். அத்தோடு "அல்லன செய்தார்க்கு அறம் கூற்றமாகும்" என்பதையும் இறப்பின் அவசியத்தையும் மகாபாரதத்தின் மூலம் நாம் அறியலாம். தீயன செய்தோர் அழிவர். பிறர் மனைவியின் மீது பற்றுக் கொண்ட இராவணன் எவ்வாறு மாண்டான் என்று இராமாயணம் கூறுகின்றது. இவ்வாறு நாம் வாழ்வாங்கு வாழ வேண்டியதற்கு தேவையான நற்குண்ங்களை எம் இலக்கியங்கள் செப்புகின்றன. அது மட்டுமல்ல அந்நற்பண்புகளைக் கடைப்பிடித்து வாழ்வில் வெற்றிகண்ட இலக்கியக் கதாபாத்திரங்கள் மூலமும் இதை நாம் உணர முடியும்.

மனிதனாகப் பிறந்த நாம் கற்க வேண்டியது அவசியமாகும். "கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சைபுகினும் கற்கை நன்றே" என்றது பொய்யா மொழி. ஒருவனுக்கு கல்வியழகே உண்மையான அழகாகும்.

"குஞ்சி அழகும் கொழுத்தாணைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து
யாமென்னும் நடுவு நிலைமையாற்
கல்வியழகே அழகு"

எனவே மனித வாழ்க்கைக்கு கல்வியின் அவசியத்தை நாம் உணர முடிகிறது. நாம் கற்றுக் கொண்டே இருக்கவேண்டும். ஏனெனில் "கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு" ஆகும். நாம் கல்விச் செல்வத்தோடு பொருட்செல்வத்தையும் பெற்றிருக்க வேண்டும். பொருட் செல்வத்தின் அவசியத்தை நாம் அறிய ஔவையார் நல்வழி வழிகாட்டியாய் அமைகிறது.

"கல்லானே ஆனாலும் கைப்பொருளொன்று உண்டாயின்
எல்லோரும் சென்றவனை எதிர்கொள்வர் - இல்லானை
இல்லாளும் வேண்டாள் ஈன்றெடுத்ததாய் வேண்டாள்
செல்லாது அவன் வாயிற்சொல்"

மனித வாழ்க்கைக்கு எவ்வாறு பொருட் செல்வம் இன்றியமையாதது என்பதை நாம் மேற்போன்ற பாடல் மூலம் அறிய முடியும். கல்வி, செல்வம் என்பவற்றோடு வீரத்தையும் நாம் கொண்டிருக்க வேண்டும். எந்தவொரு காரியத்தைச் சாதிக்கவும் தைரியம் வேண்டும். "கோழையாய் பல நாட்கள் வாழ்வதை விட வீரனாய் மடிவதே மேல்" என்றார் விவேகானந்தர். இன்னாநாற்பதில்.

"இகவின் எழுந்தவர் ஒட்டுஇன்னர்" என்றார் கபிலர். எனவே வாழ்க்கைக்குத் தேவையான நற்குணங்களையும் செல்வங்களையும் இலக்கியங்கள் விளம்பி நிற்கின்றன. மனிதன் வாழ்வாங்கு வாழக் கடைப்பிடிக்க வேண்டியவற்றை செப்புகின்றன.

இத்தகைய இலக்கியங்களை நாம் கற்றுச் சுவைத்து விடுவதோடு மட்டுமல்லாமல் அவற்றின் நெறிபிறழாது ஒழுக வேண்டும். இலக்கியத்தை விஞ்சி வாழ்வாங்கு வாழ வேண்டும். எத்தனை நாள் வாழ்கிறோம் என்பது அவசியமில்லை எப்படி வாழ்வது என்பதே அவசியமாகும். எனவே இலக்கியத்தை வென்று வாழ்வாங்கு வாழ இலக்கியத்தைச் சுவைத்து அதன் உட்பொருளை உணர்ந்து நாமும் வாழ்வில் வெற்றி காண்போம்.

P. பிரணவன்
ஆண்டு 11Q

With Best Compliments

from



CHARLEMONT BEACH INN

Guest House

26, Charlemont Road, Colombo 6
Tel : 583250, 503954 Fax : 582743

பாடசாலைக்குள் நடாத்தப்பட்ட போட்டியில்
மத்தியபிரிவில் முதலிடம் பெற்ற சிறுகதை

விடியலை நோக்கி...

மிரிஸ்ஸ அழகிய மீனவக் கிராமம். மிரிஸ்ஸ கடற்கரையோரம் எங்கும் மீனவப் படகுகள் நின்றுகொண்டிருந்தன. கடற்கரை எங்கு மணல் மண்ணில் சூரிய ஒளிபட்டுத் தெறித்தது. அது பார்ப்பவர்களுக்கு தங்கத்தாம்பாலம் போன்று காட்சியளித்தது. கடற்கரைக் காற்று அங்கு செல்பவர்களை வரவிடாது தடுக்கும் தன்மை பொருந்திய தென்றற் காற்று. கடலலைகள் கரையிலுள்ள கல்லிலே மோதித் தெறித்தன. இத்தகைய இயற்கை வனப்புகளுக்கு மத்தியிலே காயவைக்கப்பட்ட மீன்கள் மேலும் அழகூட்டின. இந்தக் கிராமத்திலே சிங்களவர், முஸ்லீம்கள், தமிழர்கள் ஆகிய மூன்று இனத்தவர்களும் ஒற்றுமையாய் வாழ்ந்து வந்தனர்.

முருகேசு இந்தக் கிராமத்தில் வாழ்ந்து வரும் ஒரு மீனவன். கடற்கரையின் ஓரத்தில் ஒரு சிறு குடிசை. அதனைச் சுற்றி பனையோலைகளும், மூங்கிற் தடிகளும் கொண்டு வேயப்பட்ட வேலி. ஆம்! அதுதான் முருகேசு வாழ்ந்துவரும் வசந்த மாளிகை. குடிசையிலே ஓட்டைகளுக்குப் பஞ்சமே இல்லை. அவனது குடும்பத்தில் ஏழ்மை தாண்டவமாடுவது பார்த்ததும் புலப்படும். அவனது குடும்பம் ஐந்து அங்கத்தவர் கொண்ட அழகிய குடும்பம். பாக்கியம் - அன்பான மனைவி. கார்த்திகேசு அவனது தந்தை. பார்த்தீபன் ஐந்தே வயது நிரம்பிய இளைய மகன். சாவித்திரி பதினெட்டு வயதான மூத்த மகள். படிப்பை முடித்து விட்டு வீட்டில் அம்மாவுக்குத் துணையாக இருக்கிறாள். அவர்களின் வாழ்க்கையை வறுமை பாடாய்ப் படுத்தியது. ஒரு சிறிய டிரோலர்ப் படகில் முருகேசுவும், கார்த்திகேசுவும் இரவிரவாய் இருந்து மீன்களைப் பிடித்து, காலையிலே அவற்றை விற்று வரும் பணத்தில் அந்தக் குடும்பம் இனிதாய் வாழ்ந்தது.

இவ்வாறிருக்கையிலே எங்கோ ஆரம்பித்த இனக்கலவரம் நாடு முழுவதும் காட்டுத் தீ போலப் பரவியது. அப்போது நடுக்கடலில் இதையறியாத இருவரும் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். அதிக மீன்கள் பிடிக்கும் எண்ணத்தில் எல்லோரையும் விட்டு இவர்கள் நடுக்கடலில் மீன்பிடிக்கச் சென்றார்கள். இவ்வாறு மீன்பிடித்துக் கொண்டிருக்கையில் அவர்களிடையே சம்பாஷணை தொடர்கிறது.

கார்த்திகேசு: இன்றைக்கு எப்படியாச்சும் நிறைய நண்டு, இறால், சுறா பிடிக்கவேண்டும். அதைத்தானே மக்கள் விரும்பி வாங்கிறார்கள்.

முருகேசு : இன்றைக்கு எவ்வளவு நேரமானாலும் பரவாயில்ல. நிறைய மீன்கள் பிடிக்கவேண்டும். இன்றைக்கு நிறைய பிடித்தால் நாளைக்கு வரத்தேவையில்லை. இவற்றை விற்றாலே நமக்கு ஒரு கிழமைக்காவது போதும்.

கார்த்திகேசு: ஆமாப்பா! இந்தப் பிள்ளைகள் படுகின்ற கஷ்டத்தை என்னாலேயே பார்க்க முடியவில்லை. பாவம் அப்பா அவர்கள்.

முருகேசு : வருகின்ற பணத்திலே முதலில் வீட்டை திருத்த வேணடும். பொங்கல் வேறு வரப்போகிறது புது உடுப்பு எடுக்க வேண்டும்

ஆம், இவை தான் தந்தைக்கும் மகனுக்கும் இடையே நடந்த கடைசி உரையாடல். இப்படி இருக்கையில் ஒரு பெரிய படகு இவர்களை நோக்கி வருகிறது. ஆம், அந்தப் படகு இவர்களை நோக்கி வந்து நிற்கிறது. அதிலிருந்து படகுக்குள் பாய்ந்த ஐவர் கத்தியை இருவரது கழுத்திலும் பிடித்து விசாரிக்கின்றனர். "கௌத ஓகொள்ளோ? தெமழத? சிங்களத? கியனவா" சிங்களம் புரியாத இவர்கள் விழிக்கின்றனர். தமிழர் என்று புரிந்து கொண்ட அவர்கள் இவர்களைப் போட்டு அடித்தனர். "தெமழ ஹொறா" என்றனர். இப்படியிருக்கையில் முருகேசு அவர்களைத் தள்ளிவிட்டுக் கடலில் பாய்ந்து தப்பித்தான். பாவம் வயதான கார்த்திகேசு "ஐயோ! என்ன அடிக்காதீர்கள், என்னை விடுங்கள்" என்று கதறினார். பிரயோசனமில்லை. அவரை வெட்டிக் கடலில் போட்டனர். அவரின் உயிர் கடலுடன் சங்கமமாகிறது. மீன் உண்டு வளர்ந்த உடல் மீனுக்கே இறையாகிறது.

கார்த்திகேசுவுக்கு என்ன நடந்தது என்பதையறியாது அவரை எண்ணிய வண்ணம் முருகேசு இரவு பகலாக நீந்திக் கரையை அடைகிறான். கரையை அடைந்த அவனுக்கு ஒரே அதிர்ச்சி. அவனது வீடுகள் இடிக்கப்பட்டு இருந்தன. சூரிய ஒளியால் தங்கம் போல் காட்சியளித்த கடற்கரை மணல் இரத்தத்தால் ஊறியிருந்தது. என்ன நடந்தது என்று அறியாது விழித்தான்.

உடனே முருகேசு கால் போன போக்கில் நடக்கத் தொடங்கினான். அப்பொழுது வரும் வழியில் சோமசுந்தரம் ஆம், அவரும் ஒரே ஊரைச் சேர்ந்த மீனவன், முருகேசிடம் நடந்ததைக் கூறி அவரைத் தேற்றி அழைத்துச் சென்றார். உன்னுடைய மனைவியையும், மகனையும் நாசமாகப் போனவர்கள் வெட்டியே கொன்றுவிட்டார்கள். உன் மகள் மட்டும் தப்பியோடி வந்துவிட்டாள் இப்பொழுது என்னுடன் தான் இருக்கிறாள் என்று கூறியதும் முருகேசு வாய்விட்டுக் கதரியழுதான். ஒருவாறு தன்னை தேற்றியவனாய்த் தனது

மகளைக் காண விரைகிறான். மகளைக் கண்டதும் அன்பு பொங்கக் கட்டியணைக்கிறான். குடும்பத்தை இழந்து தனியே நிற்கும் சோமசுந்தரமும், முருகேசுவும், சாவித்திரியும் எங்கேயோ நடந்து செல்கின்றனர்.

வாழ்விலே மனைவி, மக்களை இழந்து தனித்திருக்கும் இவர்களே ஒரே சொந்தம்.

முருகேசு வாழ்ந்து முடிந்தாலும் அவனது மகளை கரையேற்றும் வரை அவன் வாழத்தான் வேண்டும்.

மூவரும் கொழும்புக்கு செல்வதற்காக புகையிரத நிலையத்தை அடைந்தனர். புகையிரதம் வரும் வரை அதிலுள்ள மரத்தில் அமர்ந்திருந்தனர். மகளின் எதிர்காலத்தை எண்ணியவாறு வானத்தை பார்த்த வண்ணம் அமர்ந்திருந்தான். அது என்ன தத்துவத்தை உணர்த்தியதோ தெரியவில்லை அவன் வானத்தைப் பார்க்கிறான்.

இவர்களது எதிர்காலம் ???
இவர்களது வாழ்வு விடியலை நோக்கி....

N. பிரசன்னா
ஆண்டு 11Q

With Best Compliments

from



Green Villas

Vege and Non Vege Hotel

50, New Bazaar Street
Nuwara Eliya
Tel : 052-22745

பாடசாலைக்குள் நடாத்தப்பட்ட போட்டியில்
மத்தியபிரிவில் முதலிடம் பெற்ற கவிதை

மன்னிக்கும் மாண்பு மனதில் மலரட்டும்!...

நீரற்ற நிலம் போல் வரண்டு கிடப்பவனே - உந்தன்
மனத்தினிலே மனிதமும் மரித்துப் போனதேன்?....
வேரற்ற விழுதுகள் களைகளாய் விளைந்தனவே - அழிவு
கணங்களாய் உயிரும் அரித்துப் போனதேன்?....

காற்று வேகம் கூடும்போது கண்சிவக்காத நீ....
பழிக்குப் பழியெனவே செந்நீரைக் கண்ணீரில் வடிக்கிறாய்,
ஊற்றெடுத்து உன்னுள் உக்கிரமாய் வெறியும்
விழிவழியாய் தெறிப்பதை விம்பங்கள் காட்டலையோ?....

தீயாய் தினமெரிந்து தீராப்பகை கொண்டவனே!....
தீபமாய் திரியிலடங்க முடியாதா உன்னால்
காயாய் இருக்கும் வெறி கனியாய் மாறும் முன்
சாபமிட்டுவிடு சினம் சாவை அடைந்துவிடும்!....

நிலமாய் பொறுமை கொள் நித்தமும் பொறுமை கொள்
நின்றொருவன் மிதித்தாலும் நிந்திக்க நினையாதே
குலங்கோத்திரம் பாராது குடிவருமிக் கொலைவெறி
அன்று தான் நீயுணர்வாய் மன்னிப்பின் மாண்பதனை!....

வானத்தையும் வையத்தையும் வாழ்விக்க வந்தவனே!....
கண்ணீர் சிந்தினாலும் செந்நீர் சிதறினாலும்....
தானகந்தை கொள்ளாமல் பழிவாங்கத் தலையாமல் - உந்தன்
மன்னிக்கும் மாண்பு மனதில் மலரட்டும்!....

S. சூரியபிரதாப்
ஆண்டு 10 R

With Best Compliments

from

SALON RIZI'S

Hair Dresser & Beautician

HAIR

Elegant Hair Cuts, Hair Styles, Highlights, Henna Treatment, Oil Massage, Perms, Straightening, Blow-dry & Setting

BEAUTY

Eye Brow Trimming, Eye Treatment & Eye Massage, Vianese Facial & French Facial, Manicure, Pedicure & Waxing, Bridal Dressing, Make up & Saree Draping, Acne Treatment

Elegant Bridal Frocks For Hire

Weekdays 9.00 a.m. to 6.00 p.m.
Saturdays & Sundays by Appointment
Closed on Poyadays

70, Perakumba Mawatha, Kolonnawa
Tel : 532096, 532754 Mobile : 077-630822

With the Best Compliments

of

Samagi Stores

270, Government Flats
Colombo 4
Tel: 592994

With Best Compliments

from

Gnanamalar Stores

102/2, Wolfendhal Street, Colombo 13
T'phone: 436929

With the Best Compliments

of

Associated Traders Rubber Exporters (Pvt) Ltd.

Exporters of Natural Rubber

478/3 B, K. Cyril C. Perera Mawatha, Colombo 13, Sri Lanka
Tel: 432137, 439937, 445490, 326118, 328950
Fax: 439938, 321213
E-mail: asr@slt.lk

With Best Compliments

from

Rami Jewellers

Buyers and Sellers of Gold Jewels
Orders Executed Promptly

177-1/7, (Devi Complex, 1st floor) Sea Street, Colombo 11
Phone 332643

ரமி ஜுவலர்ஸ்
177–1/7, செட்டியார் தெரு
கொழும்பு 11

රමි ජුවලර්ස්
177-1/7, හෙට්ටි වීදිය
කොළඹ 11

With the Best Compliments

of

CONSOLIDATED BEARINGS & SUPPLY LTD.

29/1, Bristol Street, Colombo 1
Tel : 448165, 448317
Fax : 335865
E-mail : cbscol@eureka.lk

Agents for

- NTN Ball & Roller Bearings
- NTN Pillow Block Bearings
- NTN Plummer Block Bearings
- NTN Plain Bearings & Rod Ends
- NTN Solid Grease Bearings
- NTN Precision Ball Screws
- NTN Pars Feeders

Branch :

474, Peradeniya Road, Kandy
Tel : 074-470195, 08-236409 & 08-201148
Fax : 08-201148

With Best Compliments

from

Myra Property Developers (Pvt) Ltd

81/6, Hampden Lane,
Wellawatha, Colombo 6
Telephone : 559569, 595975 (Present Site)

With the Best Compliments

of



Mr. T. M. Sritharan

தனிப்பட்ட வகுப்புக்கள்

1. **இணைந்த கணிதம் (Combined Maths)**
2. **O/L Maths**
3. **Organ, Guitar**

வகுப்புக்களுக்கு நாடுங்கள்

Tel : 077-562510

With Best Compliments

from

A/L 2003, 2004

Accounting - **K. Sri** B.com (Hons), Dip.in.Ed.
Economics - **K. Udayan** B. B. A. (Hons.)
Business Studies - **S. K. Sothilingam** B. B. A. (Hons.), Dip.in.Ed.

வகுப்புகள் நடைபெறும் இடங்கள்

B. B. A.
Colombo 6
Tel : 506039

Lattusse Academy
Colombo 13
Tel : 436964

With the Best Compliments

of

GNANAM IMPORTS (Pvt) LTD.

PREMIER IMPORTS & EXPORTS

79, 5th Cross Street
Colombo 11, Sri Lanka
Tel: 0094-1-449255/439334
Fax: 0094-74-724120
Email: gipl@panlanka.net

Regd. Office:
UG 180/1/123,Peoples Park Complex
Colombo 11
Tel: 0094-1-441944 /472171
Fax: 0094-74-716443 / 74-715443

With Best Compliments

from

SHIVA BROTHERS (Pvt) LTD.

Importers & General Hardware Merchants
Dealers in Ceylon Steel Corporation Products etc.

327, Old Moor Street, Colombo 12
Tel: 447914, 437601
Fax: (941) 434282

With Best Compliments

from



INTHIKAB AHAMED

Year 6 R

With Best Compliments

from

M.O.M

M. O. M. MEERASAIBO & SONS

Importers & General Merchants Wholesale Dealers in Aluminium, Brass, Ceramic, Eversilver & Enamel Wares, Plastic Wares, Ropes, Buckets, Measuring Litre Cans, Weights & Scales, Kerosene, Gas Stoves, Etc. Stockists of Large Size Heavy Gauge Aluminium Sauce Pans

25/11, Dam Street, Colombo 12
Telephone : 074-722722, 433169
Fax : 342724

With the Best Compliments

of



M. A. M. TEX

Wholesale Dealers in Textiles

114, 1/7, Third Cross Street
1st Floor, Colombo 11
Tel : 325445 Fax : 471681

றோயல் கல்லூரியின்

கலை விழா

சிறப்புற எம் நல்வாழ்த்துக்கள்

வணிகக் கல்வி - **S. K. சோதிலிங்கம்**
B. B. A. (Hons), Dip.in.Ed.

பொருளியல் - **K. உதயன்**
B. B. A. (Sp.)

கணக்கீடு - **K. ஸ்ரீ**
B. Com. (Hons.), Dip.in.Ed.

B. B. A. - Wellawatte
Tel : 01-506039

Lottusse - Kotahena
Tel : 436964

With the Best Compliments

of

Hansagiri Restaurant

Approved by Ceylon Tourist Board 'A' Grade

We undertake orders to supply for your functions,
Vegetarian & Non vegetarian

Hansagiri Restaurant
192, Bodiraja Mawatha, Colombo 11
Tel: 423237

With Best Compliments

from

Mr. & Mrs. Abdeen

Dehiwala

With Best Compliments

from

வெகுஜன
ஊடகத் துறை
டிப்ளோமா
6 மாதம்
தபால் மூல
பாடநெறி

3 மாதம்
ஒலிபரப்பாளர்
பயிற்சி நெறி

M. M. I. C.

Mass Media Institute of Ceylon

2nd Floor, "Colombo Plaza"
50, Galle Road, Colombo 6
Tel / Fax : 074-512830

With Best Compliments

from

N. Vaitilingam & Co., Ltd.

Distributors for

RIVER BRAND

* Galvanised * Colour Coated Zinc Aluminium
* Roofing / Cladding Sheets

OFFICE & SALES DEPT.

70, K. C. C. Perera Mawatha
(Bloemendhal Road)
Colombo 13
Phone : 433143-5, 327669, 328842
Fax : 435649
E-mail : nvc@diamond.lanka.net

BRANCH :

448, Old Moor Street,
Colombo 12
Phone : 327488

With Best Compliments

from

Almas Fashions

8 B, Crescat Boulevard
Colombo 3
Tel : 075-533636

With Best Compliments

from



Fancy Museum

DEALERS IN
FANCY GOODS, TOYS, EVERSILVER & GIFTS

SPECIALISTS IN
DANCING & ALL BRIDAL ORNAMENTS, COSTUMES

253 B, Galle Road, Wellawatte Complex, Colombo 6
Tel : 580216 Fax : 500627

With the Best Compliments

of

Best Footwear (Pvt) Ltd.

196, Sea Street, Colombo 11
Tel : 433762 Fax : 452228

With Best Compliments

from

Taste bud

460, Nawala Road, Rajagiriya
Tel : 878261

With the Best Compliments

of



ROHAN TEX

Dealers in Sarong Items

80/2, 3rd Cross Street, Crystal Complex, Colombo 11
Tel : 471969

With Best Compliments

from

Mahdi Mudassir

Year 6 R
Royal College

With Best Compliments

from



ARUNA TRANSPORT

Govt. & Private Contractors
Colombo - Jaffna / Jaffna - Colombo

162, Wolfendhal Street, Colombo 13
Tel : 380305, 559806

With Best Compliments

from

REGENT TAILORS

Expert Gents Tailors & Specialists in Wedding Suits

76 B, Avissawella Road
Orugodawatta, Wellampitiya

With the Best Compliments

of

MURALI COMMUNICATION

I.D.D., S.T.D. Calls, Fax Messages
Photo Copying, Laminating & Book Binding

18/5, Dunbar Road, Hatton, Sri Lanka
Tel : 051-22042 Fax : 051-22041

With Best Compliments

from

Latha Jewellery

Jewellers & Diamond Merchants
Dealers in Gold, Silver & Everbrite Stainless Steel

19, Main Street, Hatton 22000, Sri Lanka
Tel : 051-22685

With the Best Compliments

of

Gemrich Home Needs & Phamaceuticals

266, Galle Road
Colombo 4
Tel : 585848, 555631

With Best Compliments

from



Murali Motors Diesel Engineers

478/1B, Bloemendhal Road
Colombo 13
Phone: 074-610924

பாடசாலைக்குள் நடாத்தப்பட்ட போட்டியில்
மேற்பிரிவில் முதலிடம் பெற்ற கட்டுரை

வள்ளுவன் காட்டும் வாழ்க்கை நெறி

"வள்ளுவன் தன்னை உலகினுக்கேதந்து
வான்புகழ் கொண்ட தமிழ் நாடு"

என வள்ளுவம் மூலம் வாழ்கை நெறி வகுத்துக் காட்டிய வள்ளுவனைப் புகழ்ந்து கூறுகின்றனர். வள்ளுவரது நிஜப்பெயர் யாரும் அறிந்திலர். ஆயின் அவர் வள்ளுவ குலத்தில் வளர்ந்து உலக வாழ்க்கை நெறியை வகுத்துக் காட்டி அதை உலகிற்கு பறை சாற்றி நின்றதால் அவரது சிறப்புப் பெயராகவும் வழங்கி வருகிறது. இன்று 54 மொழிகளுக்கு மேல் மொழி பெயர்க்கப்பட்டிருக்கும் திருக்குறள் இவ்வுலகம் உய்ய ஒரு வாழ்க்கை நெறியை எடுத்தியம்புகிறது என்றால் அது மிகையாகாது. அறநூல்கள் பல எழுந்த "அறநெறிக் காலம்" என்று அழைக்கப்படும் சங்க மருவிய காலத்தில் எழுந்தது தாம் இந்தத் திருக்குறள். சீர்கெட்டு நின்ற அன்றைய சமூகத்தை சீர்படுத்த வள்ளுவர் இவ்வாறான வாழ்க்கை நெறிகளை வகுத்தார் என அ.கி. ஞானசம்பந்தன் தமது இலக்கணமும் இலக்கியமும் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் ஔவையார் "அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகுத்தி குறுக்கத் தறித்த குறள்" என திருக்குறளின் கருத்தாழத்தை எடுத்தியம்புகின்றார். திருக்குறள் 1330 குறள்களைக் கொண்டது. மேலும் வாழ்க்கைக்குத் தேவையான அறம், பொருள், இன்பம் ஆகியவற்றை முறையே அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்பவற்றினூடு கூறி நிற்கின்றது.

"தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது"

எனக் கடவுள் வாழ்த்துக் கூறி கடவுளின் சிறப்பை மானிடனுக்கு உணர்த்துகிறார். பெரிய புராணத்திலே பல்லாயிரம் பாடல்களில் விளையும் பொருளை வள்ளுவத்தின் முதலதிகாரத்திலேயே மிளிர வைத்திருக்கிறார் வள்ளுவர். பிறவியை பெருங் கடலுக்கு ஒப்பிட்டு இவ்வாழ்வு எத்தனை கஷ்டம் நிறைந்தது என எடுத்துக் காட்டுகிறார். மேலும் ஆன்மீகக் காப்பியங்களில் வருவதைப் போன்று தனக்குவமை இல்லாதவன் எண்குணத்தான், ஆதிமுதல்வன் என இறைவன் இயல்புகளை மிகவும் நயம்பட எடுத்துரைத்திருக்கின்றார் பெருநாப் போதகர்.

திருக்குறளை நான் விமர்சிக்க நினைப்பது பாற்கடலை பூனை ஒன்று குடிப்பதற்கு ஒப்பாகும். திருக்குறளின் சில மணிமுத்துக்களை மாத்திரம் இச்சிறு தாளிலே அடக்கியுள்ளேன்.

"காலத்தினால் செய்தநன்றி சிறிதெனினும் - அது
ஞாலத்தின் மாணப் பெரிது"

என்கிறார் திருவள்ளுவர். காலத்தினர் செய்த உதவி சிறியதாயினும் அதை நாம் பூமியை விடப் பெரியதாக மதிக்க வேண்டும் எனக் கூறுகிறார். இதனை இன்றைய மானிடர் உள்வாங்கி இருந்தால், எம்மைப் பாலூட்டி, சீராட்டி வளர்க்கும் பெற்றோரை முதியோர் இல்லங்களில் சேர்ப்பார்களா? முதியோர் இல்லங்கள் மூலைமுடுக்கிலெல்லாம் உருவாகியிருக்குமா?

"நன்றிமறப்பது நன்றன்று நன்றல்ல(து)
அன்றே மறப்பது நன்று"

அதாவது ஒருவர் செய்த உதவியை நாம் ஒரு போதும் மறக்கக்கூடாது. ஆனால் இன்னொருவர் எமக்குச் செய்த தீய செயலை அக்கணத்திலேயே மறந்துவிட வேண்டும் என்கிறது உலகப் பொதுமறை. ஆயின் இதை மனிதர்கள் மதித்திருந்தால் இன்றைக்கு இத்தனை சண்டைகள், இரத்த வெள்ளங்கள் எல்லாம் ஓடியிருக்குமா?

"தொட்டனைத் தூறும் மணல்கேணி மாந்தர்க்கு
கற்றனைத் தூறும் அறிவு"

என்று திருவள்ளுவர் கல்வியின் தன்மையை எடுத்துரைத்து அதை நாம் உபயோகித்து எவ்வாறு முன்னேறுவது என்று கூறியுள்ளார். அதாவது மணற்கேணியில் வெட்ட வெட்ட நீர் ஊறுவது போல நாம் கற்க கற்க எமது அறிவு பெருகும் என்று கற்றலின் சிறப்பைக் கூறுவதோடு

"கண்ணுடையர் என்பவர்கற்றோர் முகத்து இரண்டு
புண்ணுடையார் கல்லா தவர்"

என கல்வில்லாதவனின் கீழ் தரத்தைக் கூறி எல்லோரையும் கற்கத் தூண்டுகிறார். மேலும்

"ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்"

என இன்றைய மாணவர்களுக்கு வேண்டிய ஒழுக்கத்தை ஒப்பமாகவும் அழுத்தமாகவும் கூறியுள்ளார். நிலை கெட்ட நிலை கண்டு நாம் கண்ணீர் வடிப்பதும் இவ்வொழுக்கம் ஒழுங்காக புகட்டப் படாமையே ஆகும்.

"அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்"

என மிக நயம்பட இன்றைய இளைஞர்களுக்கு அவசியமான ஒன்றைக் கூறுகிறார். தம்மைவிட பெரியோரை அதட்டியும் மட்டந்தட்டியும் பெரியோர் மனம் நோவதும் இவ்வடக்கம் என்ற நற்குணம் நம்மிடையே வளர்க்கப்படாமையே.

"அழுகக்காறுஅவா வெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்காஇயன்றது அறம்"

பொறாமை, ஆசை, கோபம், தீயசொற்களைப் பேசுதல் ஆகிய நான்கும் இல்லாமல் வாழ வேண்டும் என்ற வள்ளுவன் வாழ்க்கை நெறி, இன்றைய குட்டிச்சுவர்களை கண்டாலே புரிகின்றதல்லவா?

மேலும் துறவறம், இல்லறம், அரசாட்சி எனப் பல்வேறு வாழ்க்கை நெறிகளை வள்ளுவன் கூறிச் சென்றாலும் அதை இந்த சொற்ப வேலையில் என்னால் அடக்கிவிட முடியாது. எனவே அவற்றில் மாணவருக்கு அவசியமானவற்றை இப்போது உங்கள் முன் சமர்ப்பித்திருக்கிறேன்.

"ஆலும்வேலும் பல்லுக்குறுதி
நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி"

என்ற பழமொழிக்கேட்ப சொல்லுக்கும் வாழ்வுக்கும் உறுதி தந்து இருவரிகளில் பல்லாயிரம் அறிவுரை சொல்லும் திருக்குறள் வாழ்க்கை நெறி பலவற்றை எடுத்தியம்புகின்றது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெட்டத்தெளிவாக புலப்படுகிறது. எனவே

"பண்டுமுனைப்ப தருசியேயானாலும்
விண்டுமியின்றி முளையாதாம்
கொண்டபேராற்றல் உடையார்க்கும்
மாகாதளவின்ற ஏற்ற கருமம் செயல்"

என்று ஔவையார் கூறுவது போல் நெல்மணிக்கு எவ்வாறு உமி முளைக்க ஆதாரமாய் இருக்கிறதோ அதுபோல் நம் வாழ்க்கைக்கு ஆதாரமாய் வாழ்க்கை நெறியைக் காட்டும் வள்ளுவத்தை மாணவர்களாகிய நாம் பயின்று உயர்வடைவோமாக

"வாழ்க வள்ளுவம் வளர்க அதன் புகழ்"

N. நிஷாந்தனன்
கணிதப்பிரிவு
உயர்தரம் 2004

With Best Compliments

from

V. S. Gold Smith Work Shop

வி எஸ். நகைத்தொழிற்சாலை

වී. එස්. රත්තරං වැඩපොල

Manufacturer of Jewellery in 22ct. Gold

142B, 2nd Floor
Sea Street, Colombo 11
Tel : 074-722794

பாடசாலைக்குள் நடாத்தப்பட்ட போட்டியில்
மேற்பிரிவில் முதலிடம் பெற்ற சிறுகதை

கானல் நீர்

கனவுலகத்தில் மிதந்தவாறு தேவதைகளுடன் விளையாடிக் கொண்டிருந்தான் ராமு. அவனது கனவு சூடு பிடிக்கும் நேரத்தில், ஓர் அதட்டல் சத்தம் அவனது தூக்கத்தைக் கெடுத்தது. அவன் சற்று முழிக்கத் தொடங்கியதும் அச்சத்தம் தெளிவாகக் கேட்கத் தொடங்கியது. அது வேறொன்றும் இல்லை; மட்பாண்டங்கள் உடையும் சத்தமாகும். அவன் அறைக் கதவைத் திறந்து விட்டு சற்று தயக்கத்துடன் நடந்து சாலைக்குச் சென்றான்.

அங்கு அவன் கண்ட காட்சியை அவன் கண்களே ஏற்க மறுத்தன. அவனது தாய் தலைவிரி கோலமாக, விம்மி விம்மி அழுது கொண்டிருந்தாள். சற்றுத் தூரத்தில் கதவுப் பக்கமாக இருந்த சாய்கதிரையில் அவனது தந்தையார் உலகமே அழிந்து போனதைப் போல் கவலையுடன் அமர்ந்திருந்தார். சாலையின் நிலத்திலே மட்பாண்டங்கள் உடைந்து சிதறிக் கிடந்தன. அவற்றின் மத்தியில் நின்ற ராமுவின் காலில் ஏதோ குத்தியது போலிருந்தது. சாதாரணமாக வலி ஏற்படும் போது கத்தத் தொடங்கும் ராமு இச்சந்தர்ப்பத்தில் மௌனமாகவே இருந்தான். வீடு மயானம் போல் அமைதியாக இருந்தது.

நீண்ட நேரத்தின் பின் அவன் பேசத் தொடங்கினான். "அம்மா! என்ன அம்மா நடந்தது? அப்பா! என்னப்பா நடந்தது இங்கே?" தனது தாயையும் தந்தையையும் மாறி மாறிப் பார்த்தான். எனினும் அவன் கேள்விக்கு மௌனமே பதிலாகக் கிடைத்தது. சோகம் மிகுந்த ராமு ஓடிப் போய் தனது படுக்கையிலே சாய்ந்தான். அவனது மனம் அலை பாய்ந்தது. "என்ன நடந்திருக்கலாம்?" எனக் கற்பனை செய்ய முயன்றான். எனினும் அப்பாலகனின் மனம் அதற்கு இடம் கொடுக்கவில்லை. மனத்தை ஒருமுகப்படுத்தி நித்திரை கொள்ள முயன்றான். ஆனால் அந்த நினைவுகளே செக்கு மாட்டைப் போல் சுற்றிச் சுற்றி வந்தது. எனினும் ஏதோ ஒரு வழியாக அவன் தூங்கி விட்டான்.

மறுநாள் காலை அவன் எழுந்ததும், தாயின் சோக முகமே அவனை வரவேற்றது. அவனின் தாய் கதையைக் கூறத் தொடங்கினாள். "ராமு, உனக்கே தெரியும், இந்த நாட்டில் இருந்தால், உன்னுடைய படிப்பும் கெட்டுப்போகும், எங்களுக்கும் நல்லா வாழ முடியாது. ஆனால் உன்னுடைய அப்பா வெளி நாடு போக மறுக்கிறார். அவருக்கு இங்கே வேலை இருக்கிறதாம். என்ன பெரிய உத்தியோகம்? வெளிநாட்டுக்குப் போனால் நல்லா உழைக்கலாம் சௌகரியமாக வாழலாம். ஆனால் உன்னுடைய அப்பா எதற்கும் அசைகிறாரில்லை.

எனக்கென்றால் இப்படி வாழவே பிடிக்கவில்லை" என்று அம்மா ஒப்பாரி வைத்தாள். ராமுவின் தாயோ வெளி நாட்டு மோகம் கொண்டவள். எந்நேரமும் வெளிநாடு செல்ல வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருப்பாள். ஆனால் ராமுவின் தந்தையோ தாய் நாட்டின் மீது பாசம் கொண்டவர். தனது தொழிலைத் தெய்வமாக மதிப்பவர். வருமானம் குறைவாயினும் அதில் திருப்தி அடைபவர். கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டை உயிரினும் மேலாக மதிப்பவர்.

அன்று பிற்பகல் தந்தையுடன் உரையாடும் சந்தர்ப்பம் ராமுவுக்கு கிடைத்தது. "ராமு உன்னுடைய அம்மாவின் நச்சரிப்பு தாங்க முடியவில்லை. அதனால் அவள் சொன்ன மாதிரியே நானும் செய்யப் போகிறேன். கானல் நீரைக் கண்டு உன் தாய் ஏமாந்து போனாலும் இறைவன் விட்ட வழி என்று நானும் அதை ஏற்கப் போகிறேன்" என்று தந்தை சோக முகத்துடன் கூறினார். ராமுவின் மனதில் மறுமலர்ச்சி. வீட்டுப் பிரச்சனை ஒரு வழியாகத் தீர்ந்தது என்று எண்ணி மகிழ்ந்தான். எனினும் தந்தையின் நிலை கண்டு மனம் வருந்தினான்.

இரண்டு மாத காலத்தில் இவர்கள் இங்கிலாந்தை அடைந்தனர். அந்நாட்டில் இவர்களுக்கு அகதிகள் என்ற பட்டத்தைக் கொடுத்து சில வசதிகளும் செய்து கொடுத்தனர். எனினும் நினைத்து வந்தபடி ராமுவின் தந்தைக்கு வேலை கிடைக்கவில்லை. தாய்க்கும் வேலை கிடைக்கவில்லை. கொண்டு சென்ற பணமும் சிறிது சிறிதாகக் கரையத் தொடங்கியது. வருமானம் இல்லாததன் காரணமாக ராமுவின் குடும்பம் வறுமையில் வாடியது. திடீரென்று ஒரு நாள் ராமுவின் தந்தைக்கு நெஞ்சு வலி ஏற்பட்டு வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். எனினும் அவருக்கு வேலை இல்லாத காரணத்தினால் வைத்தியம் பார்க்க மறுத்து விட்டனர். உதவக் கூட உறவினர்களில்லை. கடவுளின் மீது பாரத்தைப் போட்டுவிட்டு ராமுவும் அவனது தாயாரும் அவரை வீட்டுக்கு அழைத்துச் சென்றனர்.

தனது மரணப் படுக்கையில் இருந்தவாறு தனது மனைவியையும், மகனையும் பார்த்து கவலைப்பட்டார் தந்தையார். "கானல் நீரை நிஜம் என்று நம்பி எங்கள் வாழ்க்கையை விதியின் கையில் போடாதே என்று உன் தாய்க்கு நான் பலமுறை எச்சரித்தேன். ஆனால் அவ்வுண்மையை உன் தாய் ஏற்க மறுத்தாள். அதனால் இன்று எமது நிலையைக் கண்டாயா மகனே" என்று கூறியவாறே தந்தை இறந்து விட்டார். மகன் மனம் குமுறி அழுதது. கானல் நீரினை உண்மையென எண்ணி ஏமாந்து விட்டோமே என்று கவலைப்பட்டான். எனினும் என்ன பயன்? முடிந்தது முடிந்தது தான்.

பி. சுந்தரகுமார்
கணிதப் பிரிவு
உயர்தரம் 2004

பாடசாலைக்குள் நடாத்தப்பட்ட போட்டியில்
மேற்பிரிவில் முதலிடம் பெற்ற கவிதை

விழி நீர் வீழ்ந்தால்....

சின்ன யன்னல்!
சிறியதாய்க் காற்று!
நெஞ்சில் துயரின்
பெரிதாய் ஊற்று!
கம்பி வேலி!
கல்மதிற் சுவர்கள்!
இருப்பிடம் இன்று,
சிறையறை ஒன்று!

தினமும் வதைகள்!
வலிக்கும் தசைகள்!
மனமும் அலறும்!
உதடோ குழறும்!

தினமும் இம்சையால்
துடித்த கதை!
கணம் கணம் நோவால்
புரண்ட கதை!
மரணத்தின் வாசல்கள்
கண்ட கதை! - அது
காற்றுக்கு மட்டும்
தெரிந்த கதை!

பனியின் கட்டியில் நானேற,
பாதத்தடியில் குளிரேறும்!
இனியென் கால்களின் நாடிகளில்,
குருதி ஓடா!
குளிர் ஓடும்!

துடிக்கத் துடிக்க
நான் துடிக்க
நகங்கள் பிடுங்கப்படுகின்றதால்,
வெடித்துப்போன என் சதையில்,
இருந்து இரத்தக் கண்ணீர் வரும்!

வெந் தீ கம்பியை சுட்டெரிக்கும்!
கம்பி என்தோல் தொட்டெரிக்கும்!
வெந்தணற் கம்பியின்
வேதனையா
வேகும் என்னை,
விட்டெரிக்கும்?

கரப்பான் பூச்சித் துண்டுகளும்,
கலந்து சோற்றில்,
பவனி வரும்!
இரக்கம் இல்லா

அரக்கர்கள் முன்
எடுக்க, எடுக்க,
வாந்தி வரும்!

சதிகள் புரியா
சதிகாரர்! - நாம்
கொலைகள் புரியா
கொலைகாரர்!
விதியே இதயம்
உனக்கில்லையோ?
வெஞ்சினம் காட்டத்தான்
நாம் உள்ளோமோ?

சிறு துளி கண்ணீர்
விழுந்ததனால்,
எரிந்தது இராவணன்
இராச்சியமே! - முன்பு
கண்ணகி விழிநீர்
விட்டதனால்
எரிந்தது மதுரைத்
திரு நகரே!

எங்கள் சாபம்
கருவறுக்கும்!
தர்மக் கோபம்
வேரறுக்கும்!
எங்கள் கண்ணீர்
உமையெரிக்கும்!
எங்கள் செந்நீர்ப்
பழி துடைக்கும்!

விடிவுகள் வெளிவரும்
கட்டாயம்!
முடிவுகள் தெரிந்திடும்!
துயரோயும்!
எதுவரை வீழும்
எம் கண்ணீர்?
விடியல்கள் வரும்வரை
நீர் பாரீர்!

வி. விமலாதித்தன்
உயிரியற் பிரிவு
உயர்தரம் 2004

With the Best Compliments

of



Van For Hire

Amari Wills
Lanka (Private) Limited

Wholesale & Retail Dealers in Fancy Goods, Groceries and Stationery

Free Home Delivery

65, Hampden Lane
Wellawatte, Colombo 6
Telephone : 074-518398

With Best Compliments

from



AMBAALS VEGETARIAN HOTEL

50, New Bazaar Street
Nuwara Eliya
Telephone : 052-35281

றோயல் கல்லூரியின் தமிழ் நயம் சஞ்சிகை
சிறக்க எமது நல்வாழ்த்துக்கள்

Jeya Ganesha Stores

ஜெய கணேசா ஸ்ரோர்ஸ்

WHOLESALE & RETAIL DEALERS

Veeravagu Building
Point Pedro

வீரவாகு தட்டிடம்
பருத்தித்துறை

Tel : 021-226-3284

யாழ் மண்ணிலிருந்து நடுவு நிலை தவறா
நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

VALAMPURI AND CO.

வலம்புரி அன் கோ.

Printers & Publishers

15, Vellantheru, Vannarpannai, Jaffna
Tel : 021-2223378 Fax : 021-2223378
E-mail : valampu@sltnet.lk

With the Best Compliments

of

MOBICOM TECHNOLOGY

G1, Crescat Boulevard
75 Galle Road, Colombo 3, Sri Lanka
Tel : 075-549000
Tel/Fax : 075-535353
E-mail : mobicom@sltnet.lk

With Best Compliments

from

MACSON MESH INDUSTRIES (PVT) LTD.

140, Messenger Street, Colombo 12
Tel : 437140 (Auto Line), 325363 Fax : 437139
E-mail : macson@sri.lanka.net web site : www.macson.net

ABDUL JABBAR & SONS

Abdul Jabbar Building
Abdul Jabbar Mawatha, Colombo 12
Tel : 446641, 330989 Fax : 437139

With Best Compliments

from

NEW LALITHA JEWELLERS

නිව් ලලිතා ජුවෙලර්ස්

நியூ லலிதா ஜுவலர்ஸ்

165, Sea Street, Colombo 11

Telephone : 470396

With the Best Compliments

of



Nazeer Travels

(Labour Licence No 1761)

Overseas Manpower Consultant,
Travels & Tours
I. D. D. & Local Calls, Fax and Photocopy

81, S. Mahinda Mawatha
Maradana, Colombo 10, Sri Lanka
Tel : 074-722382-3 Fax : 074-722381
E-mail : nazeer1@wow.lk

With the Best Compliments

of

EXCLUSIVE PASSENGER SALES AGENT FOR CZECH AIRLINES IN SRI LANKA

Travel & Tours Link (Pvt) Ltd.
111, Chatham Street, (1st Floor), Colombo 1
Tel: 440283, 422532, 342941/2
Fax; 437100
Email: cmbtook@slt.lk

With Best Compliments

from

Soorya Traders

Vehicles, Tractors, Cars, Vans and Motorbikes

Thirunelvely, Jaffna

With the Best Compliments

of



SHAN ASIA INTERNATIONAL

127/27, 2nd Floor
Ananda Rajakaruna Mawatha, Colombo 10
Tel: 074 – 610438

With Best Compliments

from

N. M. MOHAMED MOHIDEEN LTD.

General Merchants, Tanners, Exporters & Importers

17, Second Cross Street, Colombo 11
Tel: 325794, 329578
Cable : "SHEEPSKIN"

Tannery at :
Kotuwegoda, Rajagiriya
Tel : 562310

With Best Compliments

from



Asians Traders

Wholesale Dealers in Textile &
Readymade Garments

65 A, Keyzer Street
Colombo 11, Sri Lanka
Tel : 341559

With Best Compliments

from

A Complete Range of Hi Quality Pre Press Services

- **Colour Separation**
- **Film Out Putting**
- **Step and Repeat & Page Planning**
- **Plate Making**
- **Progressive Proofing**

Lake House Printers & Publishers Limited

41, W. A. D. Ramanayake Mawatha, Colombo 2
Telephone : 433271-3, 074-712633
Fax : 449504

Leader In Print Media Service

With the Best Compliments

of

HELASARA

JEWELLERS PAWN BROKERS & COMMUNICATION CENTRE

7/7A, D.S. Senanayake Road
Borella Super Market, Colombo 8
Tel: 674023 Fax: 674022

With Best Compliments

from

SULTANS LEATHER CO.

Tanners, Exporters & Importers

84, Prince Street, Colombo 11, Sri Lanka
Tel: 324748 Fax: 436452

Factory:
305 & 307, Biyagama Road, Pattiya Junction, Kelaniya, Sri Lanka
Tel: 521943

Tannery:
218/22, Palliyawatte, Hendala, Wattala, Sri Lanka
Tel: 531682/ 072-46267

With the Best Compliments

of

GRACE TEXTILE

Wholesale & Retail Dealers in Textiles

Opposite Commercial Bank

127/1, A. L. S.Super Market Complex, Keyzer Street
Colombo 11, Sri Lanka
Tel: 336488

With Best Compliments

from

VENZ TRADINGS

Dealers in Imports & Paper Merchants

99-B/4, 16th Lane, College Street, Kotahana, Colombo 13.
Tel: 334049 Fax: 334049
Email: kavishanth@sltnet.lk

With Best Compliments

from



Cey - Can

Travel & Tours (Pvt) Ltd.

2nd Floor, 113, Chatham Street
Colombo 1, Sri Lanka
Tel : 325336, 439952, 437641, 343571-3, 431362, 439901
Fax : 94-1-440294
E-mail : ceycantr@sri.lanka.net, baabuji@sri.lanka.net

With Best Compliments from

STARNET TECHNOLOGIES *Connecting the world*

CyberCafe@Starnet

A REAL SPEED INTERNET BROWSING CENTRE

Enjoy the Special Offer on 128 kbps

Charges	1hr	50/-
	45min	40/-
	30 min	30/-
	15 min	20/-

Special Offers for Web Stars
Buy a Star Card & Save Money

Star Card Packages : *** 500/-**
11hrs & for each 15 minutes Rs 12.50
***1000/-**
22hrs & for each 15 minutes Rs 12.50

Foreign Calls for very cheaper price and Quality Services

UK, CANADA, USA	Per Minute	15/-
	Over 10 Minutes	12/-
	Other Countries	20/-

COMPUTER SALES, SERVICES & UPGRADING COMPUTER,
NETWORKING, CD WRITING, PRINTING

87 D, Hampden Lane, Colombo 6
Telephone : 559165

Come & Feel The Difference.....

With the Best Compliments of

MOD STUDY CENTRE

G.C.E.(O/L), GRADE 10, 9, 8...
G.C.E. (A/L)

கணித, விஞ்ஞான, வர்த்தகப் பிரிவுகளுடன் கணணிக் கல்வியும் கற்பிக்கப்படுகிறது.

தன்னிகரற்ற ஆசிரியர்களைக் கொண்டு சகல பாடங்களையும் போதித்து, பல வருட காலமாக கல்விச் சேவையில் மங்காப் புகழுடன் திகழும் ஒரே தனித்துவமான நிறுவனம்.

6, Collingwood Place, Colombo 6
Tel : 074-510586

With Best Compliments

from

S. R. JEWELS MARRT

එස්. ආර්. ජුවෙල්ස් මාර්ට්

எஸ். ஆர். ஜுவெல்ஸ் மார்ட்

DEALERS IN 22KT. GOLD JEWELLERY, SILVER AND GEMS

6/S, Sea Street Junction, Colombo 11
Tel : 332641

With the Best Compliments

of

NEW LUCKY STORES

7, St. Andrews Drive
Nuwara-Eliya
Tel : 052-22506

ශාඛාව : **ලකී එන්ටප්‍රයිසස්**
අංක : 119, නුවර පාර, නුවර-එළිය
දුරකථනය : 052-23887

கிளை : **லகி எண்டர்பிரைஸஸ்**
இல. 119, கண்டி வீதி, நுவரெலியா
தொலைபேசி : 052-23887

With Best Compliments

from

MAJESTIC TRADE CENTRE

FASHIONABLE CLOTHES FOR THE ENTIRE FAMILY

SHIRTS, T'SHIRTS, TROUSERS, DENIMS, BOYS SUITS, SWIMMING ITEMS

Majestic City
Shop No. 2-05, 1 st Floor
Majestic City, Station Road
Colombo 4
Tel : 592940

Liberty Plaza
Majestic Trade Centre (Pvt) Ltd.
Shop No. G 72, Ground Floor
Liberty Plaza Complex
Colombo 3
Tel : 574386

With Best Compliments from

Skylanka.net Internet Browsing Centre
(BOI approved Company), 3rd floor,
294/3-1, Galle Road, Colombo - 04.
Above: Peoples Bank (Opp:Vinayagar Temple)

Web site: www.skylanka.com Telefax: 01 -559744

i-solution - Game Centre

Computer Games

Rs. 75/- only per hour

Play with Steering Wheel & Joystick.
Advance booking available

✱ Need for Speed - 4 ✱ Commandos II ✱ Mid Town Madness ✱ Tech Land
✱ Ice - Ski ✱ Sky Fighters ✱ Game Spy Arcade ✱ Wheels of Freedom
✱ Harley Davidson Bike Race ✱ Lion King ✱ Mission Humanity ✱ Fifa 2001
✱ Age of Empires 1-2 ✱ Star Wars ✱ Nba 2000 ✱ Seirra ✱ Cricket
and more.....

Web sales through multi level marketing

- Your Dreams come true! By ethically, morally by our genuine business, you can learn and earn.
- Can do this as either full time business or part time.
- Youngsters, Workers, Unemployed Youths, Housewives, Retired Persons, etc., can do this fantastic business, which gives you lucrative income.
- Very good income potential by investing a small amount.
  An excellent chance to do a home based business.
- A good chance to get a Pentium-111 computer absolutely free as well as avail lakhs together profit.

Net 2 Phone

Rs. 10/- per Miniute Onwards

U.S.A.....
Canada.....
U.K.....
@ Least Price tag in the City

* Price will depends on the Country and mode of the phone at call receivers side

128 Kbps.. Internet Cafe

Air Conditioned with privacy. Only Rs. 50/- hour

With the Best Compliments

of

Lovely Jewellers

22 ct. Gold Jewellery Merchants

2, Public Market
Medawachchiya, Sri Lanka
Tel : 025-45560
Fax : 025-45560
E-mail : <NAZARS10@hotmail.com>

With the Best Compliments

of

Maruthi Steels (Pvt) Ltd

237/4, Hekkitta Road, Wattala

செல்லத் தமிழுக்கு
கிண்கிணி சொற்களால்
தோரணம் கட்டிடும்
றோயல் கல்லூரிக்கு
எமது வாழ்த்துக்கள்.....

Maanasi

Latest Shalwars, Sarees, Cosmetics,
Fashion Jewellery & All Kind of Ladies Accessories

207, Galle Road, Colpetty
Colombo 3
(Opp. American Embassy)

With the Best Compliments

of

RAJU ENTERPRISES

Suppliers and Makers of Curtains
Mosquito Nets & General Upholstery

B2, 1/5,N.H.S. Flats, Forbes Lane
Maradana, Colombo 10
Tel: 671903

With Best Compliments

from

GUNA IMPORTS & EXPORTS

All Kinds of Food Item & Other Imports

236/20, Vijaya Kumarathunga Mawatha
Kirulapone, Colombo 5
Tel/Fax: 075-514154
Email: fabdeals@zeynet.com / gunaimports@yahoo.com

பாடசாலைகளுக்கிடையிலான "தமிழ்த்திறன் காண்" போட்டி முடிவுகள்

கீழ்ப்பிரிவு

கவிதை	1ம் இடம்	- V. அபிராமி	- திருக்குடும்பக் கன்னியர் மடம்
	2ம் இடம்	- R. கௌசல்யா	- விவேகானந்தா கல்லூரி
	3ம் இடம்	- S. வினோதன்	- புனித அந்தோனியார் கல்லூரி
கட்டுரை	1ம் இடம்	- R. தர்ஷிகா	- திருக்குடும்பக் கன்னியர் மடம்
	2ம் இடம்	- V. வினோ	- புனித அன்னம்மாள் மகா வித்தியாலயம்
	3ம் இடம்	- ஜெயகௌரி	- தெஹிவளை மகா வித்தியாலயம்
சிறுகதை	1ம் இடம்	- V. துவாரகா	- வுல்வெண்டோல் மகளிர் மகா வித்தியாலயம்
	2ம் இடம்	- R. சுபாஷினி	- புனித அன்னம்மாள் மகா வித்தியாலயம்
	3ம் இடம்	- S. ஷிரோமி	- முகத்துவாரம் இந்துக் கல்லூரி
பேச்சு	1ம் இடம்	- S. நிஷாந்த்	- பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி
	2ம் இடம்	- V. துஷ்யந்தினி	- விவேகானந்தா கல்லூரி
	3ம் இடம்	- A. விதூஷன்	- புனித பேதுரு கல்லூரி

மத்திய பிரிவு

கவிதை	1ம் இடம்	- K. ரமேஷ்	- பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி
	2ம் இடம்	- J. துஷ்யந்தினி	- முகத்துவாரம் இந்துக் கல்லூரி
	3ம் இடம்	- S. தாலினி	- சாந்த கிளெயார் கல்லூரி
கட்டுரை	1ம் இடம்	- P. பிரசன்னா	- டீ எஸ். சேனாநாயக்க கல்லூரி
	2ம் இடம்	- S. லுசாந்தன்	- புனித சூசையப்பர் கல்லூரி
	3ம் இடம்	- S. லோகினி	- சைவ மங்கையர் கழகம்
சிறுகதை	1ம் இடம்	- S. ரேணுஜா	- புனித பிரிட்ஜட் கன்னியர் மடம்
	2ம் இடம்	- V. சறூபா	- றோமன் கத்தோலிக்க த.மா.வி.
	3ம் இடம்	- திரவர் சோரிஸ்	- புனித சூசையப்பர் கல்லூரி
பேச்சு	1ம் இடம்	- R. பிரசன்னா	- புனித அந்தோனியார் கல்லூரி (வத்தளை)
	2ம் இடம்	- K. அனுஷா	- விவேகானந்தா கல்லூரி
	3ம் இடம்	- Y. நிலுக்ஷனா	- திருக்குடும்பக் கன்னியர் மடம்
		- T. பார்த்தீபன்	- பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி

மேற் பிரிவு

கவிதை	1ம் இடம்	- T. கொட்னி ஷிரான்	- புனித சூசையப்பர் கல்லூரி
	2ம் இடம்	- P. மதிமலர்	- நுகேகொடை த.ம.வி
	3ம் இடம்	- S. ஷியாமளா	- சாந்த கிளெயார் கல்லூரி
கட்டுரை	1ம் இடம்	- K. பரமேஷ்வரன்	- பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி
	2ம் இடம்	- M. அமிதா குமாரி	- நுகேகொடை தமிழ் மகா வித்தியாலயம்
	3ம் இடம்	- S. திலகா	- சைவ மங்கையர் கழகம்
சிறுகதை	1ம் இடம்	- R. கலைவாணி	- விவேகானந்தா கல்லூரி
	2ம் இடம்	- M. நந்துஜா	- திருக்குடும்பக் கன்னியர் மடம்
	3ம் இடம்	- S. அழகேஷ்வரன்	- புனித சூசையப்பர் கல்லூரி
பேச்சு	1ம் இடம்	- K. R. கோகுல்நாத்	- விவேகானந்தா கல்லூரி
	2ம் இடம்	- S. கிருபானந்த்	- பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி
	3ம் இடம்	- K. விஜயசாந்தி	- விவேகானந்தா கல்லூரி

பொது நுண்ணறிவுப் போட்டி

1ம் இடம்	- B. C. மகிந்தன்	- புனித பேதுரு கல்லூரி
2ம் இடம்	- C. அண்டன் பிரசாத்	- புனித பேதுரு கல்லூரி
3ம் இடம்	- T. ஹரிலோஜன்	- புனித பேதுரு கல்லூரி

தமிழறிவுப் போட்டி

1ம் இடம்	- பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி
2ம் இடம்	- சைவ மங்கையர் கழகம்
3ம் இடம்	- சாந்த கிளெயார் கல்லூரி

தொடரின் சிறந்த போட்டியாளர்

ராஜரட்னம் ருக்ஷான் - பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி

பாடசாலைகளுக்கிடையிலான போட்டியில்
கீழ்ப்பிரிவில் முதலிடம் பெற்ற கட்டுரை

இயற்கையை இரசித்துப் பார்

இயற்கை என்பது மிகவும் இரசிக்கக் கூடிய அழகிய விடயம் என்பது நாம் அனைவரும் அறிந்ததே. இது பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் அந்த ஆதிசக்தியான இறைவன் உலகை அழகுமயமாக்கப் படைத்தருளினான். இயற்கையை இரசிப்பது எமது உரிமைகளாகும். இயற்கையெனும் தொகுதியினுள் பல அடங்குகின்றன.

வானத்தை முட்டும் உயர்ந்த பச்சைக் கம்பளம் விரித்த மலைகளைப் பார்; தன் பொற் கதிர்களை விரித்து துயிலெழும் ஆதவன்; "சல சல"வென நுரை கக்கிக் கொண்டு ஓடும் நதிகள்; தம் கைகளைக் கொண்டு வரவேற்கும் கடலலை; உயர வளர்ந்து உன்னதமாய் உதவும் மரம், செடி, கொடிகள்; இதழ்களை விரித்து வணக்கஞ் சொல்லி நறுமணத்தையும் தந்து வண்டுகளைக் கவரும் பூக்கள்; இவை அனைத்தும் இயற்கையே.....

துளிதுளியாய்க் கொட்டுகின்ற மழை; ஆகாயத்தில் மிதக்கும் பஞ்சு போன்ற மேகம், "கீச் கீச்" என்று தன் இனிமைக் குரலில் கச்சேரி பாடும் குருவிகள், அழகாய்த் தன் வலையைக் கட்டும் சிலந்தி, அழகாய்க் கூடுகட்டும் தூக்கணாங் குருவி, தனக்குத் தாமே உணவு தயாரிக்கும் தாவரங்கள், நல்ல கனிவான சுவையைக் கொடுக்கும் பழங்கள், ஓயாமல் வேலை செய்யும் எறும்புகள்; கண்களைச் சிமிட்டி சிரிக்கும் உடுக்கள், ஆகா! "இதல்லவா இயற்கை".

சில்லென்ற குளிர்மை தரும் தென்றல், இயற்கை சீற்றத்தால் சீறும் சூறாவளி, பெருக்கெடுத்து ஓடும் வெள்ளப் பெருக்கு, இனிப்பைத் தரும் கரும்பு, விதவிதமாய் ஓசை எழுப்பும் மிருகங்கள், சலசலக்கும் மரங்கள், உலகம் அதிரும் இடிமுழக்கம், கண்ணைக் கொள்ளும் மின்னல், சீற்றத்தால் ஆடும் பூமாதேவி உருவாக்கும் புவி நடுக்கம், மண்ணுக்கடியில் உருவாகிய கனியவளம், நிறங்களை மாற்றும் பச்சோந்தி, குத்தும் முள் கொண்ட முள்ளம்பன்றி என்பனவும் என் மனதைக் கவரும் இயற்கைப் படைப்பு.

இத்தகைய இயற்கைகளுக்கு மேலான ஆறறிவு படைத்த விந்தையின் படைப்பல்லவா "மனிதன்". குரங்கிலிருந்து தோன்றினான். இவன் ஆச்சரியமடையும் மாயையான உடலையும், விந்தைமிக்க அங்கங்களையும் கொண்டுள்ளான். சிந்தித்து

செயலாற்றும் மூளை, உணவை சமிபாடடையச் செய்யும் உணவு சமிபாட்டுத் தொகுதி, சுவாசிக்க சுவாசப்பை, நேசிக்க இதயம், வேலை புரிய கைகள் என பலவற்றைக் கொண்டுள்ளான். இவையும் இயற்கையே.....

இயற்கையை இரசிப்பது தவரல்ல. அதை மாசு படுத்துவது தான் தவறு. இயற்கை மிக மென்மையானது. கலங்கமற்றது. அதை நாம் மாசுபடுத்துவதாலேயே இன்றைய நூற்றாண்டில் புவி அழகை இழந்து அழிவை நோக்கி ஓடுகின்றது. நிம்மதியில்லை. எங்கும் அசுத்தம், மாசு, கலங்கம். இது எமக்கு தேவையற்றது. நாம் காணும் இயற்கை உயிரற்றது அல்ல; உயிருள்ளது. அவற்றை கொல்லுவது சரியில்லை. வேண்டாம்! இயற்கையை உண்மையுடன் இரசிக்க வேண்டும்.

ஆம்! இயற்கையை இரசிக்க வேண்டும். அதன் உண்மைகளை அறிய வேண்டும். இயற்கை என்றால் எண்ணற்றது. இவை அணைத்தும் காக்கப்பட வேண்டியன. செயற்கை அவசியமாயினும் இயற்கைக்கு ஈடாகாது. எத்தனை புதிய புதிய சாதனைகள் இருப்பினும் இயற்கைக்கு இணையாகாது. ஆனால் தற்போது இயற்கையைக் காண முடியாது. காடுகளின் 16% எஞ்சியுள்ளது. இடவசதி, உணவு என்பவற்றைக் கருதி மனிதன் பிராணிகள், மரங்கள், காடுகள், என்பவற்றை அழிக்கின்றான். எதுவும் நிரந்தரமானதல்ல. இயற்கை மட்டுமே நிரந்தரமானது.

"இயற்கையைத் தலைதூக்கி
செயற்கையை ஒழிப்போம்
இயற்கையை இரசித்துப் பார்
இன்பம் தன்னாலே வரும்....."

R. தர்ஷிகா
திருக்குடும்ப கன்னியர் மடம்

பாடசாலைகளுக்கிடையிலான போட்டியில்
மத்தியபிரிவில் முதலிடம் பெற்ற கட்டுரை

போதை வஸ்து பாவனையும் சமூக சிதைவுகளும்

"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது மானிடராய் பிறப்பினும் கூன், குருடு, செவிடு நீங்கிப் பிறத்தல் அரிது, கூன், குருடு, செவிடு நீங்கப் பிறப்பினும் ஞானமும், கல்வியும் நயத்தல் அரிது, அதனிலும் அரியது ஒழுக்கமுடையவராய் தன் வாழ்நாள் முழுவதும் வாழல்" என்று மனிதப் பிறப்பின் அருமை, பெருமை பற்றி தமிழ் மூதாட்டி ஔவைப் பிராட்டி சிறப்பித்துக் கூறியுள்ளார். கடவுளின் சிருஷ்டியில் உருவான ஓர் உன்னதமான படைப்பே மனிதன். ஆகவே தான் மற்ற உயிர்களை விடவும், பகுத்தறிவுடைய மனிதனாகப் பிறத்தல் சிறந்தது என்று கூறியுள்ளார்கள். மனிதனாகப் பிறந்தாலும் அங்கக்குறைபாடுகளின்றிப் பிறந்தாலும், அதிலும் ஞானமுள்ளவனாகவும், ஒழுக்கமுள்ளவனாகவும் இருத்தல் அதிலும் சிறந்தது என்று கூறியுள்ளார்கள். ஆனால் மனிதனாகப் பிறந்தவன் இவற்றையெல்லாம் சிறிதும் சிந்தித்துப் பார்க்கின்றானா? இல்லை. தான் ஓர் அங்க குறைபாடில்லாதவனாக, மனிதனாகப் பிறந்திருக்கிறேன் என்று மகிழ்கிறானா? மாற்றாக பல தவரான நடத்தைகள் மூலமாக அற்புதமான, பிறருக்குப் பயன்படக்கூடிய இம்மனித உடலைக் கெடுத்துக் கொள்கிறான்.

இவ்வாறு மனிதனை சிறந்த மனிதனாக இருக்கவிடாது அவனை வீழாத படுகுழியில் வீழவைத்து குடும்பத்துக்கும், சமூகத்திற்கும், ஏன் இந்த நாட்டுக்கும் கூட பயனில்லாதவனாக ஆக்கும் சக்தியாக போதைவஸ்து என்னும் சாத்தான் தலை விரித்து ஆடுகிறான். அவனின் கொட்டத்தை அடக்குவார் யாருமில்லை. மாறாக அவனிடம் அடிமையான பலர்தான் நம் சமூகத்தில் இருக்கிறார்கள். முற்காலத்தில் மதுவும், மாதுவும் தான் போதை தரும் அற்புத வஸ்த்துக்கள் என்று அற்புதமான பெண்ணினத்தையே கேவலப்படுத்தினார்கள். ஆனால் இப்போது அப்போதைவஸ்துக்களால் நாசமாகும் பொருளாக பெண்கள் மாற்றப்பட்டிருக்கிறார்கள். இன்றைய காலகட்டத்தில் இலங்கை மட்டும் அல்ல இந்த உலகமே போதைவஸ்து என்னும் கொடிய அரக்கனின் பிடியில் அகப்பட்டு வெளிவர முடியாத நிலையில் இருக்கிறது. இதற்கு யார் காரணம்? மற்றவர்களுக்கு உதவி செய்வதற்காக அல்லாமல் தன் சுயநலத்திற்காக, சுயலாபத்திற்காக போதைவஸ்துக்களை விற்பனை செய்யும் மனிதனே காரணமாகும். வாங்குபவனும் மனிதனேதான். விற்பவனும் அவனேதான். ஆதலால் அவனைத் தவிர வேறு யாரைக் குற்றவாளிக் கூண்டிற்குள் ஏற்ற முடியும்?

"போதை வஸ்து" என்ற சொல்லின் பொருள்தான் என்ன? மனிதனை மனிதனாக வாழவிடாது சமூகத்திற்கு ஒரு கொடியவனாக மாற்றும், உடல் நலத்தைப் பாதிக்கும்,

தனியுலகத்தில் சஞ்சரிக்க வைக்கும், ஒரு தீண்டத்தகாத பொருளே "போதை வஸ்து". ஆனால் அதைப் பற்றி இவ்வளவு விளக்கமிருந்தும், மனிதன் அடிமையாகிய அபின், ஹெரோயின், காபின், நிகட்டின் போன்ற போதைப் பொருட்களும், இன்னும் பல வகையான போதைப் பொருட்களும் மனித சமூகத்தை அழிக்கும் திட்டத்தோடு சனசமூகத்தில் உலவிக் கொண்டிருக்கின்றன. இதைவிடவும் நாளுக்கு நாள் விதம்விதமான புதிய, விசித்திரமான பெயர்களோடும் பல புதிய போதைப் பொருட்கள் அறிமுகமாகிக் கொண்டிருக்கின்றன. மனிதனும் அதனை ஆதரிப்பவனாக, வரும் எல்லாவற்றையும் பயன்படுத்தப் பழகி விடுகிறான். இதன் விளைவு? சொல்ல முடியாத தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியது. போதைப் பொருட்கள் வெளிநாடுகளிலிருந்தும் எம் நாட்டுக்குக் கடத்தப்பட்டு கொண்டு வரப்படுகின்றன. அவற்றைக் கடத்துபவர்களும் தங்களால் என்னென்ன விதமான உத்திகளைக் கையாள முடியுமோ, எல்லாவற்றையும் கையாண்டு போதைப் பொருட்களைக் கடத்துகிறான்றார்கள். தற்செயலாக மேலதிகாரிகள் அவர்களை கையும் களவுமாக பிடித்துவிட்டாலோ பணத்தால் அவர்களின் வாயை அடைத்துவிடுவர். அவ்வதிகாரிகளுக்குத் தெரியாது பிற்காலத்தில் இப்போதைப் பொருள் தங்கள் பிள்ளைகளையும் அடிமைப்படுத்துமென்று.

இன்றைய காலகட்டத்தில் போதைப் பொருள் பாவனை எல்லா நாடுகளிலும், நகரங்களிலும், மூலை முடுக்குகளிலெல்லாம் பரந்து காணப்படுகிறது. இவற்றைத் தடுக்க காவற்துறையினரும் என்னவெல்லாமோ செய்கிறார்கள். ஆனால் பயன்படுத்துவோர் பயன்படுத்திக் கொண்டே தான் இருக்கிறார்கள். விற்பவர்களும் விற்றுக் கொண்டேதானிருக்கிறார்கள். பொதுவாக குற்றம் செய்பவர்களைவிட குற்றம் செய்யத் தூண்டுபவர்களுக்கே தண்டனை அதிகம். அதுபோல் போதைப் பொருள் பாவிக்கிறார்களே அவர்களை விட அவற்றை விநியோகித்து பணம் சேர்க்கிறார்களே அவர்களுக்குத்தான் அதிக தண்டணை வழங்கப்படல் வேண்டும். அப்போதுதான் இச்சமூகம் திருந்தும். பள்ளிப் பருவத்தில் ஓடியாடித் திரிய வேண்டிய வாலிபர்களுக்கும், யுவதிகளுக்கும் போதைப் பொருள் ஆசையைக்காட்டி முதலில் அதை அவர்களுக்கு இலவசமாக வழங்கி பின்னர் அவர்களுக்குப் போதைப் பொருள் இல்லாமல் இருக்கவே முடியாது என்ற சந்தர்ப்பத்தில் அதை அதிக விலைக்கு விற்கிறார்கள். இவர்களுக்கு அது வியாபாரம். ஆனால் பாதிக்கப்படுபவர்களின் நிலை? இவர்களெல்லாம் தாம் செய்வது சரியென்றும், வியாபாரம் என்றும் தான் நினைக்கிறார்கள். ஆனால் அவர்களின் பிள்ளைகளும் இவ்வாறு போதைப் பொருளுக்கு அடிமையாகி சித்திரவதை அனுபவிக்க நேர்ந்தால்தான் போதைக்கு அடிமையாகிய பிள்ளைகளின் மனவேதனை அவர்களுக்குப் புரியும்.

இந்த போதைப் பொருள் பாவனை சமூகத்தை எவ்வாறெல்லாம் சீரழித்திருக்கிறது. போதைப் பொருள் வாங்கப் பணமில்லாததன் காரணத்தால்

பத்து மாதம் சுமந்து பெற்ற தாயையும், பாசமிக்க தந்தையையும் சுட்டுக் கொன்றுவிட்டு பணம் திருடி ஓடிய மகன்கள் எத்தனை பேர் இந்தச் சமூகத்தில் இருக்கிறார்கள். அது மட்டுமா? பணத்திற்காக அதுவும் கேவலமான அந்த பொருளிற்காக கொள்ளை, திருட்டு. அதுமட்டுமல்ல போதைப் பொருள் பாவனையாளர்களுக்கு தாங்கள் செய்வது சரியா, தவறா என்று நினைக்கக்கூட நேரமில்லை. அவர்களால் சுயபுத்தியுடன் சிந்திக்கவும் முடியாது. இதனால் கொலை செய்யவும் தயங்கமாட்டார்கள். பெண்களை பாலியல் வன்முறைக்கு உட்படுத்துவதும் கூட அதிகமான போதைப் பொருள் பாவனையாளர்களே. இன்று பதினைந்து வயது சிறுவன் முதல் அறுபது வயது கிழவன் வரை பலரும் போதைப் பொருளிற்கு அடிமையாகியிருக்கிறார்கள். இப்பாவனையால் பூந்தோட்டங்களாய் இருந்த எத்தனை எத்தனை குடும்பங்களில் புயல் வீசியிருக்கின்றன தெரியுமா? சமூகத்தில் ஒரு நல்ல பெயரோடு சிறந்து விளங்கிய குடும்பம் சமூகத்தின் பழிச்சொல்லுக்கு ஆளாவதும் இதனாலேயே. ஒரு தாய் தன் குழந்தை பிறந்து, அவன் வளர்ந்து, பெரியவனாகி, சான்றோர்களும், பெரியோர்களும் அவனை வாழ்த்தும் போது தான் மகன் பிறந்த பொழுதைவிடவும் பெரிதும் சந்தோஷப்படுகிறாள். ஒரு குழந்தை பிறக்கும் போது அதன் பெற்றோர்கள் தங்கள் பிள்ளையை வைத்தியனாகவோ, பொறியியலாளனாகவோ ஆக்க ஆசைப்படுகிறார்கள். அக்குழந்தையைப் பற்றி எவ்வளவு எவ்வளவு கனவுகள் கண்டிருப்பார்கள். இப்படியிருக்கும் போது அவன் போதைப் பொருளுக்கு அடிமையாகி சமூகத்தின் அவப்பெயருக்கும் ஆளாகி வீட்டு மூலையில் ஒன்றுக்கும் இயலாதவனாக படுத்துக் கிடக்கிறானே அப்போது அந்த பெற்றோரின் மனநிலை எவ்வளவு பாடுபடும். இதனால் தற்கொலை செய்து கொண்ட பெற்றோர்களின் எண்ணிக்கை தான் எண்ணிலடங்குமா? போதைப் பொருள் கிடைக்காத சந்தர்ப்பங்களில் தங்கள் உயிரையே மாய்த்துக் கொள்ளும் சிலரும் உண்டு.

மண்ணில் பிறக்கும் போது எந்தக் குழந்தையும் நல்லதே. ஆனால் அது நல்லவனாவதும், கெட்டவனாவதும் அன்னை வளர்ப்பினிலே என்று சொல்லுவார்கள். அது போல தன் குழந்தையை வைத்தியனாக்கவேண்டும், பொறியியலாளனாக்க வேண்டும் என்று ஒரு தாய் நினைக்கிறாளே. ஏன் எவரும் தன் குழந்தையை நல்ல மனிதனாக ஆக்குவதைப் பற்றி சிறிதும் சிந்திப்பதில்லை. சிறுவயதிலிருந்தே பிள்ளைகளுக்குக் கடவுள் பக்தியையும், ஆன்மீக சிந்தனைகளையும் ஊட்டி வளர்க்க வேண்டும். "கடவுளிடம் உண்மையான பக்தி வைப்பவன் வாழ்க்கையில் நெறி தவற வாய்ப்பேயில்லை" என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் கூறியிருக்கிறார். பிள்ளைகளைக் கல்வி கற்க வைப்பதோடும், அவர்களின் அடிப்படை தேவைகளைப் பூர்த்திசெய்து வைப்பதோடு மட்டும் பெற்றோரின் கடமை முடியவில்லை. தினமும் அவர்களுக்காக சிறு நேரத்தை ஒதுக்கி பிள்ளைகளுடன் மனம்விட்டு உரையாட வேண்டும். அப்போது தான் அப்பிள்ளையின் மனதிலிருக்கும் ஆசாபாசங்களையும்,

உணர்வுகளையும் பெற்றோர் அறிய முடியும். இவ்வாறு வளர்க்கப்படும் பிள்ளைகள் போதைப் பொருளுக்கு மட்டுமல்ல வேறெந்த தீய செயலுக்கும் அடிமையாகாது. மற்றையது, ஒரு பிள்ளை சேரும் நண்பர்கள் பற்றியும் பெற்றோர் கவனத்தில் கொள்வது நன்று. போதைப் பொருள் பாவனை இவ்வாறு சமூகத்தில் காணப்பட நண்பர் குழாம்களின் பழக்கமும் காரணம். நண்பர்களில் ஒருவனுக்கு போதைப் பாவனையிருந்தால் அது அவனிடமிருந்து மற்றவர்களுக்கும் பரவி விடும். இவ்வாறு தான் இளைஞர்கள் நாசமாகிறார்கள். இன்றைய இளைஞர்கள் சமூகத்தில் மிக்க விழிப்புணர்வுடன் இருப்பது நல்லது. இவர்களே நாட்டின் நாளைய தலைவர்கள். இன்றைய இளைஞர்கள் போதைப் பொருள் பாவனையால் சோர்ந்து விட்டால் நாளை இந்நாட்டை கட்டியெழுப்பப் போகிறவர் யார்? ஆகவே இளைஞர்களே விழித்திருங்கள். உங்கள் தாய்க்கும், தாய்நாட்டுக்கும் பெருமை தேடித் தாருங்கள். பெருமை தேடித்தராவிடினும் தீய செயல்களால் அவப்பெயரை ஏற்படுத்தாதீர்கள். இளைஞர்களாகிய நாமும் இப்போதைவஸ்து பாவனையை இப்பூவுலகில் இருந்து முற்றாக ஒழிப்பதற்கு எம்மால் இயன்ற செயல்களை செய்வதோடு, அதற்குத் துணையிருக்கமாறு எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திப்போமாக.

P. பிரசன்னா
டி. எஸ். சேனாநாயக்க கல்லூரி

பாடசாலைகளுக்கிடையிலான போட்டியில்
மேற்பிரிவில் முதலிடம் பெற்ற கட்டுரை

மனித நேயம்

"அரிது அரிது மானிடனாய்ப் பிறப்பது அரிது"

என்று ஔவையார் மனித பிறப்பினைப் பற்றி கூறுகின்றார். ஒருவனுக்கு உடல் அழகுகள் அழகல்ல. உள அழகுகளே அழகு. இதை புரிபவரோ அரிதிலும் அரிது. உள அழகுகளில் ஒன்றே இம்மனித நேயம். மானுடன் இன்னொரு மானுடனை, மற்ற உள அழகுகளில் வசப்படுத்தி, புரிந்து, அவரோடு இயைந்து செல்வதே மனித நேயமாகும். அதாவது அன்பு, கருணை, பொறுமை, சமத்துவம் போன்ற உள அழகுகளால் மற்றவரைக் கவர்ந்து நடப்பதே ஆகும்.

அறிவில் முதிர்ந்தோர் மனித நேயத்தை அடிப்படையாகக் கொண்டே மானுடன் ஒரு "சமூக பிராணி" என வரையறுத்தார்கள். இவ்வாக்கியமே தலைப்பின் விளக்கத்தை மனதில் செதுக்கிவிடும். உலகத்தில் மனித நேயம் சகல இடங்களிலிருந்தும் காணப்படுகின்றது; ஆனால் அதன் அளவே சொற்பம். அதைக் காண்பது கண்கூடு. அரிதாகக் கிடைக்கப் பெற்ற அருமருந்தாகிய மானுட ஜீவ வாழ்வினை மனச்சாட்சியின் படி நேயமான வழிகளில் ஈடுபடுவர் இருப்பினும் அவர்களைப் பாற்கிண்ணத்தில் விழுந்த விஷமாக மாற்றி விடுவதே வஞ்சகர்களின் நியமம். வஞ்சகர்களின் தீயவலையில் வீழ்ந்த நல்லவர்களும் தீயவர் ஆகுவது தீயவர்களின் சூழ்ச்சிகளை அறியாமலே!

இன்று உலகளாவிய ரீதியில் பார்க்கும் போது எத்தனை எத்தனையோ அவலங்கள். செவிகளால் கேட்டும், கண்களால் பார்த்தும், குருடுகளாகவும் ஊமைகளாகவும் நடித்து, காதும் கண்ணும் கேட்கவும் பார்க்கவும் மறுக்கிறது. இதற்குக் காரணம் சிறுபான்மையினராகிய நாங்கள் எம் உடலின் நரம்புகளால் போட்டு வைத்த மனவலை. ஆனால் எதிர்காலத்தில் பான்மையினர் என்ற சொல் மானிட அகராதியிலே இல்லாமல் போய்விட வேண்டும் என்பது என் கடவுள் பிராத்தனை.

இன்று ஆண்களுக்கு சமம் பெண்கள் என்றும் தாயானவள், தமக்கையானவள், மென்மையானவள், மெழுகு போன்று தன்னை உருக்கி ஒளி தருபவள் என்று உதட்டளவில் கூறி உலகை ஏமாற்றுகின்றார் ஆண்கள். கூறி முடிந்த மறுகணத்திலே சீதையாக இருக்கும் பல கன்னியர்களை காமம் எனும் வெறியால் சிதைத்து சின்னாபின்னமாக்குகின்றர்களே இந்நவீன உலக போலி இராமர்கள். மனித நேயத்துடன் அவன் இருப்பானேயானால் பெண்ணைத் தொடும் போது அம்மா அவனுக்கு ஊட்டிய உள அன்பு மனக்கதவைத் தட்டி தொடாதே என்று கூறியிருக்கும். ஆனால் அவனது இதயமோ இரும்பு. பின் அப்பெண் வீதியில் போகும்போது "சும்மா வாயை மென்னுபவர்களுக்கு அவல் கிடைத்தது போல" பழிச்சொல்லால் பறைசாட்டி அவளை தீய வழிக்கே செல்ல வழிகாட்டிகளாகத் திகழ வைக்கும் மனிதரிடம் ஏது மனித நேயம். சில இராமர்களை சீதையோடு வாழவிடாது சில பெண்கள் வீதியில் நின்று

விபச்சாரம் நடத்துவது கேவலத்திலும் கேவலம். புராண காலத்துப் பெண்களுடன் நவீன காலத்துப் பெண்களை ஒப்பிட்டால், அவ்வொப்பிட்டு உவமை இயலை இயற்றிய தொல்காப்பியருக்கே அவமானமாகப் போய்விடும்.

இன்று எங்கு சென்றாலும் அநியாயம் தலைவிரித்து ஆடுகிறது. இருக்கின்றவர்கள் இல்லாதவர் இடம் கொடுப்பதே நேயம். இருக்கிறவர் இருக்கிறவருக்கு விருந்து, மருந்து அளிப்பது பிச்சை. இல்லாதவருக்கு அளிப்பதே தருமம். பணம் பாதாளம் வரை பாயும் என்பது உண்மை தான். அரச நிறுவனம், அனைத்து சமூக, பொருளாதார பொதுப்பணி நிலையங்கள் அனைத்திலுமே பணம். பாதாளம் வரை பாயும் பணம் இலஞ்சமாக இவ்விடங்களுக்குப் பாயக் கூறவா வேண்டும். பணத்தாலேயே மனிதனை அளவிடுகின்ற காலத்தில் மனித நேயம் இருட்டறையில் இட்டு இறுக மூடப்பட்டு விட்டது. கனவுகளை எல்லாம் மனதில் சுமந்தபடி செல்லும் எத்தனையோ மானுடர்கள் வதைக்கப்படுகின்றார்கள். இது பொலிஸ் நிலையத்திலோ சரி வேலை தேடிச் செல்லும் நிருவனங்களிலோ சரி, வெளிநாட்டில் பணிபுரியும் வீடுகளிலோ சரி எண்ணிலடங்காத நினைத்துக்கூடப் பார்க்க முடியாத வதைகள்.

அண்மைக் காலங்களில் வெளிநாட்டு மோகத்திலும் குடும்பக் கஷ்டத்திலும் தொழில் புரியச் சென்ற பெண்ணின் சிறுநீரகங்களை அறுவை சிகிச்சை மூலம் அகற்றி விற்றல், நெருப்பு வைத்துக் கொலை செய்தல், ஆண்களைப் போதைவஸ்து, தீயவழிகளுக்கு அடிமையாக்குதல் என்று எவ்வளவே அல்லல்கள். அவர்களுக்கு மனம் தான் இல்லையா? அல்லது இருந்தும் இயங்கவில்லையா? இன்று கண்ணிய தொழில் என்று கூறுகின்ற ஒருசிலரைத் தவிர அனைத்து கண்ணிய தொழில் புரிபவர்களும் கண்ணியமமாக தீய வழிகளிலேயே தமது அரும்பதவிகளைப் பயன்படுத்துகின்றார்கள். இவர்களுக்காக கண்ணிய தொழில் பட்டம் வைத்தவரே ஒரு வஞ்சகனாக இருந்திருப்பாரோ? யாரறிவார்.

இளம் பச்சைக் குழந்தைகளைக் கடத்தி அவர்களிடமிருக்கின்ற உறுப்புக்களைக் களவெடுப்பது மனித நேயமா? அவர்களுக்கு ஏன் குழந்தைகள் இல்லையா? எப்படி மனம் இடம் கொடுக்கும் இப்படிப்பட்ட காரியத்தை செய்ய என்று கேட்டாலும் கேள்விக்கு பதில் பரலோகத்திலா?

மனித நேயமாக வாழ்பவர்களை செல்வாக்கு என்ற எருமை மோதி அழுக்குகள் என்ற மனித நேயமற்ற காரியத்திற்குள் வீழ்த்திவிடும். இன்று நடக்கின்ற இவ்வளவு அநியாயங்களுக்கும் விடிவு என்பது எப்போது கிடைக்கும் என்று, மனிதர்கள் ஏங்கி ஏங்கி நித்தமும் கண்ணீரும் கம்பலையுமாக அலைகிறார்களே. கடவுளே எம்மை ஒரு நல்ல உலகத்திற்கு மாற்றிவிடு. இது எனது மட்டுமல்ல அனைத்து நல்ல மனது படைத்தவர்களின் மனதுக்குள்ளேயே இருந்து நெரிக்கின்ற அவா. மனித 'நேயத்தை மானுட ஜீவனிடம் புகுத்த ஒரு மருந்து ஊசி இல்லையா? அனைவரும் மனித நேயத்துடன் வாழ்கின்ற ஓர் உலகத்தை எம் உள்ளங்களிலே படைப்போம். அது உலக உள்ளங்களிடையே பரவும்.

க. பரமேஷ்வரன்
பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி

With Best Compliments

from

STYLE TEXS

Dealers in Textiles, Readymade Garments
Fancy Goods & Gift Items

110, Justice Akbar Mawatha
Colombo 2

With Best Compliments

from



ANTONY TRAVELS SERVICE

Air Ticketing for all Airlines
Visa Formalities
Travels and Tour Operators

108/1/6, Sea Street, Colombo 11
Tel : 389156, 389157 Fax : 389158
E-mail : antony4@slt

With the Best Compliments

of

RLT

Rod Lanka Trade

The House for Quality Diamond Wheels.
Dealers in Hardware
Importers of All Kinds of Grinding Wheels, Diamond Wheels, Drill Bits,
Power Tools, Hand Tools, Welding Electrodes and Equipments

127, Bandaranaike Mawatha, Colombo 12
Tel : 447899 Fax : 074-618747

With Best Compliments

from

DYNAMIC WHEELS

Specialized Dealers in
New, Unregistered Registered and Recondition Vehicles

❑ Leasing Facilities Arranged ❑ Part Exchange Considered

39, Hospital Road, Kolubowila
Tel : 712075, 074-203248

With the Best Compliments

of

PREMIER IMPORTS & EXPORTS

Importers of Food Stuffs

#44, 4th Cross Rtreet, Colombo 11, Sri Lanka
Tel: 380131, 380130,074-712296
Tel/Fax : 074-716443
Email : gipl@ panlanka.net / gnanamim@sltnet.lk

With Best Compliments

from

Mylon Traders (Pte) Ltd.

Importers, Exporters, General Merchants & Commission Agents

No. 225,Dam Street, Colombo 12
Tel: 445563, 321422
Fax: 074- 715443

Partner :
KRISHNA STORES
163, Colombo Street, Kandy
Tel : 08-234204, 08-224522

With the Best Compliments

of



கலை விழா கொண்டாடும்
கொழும்பு றோயல் கல்லூரி

தமிழ் மாணவர்கட்கு

அன்புடன் நல்லாசி கூறுவது
நிருபதன் - ஸ்ரீறேசா
ஆண்டு 9R

With Best Compliments

from



Lanka Steel Centre

General Hardware Merchants and Importers

316 A, Old Moor Street
Colombo 12
Tel : 320104, 334957
Fax : 472490

With the Best Compliments

of

COLOMBO PAINT CENTRE

DEALERS IN SPRAY PAINT HOUSEHOLD PAINT AND HARDWARE
SPECIALIST IN CAR COLOUR MIXING AND MATCHING

FREE DELIVERY FOR PURCHASES OVER Rs. 10,000/= WITHIN CITY LIMITS

63, Union Place, Colombo 2, Sri Lanka
Tel : 436815-305422 Fax : 074-715306
Tlx : 22201 Nepcom CE

DELIVERY STORES
8, Sir Henry De Mel Mawatha, Colombo 2
Tel : 343816

With Best Compliments

from

ARANCO MARKETING HOUSE

Importers, Exporters, Consumer items, Groceries
Miscellaneous Items, Traders and Transporters.

Head Office : 75, I.B.C. Road, Colombo 6, Sri Lanka
Tel : 01-580557 Fax : 074-513068
E-mail : aranco@wow.lk

Stores : 73, Rajasinghe Road, Colombo 6
Tel : 01 500767

Branch : 295, Galle Road, Colombo 6
Tel : 01 589372

With the Best Compliments

of

Toolmax Centre

Importers, General Hardware Merchants

22-2/4, Quarry Road
Colombo 12, Sri Lanka
Tel : 458993

With Best Compliments

from

Das

With Best Compliments

from

NEW MOON

Service Begins Here

New Moon Steel

327/B, Old Moor Street, Colombo 12

Tel : 345873, 344060, 074-716234, 440959

Fax : 074-716235

E-mail : NMOON@wow.lk

With the Best Compliments

of

Sowbaghya Wet Grinder

Good Value

Distributors (Pvt) Ltd.

267, Sea Street, Colombo 11
Tel : 432599, 435842

Branch :
536, R. A. De Mel Mawatha
Colombo 3
Tel : 581479

With the Best Compliments

of

Nithyaa's Textiles

Dealers in Textiles. Specialist in Sarees

S-168, Main Street
(Off Khan Clock Tower)
Colombo 11

With Best Compliments

from

அருஜினா ஜுவலரி අරුජිනා ජුවෙලරි

ARRUJINA JEWELLERY

Collection of fine Genuine Jewellery

36, Galle Road, Dehiwala
Telephone: 716028

With the Best Compliments

of

New Rest House

14, Circular Road
Negombo
Telephone : 031- 22299

With Best Compliments

from

GNANAM IMPORTS (PVT) LTD.

79, 5th Cross Street
Colombo 11
Tel: 449255, 439334, 441944

With the Best Compliments

of

NIMALI PRINTERS

New Bus Stand
Anuradapura

With the Best Compliments

of

Vimal Motors

Make Your Car Smile

We undertake

- Diagnosing of Defects
- All Mechanical Repairs
- Overhauling of Petrol & Diesel Engines
- Accident Damages (Insurance Claim)
- Body Corrosion Work
- Spray Painting
- Interior Cleaning
- Maintenance Service
- Vehicle Valuations
- Electronic Tune Up

55/3, Walter Gunasekara Mawatha
(Weli Para, Opposite Tec Sri Lanka), Nawala
Tel : 806240
Fax : 688588, 806240 Hotline : 071-773766

With the Best Compliments

of

Cader Stores

102/1, Wolfendhal Street
Colombo 13

With Best Compliments

from

G. R. S. Printers

308, Wolfendhal Street
Colombo 13
Tel: 388552

With the Best Compliments

of

M. Aravinth

&

K. Rohaan

(Year 9 Q)

With Best Compliments

from

Ajantha Hardwares (Pvt) Ltd.

Importers & General Hardware Merchants

420, Old Moor Street, Colombo 12, Sri Lanka

Tel : 423342 Fax : 435121

With Best Compliments

from

SHRI VIDHIE INSTITUTE

G.C.E. (O/L)

Maths - A. Muraleetharan
Science - M. Baskaran
Tamil - V. Santhakumar
English - S. Sivam
Social Studies - A. Kiritharan
Commerce - A. Saravanan

G.C.E. (A/L)

Chemistry - S. Selva
Combined Maths - V. Rajaratnam
Physics - A. Muraleetharan
Biology - M. Baskaran

ஆண்டு 1 தொடக்கம் (G. C. E) A/L வரையான வகுப்புகள் நடைபெறுகின்றன.

140, Vivekananda Hill, Colombo 13
Tel : 075-362748

With the Best Compliments

of



Bag Point

Dealers in Ladies Hand Bags, School Bags,
Rain Coats, Jackets, Winter Coats,
Long Over Coats and All Kinds of Travel Goods

162, 1st Cross Street
Colombo 11
Tel : 074-710510

With the Best Compliments

of

V. Ajeenthan
Year 8R
Royal College

With Best Compliments

from



New Kesavan Book Stall

52, Dunbar Road, Hatton
Telephone : 051-22977

For your Requirements of English, Tamil and Sinhalese Books, on any subject
Also Books and Magazines published in India and Sri Lanka
Telephone, and Photocopy services available

With the Best Compliments

of



AZEEZ & SONS (PVT) LTD.

Government Contractors

17, Second Cross Street, Colombo 11
137, New Bullers Road, Colombo 4
Tel: 329915, 325794, 329578

With Best Compliments

from

Print King

Best impressions, Royal service

62/5/11, Katukurunda Watta, Mawaramandiya, Kadawata
Tel: 976388, 976336 Fax: 976336
E-mail: printking@eureka.lk

பாடசாலைகளுக்கிடையிலான போட்டியில்
கீழ்ப்பிரிவில் முதலிடம் பெற்ற சிறுகதை

இருவர்

ஒரு பசுமையான கிராமம். அக்கிராமத்தில் எங்கே பார்த்தாலும் பச்சைப் பசேலென வயல் வெளிகள். நான் முந்தி நீ முந்தி என்று விரைந்து ஓடும் வாய்கால் நீர். ஒரு பக்கம் பார்த்தால் கோவில் மணி எல்லோரையும் வரவேற்கும் முகமாக ஓயாது அடித்துக் கொண்டிருந்தது. இன்னொரு பக்கம் பார்த்தால் சின்னஞ்சிறு குழந்தைகளில் இருந்து முதியோர் வரை அவர்களது வேலைகளுக்கு களைப்பின்றி ஓடுகிறார்கள். இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த அந்தக் கிராமத்துக்கே தலைவனாக, நிழலாக, நித்திரை செய்வதற்கு உகந்ததாக, அரட்டை அடிப்பதற்காக எதைச் செய்தாலும் தாங்கிக் கொள்ளும் அந்த அரசமரத் திண்ணையிலே அமர்ந்து கொண்டிருந்தார்கள் அந்த இருவர்.

அவர்களின் பிற்கால வாழ்க்கையை ஒரு பட்டியல் போட்டு இருவரும் மாறி மாறிப் பேசிக் கொண்டு சந்தோஷப்பட்டுக் கொண்டு இருந்தார்கள். பாவம்! அந்த இருவர். அவர்களின் வாழ்க்கை ஒரு விபரீதமாகவும், திருப்பு முனையாகவும் அமையப் போகிறதென்று அவர்களுக்குத் தெரியாது போலும்.

ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மணி நேரமும் அவர்கள் இதே சிந்தனையில் தான் இருந்தார்கள். அவர்களது பெற்றோர்களுக்கோ, உறவினர்களுக்கோ, அவர்களது எதிர்கால வாழ்க்கைக்கோ அவர்கள் எதையுமே சேர்த்து வைக்கவில்லை. அந்த இருவரும் வீதியில் போகும் ஒவ்வொரு மனிதரையும் கேலி செய்து கொண்டு, சிரித்துக் கும்மாளம் அடித்துக் கொண்டு அவர்களது பொழுதைக் கழித்தார்கள். அவர்களது உறவினர்களோ அல்லது குடும்பத்தினரோ "சும்மா வெட்டிப் பேச்சு பேசிக்கொண்டு இப்படித் திண்ணையில் இருக்கின்றீர்களே ஏதாவது வேலை செய்யக்கூடாதா?" என்று கேட்டு விட்டால் போதும். அப்பப்பா சொல்லவா வேண்டும். தகாத சொற்களில் எல்லோரையும் திட்டி விடுவார்கள் அந்த இருவர். இதை ஒவ்வொரு நாளும் பார்த்துக் கொண்டிருக்கும் அந்த ஊர் தபால்காரர் இவர்களுக்கு ஒரு நல்ல பாடம் படிப்பிக்க வேண்டும் என்று நினைத்தார்.

அன்றொரு நாள் இவர்கள் திண்ணையில் உட்கார்ந்து அவர்களுடைய எதிர்காலக் கனவைக் கண்டு கொண்டிருக்கும் பொழுது திடீரென ஒரு சிறுவன் ஓடி வந்து "அண்ணா அண்ணா உங்கள் இருவருக்கும் ஏதோ கடிதம் வந்திருக்கிறது" என்று சொன்னது தான் தாமதம் யார் அனுப்பி இருப்பார்கள்; எதற்காக இருக்கும்; நம்மை அலட்சியப்படுத்துவதற்காக யாரோ செய்த சதியோ என்று எதுவுமே சிந்திக்காமல் அந்தக் கடிதத்தைப் பிரித்துப் படித்தார்கள். அதில் அவர்கள் இருவரையும் பட்டணத்துக்கு வருமாறும், அங்கே அவர்களுக்கான வேலை, அவர்கள் படிப்பிற்கான வேலை

காத்திருக்கின்றது எனவும் எழுதியிருந்தது. பாவம்! அப்பொழுது கூட அவர்கள் சிந்திக்கவில்லை. அந்தக் கடிதத்தில் அவர்கள் வேலை செய்யப்போகும் இடத்தின் விலாசம் கூட போட்டிருக்கவில்லை. ஆனால் அவர்களுக்கோ பெரிய மகிழ்ச்சியாக இருந்தது. ஊர் முழுவதும் தம்பட்டம் அடித்துக் கொண்டிருந்தார்கள். வீட்டில் உள்ளவர்களுக்குக் கூட சந்தோஷம். அடுத்த நாளே இதோ பட்டணத்தில் தேடினார்கள், தேடினார்கள் அவர்களுக்கு வேலைக்கான இடம் கிடைக்கவேயில்லை. என்ன செய்வதென்றே அந்த இருவருக்கும் புரியவில்லை. அவர்கள் பட்டணத்துக்கு வந்து இரண்டு நாட்கள் ஆகிவிட்டன. தங்குவதற்கான இடமும் கிடைக்கவில்லை. அப்போது கூட அவர்கள் சிந்திக்கவில்லை. தொடர்ந்தும் தேடினார்கள். பல இடங்களுக்குச் சென்று பாத்தார்கள். கிடைக்கவே இல்லை. அவர்கள் இருவருக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. அவர்களது சொந்த ஊருக்குப் போக முடியவில்லை. அங்கே போனால் அவர்களுக்கு தான் வெட்கம் என்று நினைத்தார்கள். அவர்கள் இதையாவது சிந்தித்து பார்த்தார்களே. கடைசியில் இருவருமே ஒரு முடிவுக்கு வந்தார்கள்.

அந்த ஊரில் இருக்கும் ஒரு பெரிய பணக்காரரிடம் சென்றார்கள். அங்கே அவர்களுக்கு பெரிய ஆச்சரியம். எவ்வளவு அழகான அரண்மனை தெரியுமா? அவர்கள் தற்செயலாகத் திரும்பிப் பார்த்தார்கள். என்ன ஆச்சரியம் அவர்களது முகம் அந்த இருவரையும் பார்த்து சிரித்தது. உண்மையிலேயே அந்தப் பணக்காரன் சுவரில் இருப்பது பளிங்கு. ஆமாம் அந்த வீடு முழுவதும் பளிங்காலே செய்யப்பட்டு இருந்தது. அவர்களது கண்களாலேயே அதை நம்ப முடிவில்லை. கடைசியில் அந்தப் பணக்காரன் கீழே இறங்கி வந்தான். வந்தவன் ஓர் ஆசனத்தில் அமர்ந்தான். இருவரும் அவனை பார்த்தார்கள். அவனது ஆடை தங்கத்தால் ஆனது போல் மிக அழகாக ஜொலித்தது. அவன் அந்த இருவரையும் பார்த்துப் பேசினான். அவர்களும் அவர்களது சூழ்நிலையை சொன்னார்கள். அவன் அவர்களைப் புரிந்து கொண்டான். வேலை கொடுத்தான். அவன் சொன்ன வேலையெல்லாம் அந்த இருவரும் செய்தார்கள். கடைசியில் ஒருநாள் அவன் அந்த இருவரையும் பார்த்துச் சொன்னான். "இன்று இரவு இருவரும் ஒரு இடத்திற்குச் சென்று அங்கே இருப்பர்களின் கைகளில் இருக்கும் தகரப் பெட்டிகளைப் பத்திரமாக எடுத்து வரவேண்டும் ஏனென்றால் அதில் விலை மதிப்புள்ள ஆடைகள் இருக்கின்றது." சொல்லி முடிக்கும் முன்பே அவர்கள் இருவரையும் அந்த இடத்தில் காணவில்லை. அப்பொழுது கூட அவர்கள் சிந்தித்துப் பார்க்கவில்லை போய்விட்டார்கள். அவர்கள் அவர் சொன்ன மாதிரி அந்த பெட்டியை கொண்டு வரும் போது பொலிஸ் அவர்களைச் சூழ்ந்து கொண்டது. பாவம் அப்பொழுது தான் தெரிந்தது அந்த இருவருக்கும் அது விலையுயர்ந்த தங்கப் பெட்டிகள் என்று. பாவம் பிறகு என்ன செய்வது. இப்பொழுது இருவரும் கடந்த கால நினைவுகளை சிந்தித்துக் கொண்டு இருக்கின்றனர். இப்போது சிந்தித்து என்ன பயன்?

துவாரகா விஜயராஜ்
வுல்வெண்டோல் மகளிர் மகா வித்தியாலயம்

பாடசாலைகளுக்கிடையிலான போட்டியில்
மத்தியபிரிவில் முதலிடம் பெற்ற சிறுகதை

குருட்டு மனிதர்கள்

காலை நேரம். கதிரவன் கண் விழித்தான். எங்கும் ஒரே அமைதி தான் நிலவியது. தனிமையின் கண் படர்ந்து இருந்தது அந்த வேளை. நிசப்தம் என்பதை அறவே வெறுப்பவன் தான் சுரேஷ். அதிலும் அவன் மனம் தன் குடும்பத்தையே நினைத்து அழுத வேளை தனிமை, விரக்தி, வெறுப்பு, வார்த்தைகளால் விபரிக்க முடியாத உணர்ச்சிகளை மேலோங்க வைத்தது அந்த விடியற்காலை வேளை. எவரையும் கவர்ந்திழுக்கும் சூரிய உதயம் அவனுக்கு மட்டும் வெறுப்பை ஊட்டி விடுவது போலத் தென்பட்டது. கதிரவனின் ஒவ்வொரு கதிரும் மற்றவர் மேனியைத் தடவ இவனை மட்டும் ஏன் அடிக்கிறது? இவன் கண்களில் கண்ணீர் இல்லை, வார்த்தைகள் மனக் கிடங்கில் குமுறுகின்றன! ஆனால் மின்னல் போல் வெளிவர மறுப்பது தான் ஏனோ? நான் என்ன அநாதையா? அகதியா? இல்லை அருகதை அற்றவனா? என்று பல கேள்விகளைத் தனக்குத் தானே வினவி விடை கூறமுடியாது தத்தளிக்கும் இவனின் சமூக நிலை கிணற்றில் விழுந்து உயிரை மாய்க்கும் நிலையில் உள்ள ஒருவனுக்குத் துரும்பைக் கொடுத்துக் காப்பாற்றுவது போன்றது என்று கூறினால் அது மிகையாகாது.

இவனுள் அப்படி என்ன தான் இரகசியம்? ஆம்! இனப்பிரச்சனையால் பாதிக்கப்பட்டு, குடும்பம் இருந்தும் இழந்த நிலையில் வாழ்க்கையின் முக்கியமான தொன்றை இழந்து தவிக்கும் சிதைந்து போன சிறுவர்களுள் இவனும் ஒருவன்.

அந்தக் காலை நேரம் யன்னலோரம் வீசிய குளிர் காற்று அவனைச் சிலிர்க்க வைத்தது. இதில் ஆச்சரியப்படத் தான் என்ன இருக்கிறது? 'வின்டர் சீசன்' (குளிர் காலம்). அதிலும் மார்கழி மாத லண்டனின் குளிர் காலத்தை அனுபவிக்கத் தேவையில்லை; நினைத்தால் காணுமே. இவற்றையெல்லாம் பொருட்படுத்தாது சுரேஷ் தன் காரியாலத்திற்கு நடைபாதை வழியே சென்றான். அவனின் குடும்ப நினைவுகள் அவனையே சுற்றி நின்றன. அவனில் ஏதோ ஒருவகையான மாற்றம் தெரிந்தது. "என்ன இன்று இப்படி அடிக்கிறதே குளிர் காற்று. என்னில் ஏதாவது குறைபாடா?" என்று தனக்குள் நினைத்தவாறு புகையிரத நிலையத்தை அடைந்தான். அனைவரும் புகையிரதத்திற்காக வழி மேல் விழி வைத்து நின்றனர். சுரேஷும் அங்கே நின்றான். சற்றுத் தொலைவில் நிறையளக்கும் கருவி சுரேஷின் கண்களுக்குத் தென்பட்டன. "உடல் சூடும் அதிகரிக்கிறது நிறையை அளந்து பார்ப்போம்" என்றவாறு பணத்தைக் கருவியினுள் இட்டு நிறையை அளந்தான். ஒரு மாதத்திற்குள் மூன்று கிலோ நிறை குறைந்துள்ளது. ஏக்கம் மனதைச் சோர வைத்தது. இருந்தாலும் மனதைக் தேற்றிக்

கொண்டு காரியாலயம் சென்றான். அரை நாள் தான் முடிந்தது ஆனால் அவனால் இருக்க முடியவில்லை. உடனே வைத்தியசாலைக்குச் சென்றான். வைத்தியரும் பரிசோதித்துப் பார்த்து சுரேஷை இரத்தப் பரிசோதனைக்கு உட்படுத்தினார். டாக்டரின் கைகளில் பரிசோதனை முடிவுகள். கண்களில் வியப்பு. மனதில் ஏக்கம். இதனை சுரேஷ் பயம் என்று எடுப்பதா அல்லது பரிதாபம் என்று எடுப்பதா அவனுக்கே ஒன்றும் புரியவில்லை. டாக்டரின் கேள்வி "தம்பி நீங்கள் லண்டனுக்கு புதியவரா?". "ஆம்" என்றான் சுரேஷ். டாக்டர் சிறிது தயக்கம் கலந்த குரலில் "போதைப் பழக்கம் அதிலும் ஊசி மூலம் ஏற்றும் பழக்கம் உண்டா?" என்றார். சுரேஷ் சற்று அதிர்ச்சியுடன் "இல்லை ஏன் இவ்வாறு கேட்கின்றீர்கள்?" என்று கேட்டான். டாக்டரின் முகத்தில் பரிதாபம், உதடுகளில் தடுமாற்றம். அடுத்த கேள்வி என்னவென்று சுரேஷ் ஊகித்தான். என்னவென்று கூறுவது! "உங்களுக்கு விபத்தாகவும் இருக்கலாம், என்றாலும் தப்பான பெண்களுடன் தொடர்பு...." சுரேஷ் "இல்லை இல்லை.... இல்லவே இல்லை" என்று கதறியவாரே கதிரையில் சாய்ந்தான். டாக்டரின் ஆறுதலான வார்த்தைகளுக்குப் பின் "உங்களுக்கு HIV Positive அதாவது எயிட்ஸ். ஆனால் இது முதல் படி தான். நோயைக் குணமாக்க முடியாதாயினும் இன்னும் வராது தடுக்கலாம்". நாளை இந்த மருந்தை ஆரம்பிக்கலாம். ஆனால் சற்று செலவு தான் அதிகம். அடுத்த நாள் காலையும் ஆகிவிட்டது. சுரேஷின் மனம் டாக்டரின் கேள்விக்குப் பதிலளிக்க முயன்றது. ஆனால் முடியவில்லை. காணியை ஈடு வைத்து லண்டனுக்கு அனுப்பிய தந்தை, மகனின் உயர்வை எண்ணும் தாய் இவர்களுக்கு நான் என்ன சொல்லப் போகிறேன். தம்பி உயர்தரம் சித்தியடைந்து விட்டான் சந்தோஷம் தான். ஆனால் உயர் படிப்பைத் தொடர பணம்.... நான் எங்கு செல்வேன். டாக்டரின் ஆறுதலான வார்த்தைகள் மனதை சீர்படுத்தினும் மருந்துகளால் என் சாவைச் சற்று தள்ளிப் போடுகிறேன் என்கிறார்! ஐயோ! என் தங்கச்சி. அன்று அவள் விழுந்து உதிரம் வெளியேறியதால் அவளுக்கு இரத்தம் கொடுத்தேனே. அன்று என் இரத்தத்தைக் கொடுத்து அவள் உயிரை காப்பாற்றினேன் என்று நினைத்தேனே இன்று நானே அவள் உயிரைப் பறிக்கக் காரணமாகி விட்டேனே. என் குடும்ப நிலை என்னால் எங்கேயோ போய்விட்டதே என்று நினைத்தவாறு வைத்தியசாலை படுக்கையில் சிகிச்சைக்காகப் படுத்தான். டாக்டர் ஊசி ஏற்றினார். அதன் பின் என்ன நடந்தது தெரியவில்லை. பல மணி நேரத்தின் பின் கண் விழித்தான். ஐயோ! என் பார்வை என்னிடம் இல்லை. என் கண்ணைக் காணவில்லை. அந்த இடத்தில் பஞ்சு தானே கிடக்கிறது. தடவிப் பார்க்கிறான் பாதையோரம் போல் தெரிகிறது. அப்போது தான் புரிந்தது தனக்கு HIV என்று கூறி கண்ணை எடுத்து விட்டான் என்று. இவன் இனி இந்த சமூகத்தில் சிதைந்து போன சிறுசு தானே. அந்த சிதைந்து போன சிறுசை உருவாக்கிய அந்த டாக்டர், ஒருவனை சீரழித்த குருட்டு மனிதன் தானே!

S. ரேணுஜா
புனித பிரிஜட் கன்னியர் மடம்

பாடசாலைகளுக்கிடையிலான போட்டியில்
மேற்பிரிவில் முதலிடம் பெற்ற சிறுகதை

ஓயாத அலைகள்

மிக நீண்ட காலமாக தன் காதலியைச் சந்திக்கக் கீழே வராத மழை இன்று வந்து கொஞ்சிக் குலாவி உறவாடிவிட்டுச் சென்று விட்டது. காதலன் விட்டுச் சென்ற குளிர்மையான நினைவுகளோடு நிலம் சந்தோஷித்திருந்தது. அதிகாலை வேளையில் கதிரவன் வருவதற்கு அறிகுறியாக வானம் சிவப்பாடையைப் போர்த்தியிருந்தது. வெளியில் வரலாமா என எட்டிப் பார்த்து ஆராய்ந்து கொண்டிருந்தன பறவைகள். இவ்வாறு காலை நேர அதிசயங்களை இரசித்த வண்ணமிருந்தாள் வாணி. இயற்கையை இரசிக்க ஆயிரங்கண் தேவை. இந்த வாணியின் அழகைச் சொல்ல தமிழில் சொல் தேடுவது கடினம்.

கடிகார முள் காலை 6.00 மணி என்பதை அறிவிக்க அடித்த சத்தத்தில் தான் வாணி நிஜ உலகிற்கு வந்தாள். "இறைவா, இன்று செல்லும் நேர்முக பரீட்சையிலாவது, வெற்றி பெற வேண்டும்" என்று மனதினுள் பிரார்த்தித்துக் கொண்டு, மற்ற அறைத் தோழிகள் எழும்பு முன் குளியலை முடிப்பதற்கு குளியலறைக்கு ஓடினாள். வாணி குளித்து வரும் வரை வாணியைப் பற்றி ஆராய்வோம்.

இலங்கை நாட்டின் தனிப் புகழ் கொண்ட யாழ்ப்பாணத்தில் பிறந்தவள் தான் இவள். கருவை விட்டு வெளியில் வந்த வாணிக்கு தந்தையைக் காட்ட வேண்டிய தாய் மேலுலகம் சென்று விட்டாள். தாய் அணைப்பில் வளர வேண்டியவள் தந்தையின் அணைப்பில் சிறப்பாக வாழ்ந்து வந்தாள். யார் இட்ட சாபமோ? அழகான யாழ்ப்பாண பூமியைச் சுடுகாடாக்க வந்த போர் இவளின் தந்தையை இறைவனடி சேர்த்தது. அதைவிட அகதியாக இடம் பெயர வேண்டியும் ஏற்பட்டது. கல் விழுந்தால் காக்கைகள் பறந்து விடுவது போல் மக்கள் தென் பகுதி நோக்கி வந்தனர். வாணியின் தாயும், தந்தையும் காதல் திருமணம் என்பதால் இருபக்க உறவுகளும் இவளுக்கு உறவுகளில்லை. ஆகவே, தான் படித்த ஆசிரியர் மூலம் கொழும்பிற்கு வந்து தனது உயர்தரக் கல்வியை முடித்து விட்டு இப்போது வேலை தேடிக் கொண்டிருக்கிறாள்.

மிக எளிமையாகத் தன்னை அலங்கரித்துக் கொண்ட வாணி, தோழி பிரேமியிடம் சொல்லி விட்டுக் கிளம்பினாள். பஸ் பிடித்து நேர்முக பரீட்சைக்குச்

